# தமிழரசு

1-9-1990 ரூ.1





மறுமலர்ச்சி எழுத்தாளர் வ.ரா. அவர்களின் நூற்றாண்டு விழாவில் (17.8.'90), மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள், மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள், செய்தி-சுற்றுலாத்துறைச் செயலாளர் திருமதி ஜெயந்தி, இ.ஆ.ப., அவர்கள், வ.ரா. அவர்களின் துணைவியார் திருமதி புவனேஸ்வரி அம்மையார் அவர்கள்.

# இந்த இதழில்...


மண்ணின் மாந்தர் அனைவருக்கும் விடுதலை நாள் வாழ்த்துக்கள் —மாண்புமிகு முதல்வர் ... 2

விடுதலை நாள் விழா: வானொலி - தொலைககாட்சியில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை ... 4

டைனாலாம்ப் தொழிற்சாலை அடிக்கல் நாட்டு விழா ... 7

மண்டல் கமிஷன் பரிந்துரை ... 8

வ.ரா. நூற்றாண்டு விழா ... 9

அரசின் அறிவிப்புகள் ... 12

தொழில் துறையில் முதலிடம் பெற தமிழக அரசு பாடுபடுகிறது —மாண்புமிகு முதல்வர் ... 13

பாவேந்தர்க்குப் பாமாலை —கவிதைத் தொகுப்பு ... 16

மணலியில் அரோமேடிக் தொழிற்சாலை ... 18

சோதனைக் குழாய் மூலம் சாதனை ... 19

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (விளம்பரங்கள்) ... 24

கலை உலகின் ஆசான் கலைவாணர் ... 32



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

ஆவணித் திங்கள் - 16

மலர்:21 இதழ்:5

1-9-1990


இந்த இதழுடன் இலவச இணைப்பு

## சரித்திரத் திருப்பம் புதிய சகாப்தம்

மண்டல் கமிஷன் நிறைவேற்றம் குறித்து

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்

20.8.90 அன்று சட்டப்பேரவையில் தீர்மானம் கொண்டுவந்து ஆற்றிய உரை.

# மண்ணின் மாந்தர் அனைவருக்கும்

## விடுதலை நாள் வாழ்த்துக்கள்!

## முதல்வர் கலைஞர்

ஆகஸ்ட் 15 - விடுதலை நாள் வாழ்த்துக்களை விழிகளில் ஒளிபொழிய - விண்ணோக்கி உயர்ந்துள்ள நமது நாட்டுக் கொடியின் நிழலினில் நின்று, இந்த மண்ணின் மாந்தர் அனைவருக்கும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீர சுதந்திரம் வேண்டி நின்றோர், இனி வேறொன்று வேண்டுவமோ என்றுரைத்து தியாக வேள்வியின் செந்தணலில் புடம் போட்ட தங்கங்களாய்த் தம் புகழை நட்டு, என்றும் இறவாப் பெயருடன் திகழும் விடுதலைப் போர்த் தலைவர்கள், தளபதிகள், வீரர்கள் கல்லறைகளுக்கு வணக்கம் செலுத்துகிறேன்.

குளத்தில் பூத்த மலர்களைப் போல் சுதந்திரப் போர்க்களத்தில் வெட்டுண்டு சிரித்த வீரர்களின் திருமுகங்களை நெஞ்சில் பதிய வைத்து வாழ்த்திசைக்கும் இந்த நாளில்; அவர்களுக்கு நாம் காட்டவேண்டிய நன்றி - பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காப்பது தான்!

ஆனால் அந்தப் பணி; இப்போது எவ்வளவு தொல்லை சூழ்ந்ததாக ஆகிவிட்டிருக்கிறது என்பதை எண்ணிடில் புண்ணாகிறது உள்ளம்!

இந்திய ஒருமைப்பாட்டுக்கே ஓர் அறைகூவலாக காஷ்மீர், பஞ்சாப் பிரச்சினைகள் உருவெடுத்து நாள்தோறும் வன்முறைகள் பெருகிடக் காண்கிறோம்! இலங்கைத் தமிழர் பிரச்சினை; நமது தமிழகத்திற்கு ஓர் அறைகூவலாகச் சல்லடம் கட்டிக் கொண்டு நிற்கிறது!

ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று பாரதியார் தீர்க்கதரிசியாகக் கவிதை தீட்டினார்! ஆனால் பாரதிதாசனோ ''இருட்டறையில் உள்ளதடா உலகம்! சாதி இருக்கின்றதென்பானும் இருக்கின்றானே!'' என்று ஏக்கப் பெருமூச்சைப் பாடலாகப் படைத்திட்டார்!

ஆம்; சுதந்திரமடைந்த 43 ஆண்டுகளுக்குப் பின்னரும் சாதிக் கலவரம் நின்றதா? மதப் புகைச்சல் மாய்ந்ததா? வறுமைத் தேளின் விஷக் கொடுக்கு வெட்டப்பட்டதா? வன்முறைப் பாம்பின் நச்சுப்பல் வீழ்த்தப்பட்டதா? வேதனையுடன் கிடைக்கும் விடை; இல்லை! இல்லை!! இல்லை!!! என்பது தானே!

அந்தகார இருள் விலக்கிட குடிசைக்குள் ஓர் அகல் விளக்கு ஏற்றிவைப்பது போல - இந்த

முதல் அட்டை சொல்லும் செய்தி:



மாநிலத்தின் ஒளி பெருகிடவும்; இந்திய நானிலத்தின் வலிவு பெருகி, வளம் பெருகிடவும் - மாநிலத்தில் கழக அரசும், மத்தியில் தேசீய முன்னணி அரசும், இயன்றவரையில் எண்ணிச் செயல்படுகின்றன!

*1947 ஆகஸ்டு 15* என்பதுஅன்னியரை விரட்டிக் கணக்குத் தீர்த்த நாள் என்றும் - இப்போது கொண்டாடப்படும் ஆகஸ்டு 15 என்பது நமது சாதனைகளைக் கணக்குப் பார்க்கும் நாள் என்றும், பேரறிஞர் அண்ணா குறிப்பிட்டதை இதயத் தாழ்வாரத்தில் என்றுமே உலவவிடலாம் என்பது என் தாழ்மையான கருத்து! இன்று நமது சாதனையால் இந்திய நாடு முழுவதுமுள்ள, பிற்படுத்தப்பட்ட பல கோடி மக்கள், மண்டல் கமிஷன் பரிந்துரைக்கேற்பப் பலன் பெறப்போகிறார்கள்!

எத்தனை ஆண்டுகள் இதற்காக நாம் குரல் கொடுத்தோம்! கவனிக்கப்படாமற் கிடந்த மண்டல் கமிஷன் பரிந்துரை இன்றைக்கு, கனியிடை ஏறிய சுளையாய் - முற்றல் கழையிடை ஏறிய சாறாய் - பனிமலர் ஏறிய தேனாய் - காய்ச்சுப் பாகிடை ஏறிய சுவையாய் - பிற்படுத்தப்பட்ட மக்களின் நனவாகிய கனவாய் ஆகியிருக்கிறது! இந்த வெற்றி கிட்டவும், இந்தியத் திருநாட்டில் நலிவுற்ற சமுதாய மக்களுக்கென நாடு தழுவிய அளவில் புதிய சரித்திரம் எழுதப்படவும் நமது அயராத முயற்சி காரணமாக இருந்தது என்னும் இந்த வெற்றிப் பரிசை, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வழங்கிய பிரதமர் விசுவநாத் பிரதாப் சிங் அவர்களுக்கு கோடி கோடி நன்றியைக் குவிக்கின்றோம்.

சிறை வாழ்ந்தார் செக்கிழுத்தார் - இந்தத்
தரையாண்ட வெள்ளயரை விரட்டுதற்குக்
குறை ஆயுள் பெற்றுப் பலர் கொலையும் உண்டார்
உறை மீறி வெளி வந்த கத்தி போல
உயிர் மீது ஆசையின்றிப் போர் புரிந்தார்!
அவர் பெருமை கூறுதற்கு
அணிவகுத்த இந்த நாளில்;

ஏழை எளியோர் பயன்பெற
எண்ணற்ற திட்டங்கள்!

தொழிலாளர் துயர் துடைத்திடப்
பல செயல் முறைகள்!

தொழில் வளம் பெருகிட
நாள்தோறும் நல்ல முயற்சிகள்!

மகளிர் முன்னேற்றத்திற்கும்
அவர்தம் நல்வாழ்வுக்கும்
மகத்தான புரட்சிகள்! மாபெரும்
சாதனைகள்!

அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள்
நீண்ட நாள் கோரிக்கை
நிறைவேற்றம்!
நீதித்துறை வசதி வாய்ப்புகள் கட்டடங்கள்
கிராமப்புறங்களில் தனிக்கவனம்!
கல்வித் துறையில் ஏராளமான சலுகைகள்!



**பாவேந்தர் நூற்றாண்டு:**

பொல்லா மதங்கள்
தொலைவதெந்நாள்? - தமிழ்
பொலிவதெந்நாள்!
— பாவேந்தர்

தியாகிகளுக்கு மதிப்பு, மரியாதை, மற்றும்
நினைவு போற்றும் காரியங்கள்!
நிதி உதவிகள்!
ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்
பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்,
நடுத்தரக்குடும்பத்தினர் - சமூக ரீதியாகவும்,
கல்வி அடிப்படையிலும் தொழில் கல்வியில்
பெற்றுள்ள சமூகநீதி உரிமைகள்!
சுதந்திரத்தின் உண்மைப் பொருள் விளங்கிட
இப்படி உழைக்கிறோம் எனினும்;

இவற்றுக்கிடையே நமது இதயம் பிளக்கும் செய்தியாக இலங்கைத் தீவிலிருந்து தமிழ் ஈழ மக்கள் விமானக் குண்டு வீச்சுக்குத் தப்பி உடைமைகளையிழந்து, ஓட்டாண்டிகளாக - தமிழகத்தில் அடைக்கலம் புக, சுமார் எழுபதாயிரம் பேர் வந்துள்ளனர். அவர்கள் 70 ஆயிரம் பேருக்கு இன்று சுதந்திர நாளில் தமிழக அரசு வேட்டிகள், சேலைகள், சீருடைகள் வழங்குகிறது;

எனினும்;
அவர்தம் கண்ணீர் துடைக்கப்பட்டு -
மீண்டும் தமிழ் ஈழத்தில் அமைதி நிலை
நாட்டப்பட - அந்த அமைதியும்,
நிரந்தரமானதாக அமைந்திட -

மத்திய அரசு எடுக்கும்
நடவடிக்கைகளுக்காகக்
காத்திருக்கிறோம்! ஏற்ற நடவடிக்கை
எடுத்திட மத்திய அரசை வலியுறுத்துவோம்!
அவர்தம் துயர் தீரத்துணை நிற்போம்!
அந்தத் தமிழ்ச் சகோதரர்கள்
இன்று தணல் வீழ் புழுக்கள்!
நாளை;
அந்தத் தமிழர்கள் நம்மால்
தப்பிப் பிழைத்தனர் எனும்
நல்ல நேரத்தை உருவாக்கிட;
இந்த நாளில் சூளுரைப்போம்!

வணக்கம்.

— *15.8.90* அன்று, கோட்டை கொத்தளத்தில் நாட்டுக் கொடி ஏற்றிவைத்து ஆற்றிய உரை.

### அரசு அலுவலர்களுக்குத் தரப்படுவது போல

# சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கும் மாதந்தோறும் ரூ. 15 மருத்துவப்படி வழங்கப்படும்!

**வி**டுதலை வீரர்க்கு இந்த அரசுகள் பாராட்டளிக்கத் தவறவில்லை! அவர்களையும் அவர்களது குடும்பங்களையும் பாதுகாத்திடவும் தயங்கியதில்லை! இதோ எடுத்துக்காட்டுகள்:-

மத்திய அரசு வழங்கும் விடுதலைப் போராட்ட வீரர்கள் உதவித் தொகை பெறுவோர் 1,706 பேர்.

தமிழக அரசின் உதவித் தொகை பெறும் விடுதலைப் போராட்ட வீரர்கள் 6,681 பேர்.

மத்திய அரசு, மாநில அரசு உதவித் தொகை இரண்டையும் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் எண்ணிக்கை 4,023 பேர்.

தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்ட தியாகிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகை, கடந்த ஆண்டு ஆகஸ்டு முதல், ரூபாய் 250-லிருந்து ரூ. 350-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

மாநில அரசு உதவித் தொகை பெறும் விடுதலைப் போராட்ட தியாகிகள் அனைவரும் கடந்த ஏப்ரல் திங்கள் முதல், மாநிலத்திலே உள்ள அனைத்துப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் இலவசப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விடுதலைப் போராட்ட வீரர்கள் மறைந்தால் அவர்களது இறுதிச்சடங்கில் அந்தப் பகுதியிலே உள்ள தாசில்தார் பதவிக்கும் குறையாத அரசு அதிகாரி ஒருவர், அரசின் சார்பில் சென்று, மலர்வளையம் வைத்து, மரியாதை செலுத்தவும்- இறுதிச் சடங்குச் செலவிற்காக ஆயிரம் ரூபாய் அரசின் சார்பில் வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

பரலி சு. நெல்லையப்பர் அவர்கள் நாட்டு விடுதலைப் போராட்டத்தில் ஆற்றிய தியாகங்களுக்காக அவரது புதல்வி திருமதி பூங்கோதை அம்மாளுக்கு மாதந்தோறும் 800 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்களின் பேத்தியான திருமதி சேதுலட்சுமிக்கு அவரது தந்தை வள்ளி நாயகம் பிள்ளை அவர்களுடைய மறைவுக்குப் பிறகு சிறப்பு நேர்வாகக் கருதி கடந்த ஆண்டு மார்ச் முதல், உதவித்தொகை நீடித்து வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டு நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் விடுதலைப் போராட்ட வீரரும், அறிஞர் அண்ணா அவர்களால் ''அக்ரஹாரத்து அதிசய மனிதர்'' என்று அழைக்கப்பட்டவரும், மறுமலர்ச்சி எழுத்தாளருமான வ.ரா. அவர்களின் துணைவியார் புவனேஸ்வரி அம்மையாருக்கு கடந்த ஜூன் திங்கள் முதல் - சிறப்பு நேர்வாக மாதந்தோறும் உதவித்தொகை ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியம் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர் அல்லது அவரைச் சார்ந்தவர்கள், அரசு மருத்துவமனையிலே இலவச மருத்துவச் சிகிச்சை பெறவும் உதவி அளிக்கப்பட்டுள்ளது.

பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய இல்லத்தில் தொண்டராக இருந்த திரு வைரவன் அவர்களை அவரது நினைவாலயப் பணியாளராக 1000 ரூபாய் ஊதியத்தில் நியமித்ததும் இந்த அரசுதான்!

வீட்டு வசதி வாரியத்தால் வழங்கப்படும் குடியிருப்பு அல்லது வீட்டு மனை ஒதுக்கீட்டில் ஒரு சதவிகிதம் விடுதலை வீரர்களுக்காக வழங்கப்படுகிறது.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை அவர்களின் வருமானத்திலே

**வானொலி - தொலைக்காட்சியில் (15-8-90)**
**மாண்புமிகு முதல்வர் உரை**

சேர்த்துக் கணக்கிடக்கூடாது என்று வருமானச் சான்றிதழ் வழங்குவோருக்கு அரசின் சார்பில் ஆணையிடப்பட்டுள்ளது.

நாட்டு விடுதலைக்காக - தாய்மொழிப் பாது காப்புக்காக - வளர்ச்சிக்காகப் பாடுபடுகின்றவர் களையும் மதித்துப் போற்றும் அரசு தமிழக அரசு.

தமிழக அரசின் தலைமைச் செயலகத்திற்காக பத்து மாடிக் கட்டிடம் ஒன்று 1971-ஆம் ஆண்டு கட்டப்பட்டு - இதுவரை அதற்குப் பெயரிடப்படா மல் இருந்து - அந்தக் கட்டிடத்திற்கு விடுதலைக் கவிஞர் பெயரால் ''நாமக்கல் கவிஞர் மாளிகை'' என்று இப்பொழுது பெயரிடப்பட்டு உள்ளது.

நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட தலைவர்களின் பெயரால் பல கட்டிடங்களுக்கும் - மாவட்டங்களுக்கும் - சாலைகளுக்கும் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. உதாரணமாக இப்பொழுது நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலைக்கு ''உத்தமர் காந்தி யடிகள் சாலை'' என்றும், கத்திப்பாரா சாலைக்கு ''பண்டித நேரு சாலை'' என்றும், திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்ட ஆட்சித்தலைவர் அலு வலகக் கட்டிடத்திற்கு ''சுப்பிரமணிய சிவா மாளிகை'' என்றும், காமராஜர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்கு ''குமாரசாமி ராஜா நகர்'' என்றும் சிதம்பரனார் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்திற்கு, பெருந் தலைவர் காமராஜர் அவர்களின் தாயார் பெயர் நிலைக்கும் வகையில் ''அன்னை சிவகாமி வளாகம்'' என்றும், நேசமணி போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையத்திற்கு ''கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை'' பெயரும், திருவல்லிக்கேணி பெல்ஸ் சாலைக்கு ''பாபு ஜெகஜீவன்ராம் சாலை'' என்றும் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

விடுதலைப் போராட்ட வீரர்களை, தொடர்ந்து நினைவுகூர்ந்திடும் இந்த அரசு - சமுதாயத்தில் அழுத்தப்பட்டு - பிற்படுத்தப்பட்டு இருக்கும் மக்களின் வாழ்க்கையில் ஒளியேற்றும் வகையில் பல்வேறு திட்டங்களையும் நிறைவேற்றி வருகின்றது. மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், சீர்மரபினருக்காக இட ஒதுக்கீடு இருபது சதவிகிதமாக கடந்த ஆண்டு தனியாக ஒதுக்கிய கழக அரசு, இந்த ஆண்டு, தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் இருந்த 18 சதவிகித ஒதுக்கீட்டை - ஒரு சதவிகிதம் அதிகமாக்கி - தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டும் 18 சதவிகிதம் என்றும், மலைவாழ் பழங்குடி மக்களுக்கு தனியாக ஒரு சதவிகிதம் என்றும் ஏற்படுத்தி யுள்ளது.

இந்த ஆண்டு, மேலும் ஒரு புரட்சித் திட்டமாக- வகுப்புப் பாகுபாடின்றி - எந்த வகுப்பைச் சேர்ந்த வர்களாக இருந்தாலும் - அவர்கள் வீட்டில் இதுவரை பெற்றோரோ, உடன்பிறந்தவர்களோ பட்டதாரிகளாக ஆகாமல் இருப்பார்களேயானால் - அந்தக் குடும்பத்திலிருந்து முதன் முறையாக தொழிற்கல்வி பயில விரும்பி மனுச்செய்த மாண வர்களுக்கு நுழைவுத்தேர்வில் ஐந்து மதிப்பெண் கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பின் காரணமாக இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரியில் 212 பேர் - அந்தக் குடும் பத்திலே இதுவரை யாரும் பட்டதாரிகளே கிடை யாது என்ற நிலையிலே - இடம் பெற்றிருக் கின்றார்கள் என்பதும் -

அதைப்போலவே பொறியியல் கல்லூரியில் இதுவரை வெளியிடப்பட்ட முடிவுகளை மட்டும் வைத்துப் பார்க்கும்போது இந்த **ஐந்து** மதிப்பெண் சலுகையைப் பெற்று இடம் பெற்றிருக்கும் மாணவர் கள் எண்ணிக்கை 285 என்பதும் -

# நாட்டு விடுதலைக்காக-தாய்மொழிப் பாதுகாப்பிற்காகப் பாடுபடுகிறவர்களை மதித்துப் போற்றும் அரசு தமிழக அரசு!

சட்டக் கல்லூரி மாணவர் தேர்வினைப் பார்க்கும் போது சுமார் 60 சதவிகிதத்திற்கு மேற்பட்டவர்கள் இந்த ஐந்து மதிப்பெண் சலுகை யைப் பெற்று, தேர்வு பெற்றவர்கள் என்பதும் எந்த அளவிற்கு மகிழ்ச்சியைத் தரக்கூடிய செய்திகள் என்பதை அனைவரும் நன்றாக அறிவோம்.

மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் என்ற வரிசை யில் மூவலூர் **இராமாமிர்தம்** அம்மையார் நினைவு திருமணத் திட்டம் என்ற பெயரால் இதுவரை சுமார் 12 கோடி ரூபாய் செலவில் 24 ஆயிரம் ஏழை எளிய வீட்டுப்பெண்களுக்கு - 8ஆம் வகுப்புவரை படித்த பெண்களுக்கு - தலா 5,000 ரூபாய் வீதம் உதவி அளிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப் பேறு உதவித் திட்டம் என்ற பெயரால் இதுவரை சுமார் 2 இலட்சத்திற்கு மேற்பட்ட கருவுற்ற மகளிருக்கு, தலா 200 ரூபாய் வீதம் சுமார் 5 கோடி ரூபாய் உதவி வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் தர்மாம்பாள் விதவை மறுமணத் திட்டத்தின் கீழ், இதுவரை 254 பேர்களுக்கு தலா 5,000 ரூபாய் வீதம் தரப்பட்டுள்ளது.

அன்னை அஞ்சுகம் அம்மையார் கலப்புத் திருமண உதவித் திட்டத்தின்கீழ் இதுவரை 610 பேர்களுக்கு, தலா 5,000 ரூபாய் வீதம் உதவி வழங்கப்பட்டுள்ளது.

இத்தகைய நலத்திட்டங்கள் மாத்திரமல்ல - பெண்களுக்குச் சொத்துரிமை - அரசு நிறுவனங்களில் 30 சதவிகித வேலைவாய்ப்பு - ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு இளங்கலைப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி - தொடக்கப் பள்ளிகளில் முதல் ஐந்தாம் வகுப்பு வரை பெண்களே ஆசிரியர்களாக நியமனம் போன்றவை பெண்களுக்காக, கழக அரசு இந்த 19 மாத காலத்தில் மேற்கொண்ட சாதனைகளாகும்.

கடந்த ஒன்றரை ஆண்டுகளில் 4 இலட்சத்து 20 ஆயிரம் இலவச வீட்டு மனைப்பட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளன.

கழக அரசு இவ்வாறு பணியாற்றும் நிலையிலே மத்திய அரசிடம் நம்முடைய தேவைகளை அவ்வப்போது எடுத்துக்கூறி, அவைகளைப் பெறுவதிலும் பின்தங்கவில்லை என்பதற்குச் சில சான்றுகள்....

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் தமிழ்நாடு அரசுக்குத்தரவேண்டிய உரிமத் தொகை 1956லிருந்து தரவேண்டுமென்று தமிழக அரசின் சார்பில் பலமுறை பல ஆண்டுகளாக கோரிக்கை வைக்கப்பட்டது. 1976ஆம் ஆண்டு முதல், அந்த நிறுவனத்திற்கு இலாபம் கிடைத்தும் நமக்கு உரிமத்தொகை கிடைக்கவில்லை (Royalty). ஆனால் இந்த அரசு மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக, தேசிய முன்னணி அரசு இப்பொழுது 30 கோடி ரூபாய் உரிமத்தொகை தர ஒப்புக் கொண்டுள்ளது.

மத்திய தொகுப்பிலிருந்து தமிழ்நாட்டிற்கு வழங்கப்படும் அரிசி கடந்த ஆண்டு குறைவாக வழங்கப்பட்டதற்கு மாறாக - தேசிய முன்னணி அரசு ஏற்பட்ட பிறகு மாதந்தோறும் 75 ஆயிரம் டன் அரிசி நமக்கு வழங்கப்படுகிறது. அதன் காரணமாக குடும்ப அட்டைதாரர்களுக்கு 12 கிலோ அரிசி என்பது தற்காலிகமாக 17 கிலோ அரிசி என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

காவிரி நீர்ப்பங்கீட்டுப் பிரச்சினையில் நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டும் என்று நாம் கேட்ட கோரிக்கை - இப்போது தேசிய முன்னணி அரசிலே தான் நிறைவேறியுள்ளது.

மத்திய ரயில்வே அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள் முன், நான் வைத்த கோரிக்கைகளை எல்லாம் உடனடியாக ஏற்றுக் கொண்டு, செங்கற்பட்டு - திண்டிவனம் இரட்டை வழி ரயில்பாதை, சென்னை கடற்கரையிலிருந்து சேப்பாக்கம் வரை அதிவேக ரயில் போன்ற திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமென்று அறிவித்திருக்கிறார்.

மூன்று நாட்களுக்கு முன் சென்னை வந்திருந்த மத்திய அமைச்சர் குருபாதசாமி அவர்கள் - 1,356 கோடி ரூபாய் முதலீட்டில் அரோமாடிக் தொழிற்சாலை தமிழகத்திலே அமைக்கப்படும் என்ற இனிய செய்தியை வெளியிட்டிருப்பதையும் அனைவரும் படித்திருப்பீர்கள்.

அம்பேத்கர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அவருடைய திருவுருவத்தை ஒரு ரூபாய் நாணயத்திலே வெளியிட வேண்டுமென்று நான் விடுத்த கோரிக்கையும் மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது.

இப்படி, பல்வேறு கோரிக்கைகளை, தொடர்ந்து நிறைவேற்றித் தருகின்ற அரசாக இன்றுள்ள தேசீய முன்னணி அரசு விளங்குகின்றது.

மாதந்தோறும் இந்த ஆட்சி - ஒரு புதிய தொழிற்சாலையைத் தொடங்குமென்று நான் தெரிவித்ததற்கு மேலாகவே கடந்த இரண்டு மாத காலத்தில் மாத்திரம் நான் ஏழு தொழிற்சாலைகள் தொடங்கப்படும் நிகழ்ச்சிகளில் பங்கேற்றிருக்கிறேன் என்பதே - எந்த அளவிற்கு இந்த அரசு தொழில் வளத்தைத் தமிழகத்திலே பெருக்கிட பாடுபட்டு வருகிறது என்பதற்கு, தக்க சான்றாகும்.

மின் வெட்டே இல்லாத தமிழகத்தை பல ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் காணக் கூடிய நிலையை நாம் உருவாக்கியிருக்கிறோம்.

இந்த நல்ல நாளில் விடுதலைப் போராட்ட தியாகிகளை நினைவுகூரும்வகையில் ஒரு அறிவிப்பை செய்ய விரும்புகிறேன்.

அரசு அலுவலர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 15 ரூபாய் மருத்துவப்படி வழங்குவது போல சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கும் வழங்க வேண்டுமென்ற அவர்களுடைய கோரிக்கை ஏற்கப்பட்டு - இனிமேல் அந்த தியாகிகளுக்கும் மாதந்தோறும் பதினைந்து ரூபாய் மருத்துவப் படியும் சேர்த்து வழங்கப்படும்.

இவற்றுக்கிடையே, நமது இதயம் பிளக்கும் செய்தியாக இலங்கைத் தீவிலேயிருந்து தமிழ் ஈழ மக்கள் விமானக் குண்டு வீச்சுகளுக்குத் தப்பி உடமைகளையிழந்து, ஓட்டாண்டிகளாக - தமிழகத்தில் அடைக்கலம் புக சுமார் எழுபதாயிரம் பேர் வந்துள்ளனர். அவர்தம் கண்ணீர் துடைக்கப்பட்டு மீண்டும் தமிழ் ஈழத்தில் அமைதி நிலை நாட்டப்பட - அந்த அமைதியும் நிரந்தரமானதாக அமைந்திட - மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்காக நாம் காத்திருக்கிறோம்!

அவர்தம் துயர் தீர துணை நிற்போம்!

அந்தத் தமிழ்ச் சகோதரர்கள் இன்று தணல் வீழ் புழுக்கள்! நாளை; அந்தத் தமிழர்கள் நம்மால் தப்பிப் பிழைத்தனர் எனும் நல்ல நேரத்தை உருவாக்கிட, இந்த நாளில் சூளுரைப்போம்!

வணக்கம்!

**பாவேந்தர் நூற்றாண்டு:**

**இன்பம் எனப்படுதல் - தமிழ்**
**இன்பம் எனத்தமிழ் நாட்டினர் எண்ணுக!**

# டைனா லாம்ப்ஸ் தொழிற்சாலை அடிக்கல் நாட்டு விழாவில் மாண்புமிகு முதல்வர்

**மா**ண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்-கும்மிடிப் பூண்டி 'சிப்காட் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டில் உள்ள 'டைனா லாம்ப்ஸ் அண்ட் கிளாஸ் ஒர்க்ஸ்' தொழிற்சாலைக்கு, 17.8.90 அன்று காலையில் அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (டிட்கோ) கூட்டுத் துறை நிறுவனமான இந்தத் தொழிற் சாலையைத் துவக்க ரூ.43.5 கோடி செலவாகும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இத்தொழிற்சாலையின் மூலம் 400 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், சில பேர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

இத்தொழிற்சாலையைத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்துடன்- திரு. ஒபுல்ரெட்டி மற்றும் அவரைச் சார்ந்தவர்கள் கூட்டாக நிறுவு கிறார்கள்.

அமெரிக்காவைச் சேர்ந்த 'கார்னிங் கம்பெனி'யுடனும், இங்கி லாந்தைச் சேர்ந்த 'சேல் டில்நே தொழில்துறைக் கம்பெனி'யின் 'பேடலக்ஸ்' பிரிவுடனும் கூடி, தொழில் நுட்பக் கூட்டுறவுடன் இந்தத் தொழிற்சாலை செயல்படும். ஒரு கோடி ஒளிமிக்க டியூப் லைட்டு களும், ஒன்றரைக் கோடி பல்புகளும் ஆண்டுதோறும் இங்கே தயாரிக்கப் படும்.

**விழாநாள் விவரம்**

'டைனா லாம்ப்ஸ் அண்ட் கிளாஸ் ஒர்க்ஸ்' தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டும் விழாவுக்கு வந் திருந்தோரை- தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் டைனா லாம்ப்ஸ் அண்டு கிளாஸ ஒர்க்ஸ் லிமிடெட் நிறுவனங்களின் தலைவர் திரு. க.வெங்கடேசன் இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார். 18 மாத காலத்தில் இத்தொழிற்சாலை கட்டி முடிக்கப்படும் என்று அப்போது அவர் தெரிவித்தார்.

இத்தொழிற்சாலையின் நிறுவன இயக்குநர் திரு. ஒபுல்ரெட்டி, இத் தொழிற்சாலை பற்றிய சிறப்புக் குறிப்புகளை வழங்கினார்.

அரசு தலைமைச் செயலாளர் திரு. எம்.எம். இராஜேந்திரன் இ.ஆ.ப. அவர்கள் தமது வாழ்த்துரை யின்போது- ''கும்மிடிப் பூண்டியில் உள்ள தொழிற்சாலைகளிலெல் லாம் இது பெரியதாக அமையும். மற்ற மாநிலங்களைவிடத் தொழில் வளர்ச்சிக்குத் தமிழகமே அதிகமான சலுகைகளும், ஊக்கமும் அளித்து வருகிறது'' என்று தெரிவித்தார்.

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. க.சுந்தரம் அவர்கள் பேசுகையில், '' விரை வில், இந்தியாவிலேயே தமிழகம் தொழில்வளர்ச்சியில் முதலிடம் பெறும்'' என்றார்.

திரு. மதுராந்தகம் ஆறுமுகம், தொழில்துறைச் செயலர் திரு. பூரண லிங்கம் இ.ஆ.ப., சட்டமன்ற உறுப் பினர்கள் திரு. வேணு, திரு. பழனிச் சாமி ஆகியோரும் இவ்விழாவில் கலந்துகொண்டார்கள்.

**முதல்வர் உரை**

டைனா லாம்ப்ஸ் அண்டு கிளாஸ் ஒர்க்ஸ் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

''நாங்கள் ஆட்சிப் பொறுப் பேற்ற நேரத்தில் ஏற்கெனவே நூற்றி ஐந்து இடங்களை பின்தங்கிய இடங் களாக அறிவித்தோம். அந்த இடங் களில் தொழில்களைத் தொடங் கினால் அதற்கு அரசு உதவிகரமாக இருக்குமென்று குறிப்பிடப்பட்டா லும்கூட அந்த நூற்றி ஐந்து இடங் களிலே ஒரு முப்பது நாற்பது இடங் களில் தொழில் தொடங்க யாரும் முன்வரவில்லை.

''எப்படிப் பிற்படுத்தப்பட்ட சமுதாயம் திருப்தியடையாமல் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயம் ஒன்று தேவையென்று சொல்லி அதற்கான இடஒதுக்கீடுகளைப்பெறு கிறார்களோ அதைப்போல இந்த நூற்றி ஐந்து இடங்களிலே கூட பின் தங்கிய, மிகவும் பின்தங்கிய என்று இடங்களை வகுத்து- நூற்றி ஐந்து இடங்களிலே முப்பது இடங்கள் என்று அறிவித்து ,அங்கு தொடங்கப் படுகின்ற தொழில்களுக்கெல்லாம் மற்ற இடங்களுக்குத் தருவதைவிட அதிகமான சலுகைகளைத் தருவ தென்றும் நாம் முடிவெடுத்தோம்.

''அப்படி மிகப் பின்தங்கிய வட்டங்களில் தொடங்குகின்ற தொழில்களுக்கு ஐந்தாண்டுகளுக்கு விற்பனை வரிவிலக்கே அளிக்கப் படுகிறது. அவர்கள் விற்பனை வரியே கட்டத் தேவையில்லை.

''பின்தங்கிய வட்டங்களில் ஒன்பதாண்டுகளுக்கு விற்பனை வரி தள்ளி வைக்கப்படுகிறது.

''ஐம்பது கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்கிற புதிய தொழில்கள் எதுவாயினும் அது எந்த இடத்திலே ஆரம்பிக்கப்பட்டாலும் அவர்களுக்கும் ஒன்பதாண்டுகளுக்கு விற்பனை வரி வசூலிப்பது தள்ளி வைக்கப்படு கிறது என்று அறிவிக்கப்பட்டிருக் கின்றது.

''அது மாத்திரமல்ல, கடந்த நிதிநிலை அறிக்கையிலே மிக முக் கியமாகத் தமிழ்நாட்டிலுள்ள எல்லா பொருட்களுக்கும் விற்பனை வரி யிலே ஒரு புரட்சிகரமான மாறு தலை நாம் கொண்டு வந்திருக்கின் றோம். அதுதான் பலமுனை விற்பனை வரி என்றிருந்த நிலையை மாற்றி எல்லாப்பொருட்களுக்கும் ஒருமுனை விற்பனை வரிதான் என்று கொண்டு வந்து ,ஒரு பெரிய புரட்சியை வணி கத்துறையிலே நாம் நடத்திக் காட்டி யிருக்கின்றோம்.

''இவ்வளவு சலுகைகளும் தரப் படுவது தொழில்கள் வளர வேண்டும் என்பதற்காக; யாரோ ஒரு தொழில திபர் வளர வேண்டுமென்பதற்காக அல்ல!''

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசினார்.

விழா முடிவில் - திட்ட நிர்வாகி திரு. ஆர்.வெங்கடாசலம் நன்றி கூறினார்.

# மண்டல் கமிஷன் பரிந்துரை



மத்தியில் ஜனதா கட்சி ஆட்சி நடந்தபோது, 1977-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது மண்டல் கமிஷன்.

தாழ்த்தப்பட்டோருக்குக் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில், மத்தியில் இட ஒதுக்கீடு தருவதுபோல், பிற் படுத்தப்பட்ட மக்களுக்கும் இட ஒதுக்கீடு தரப்பட வேண்டும் என்று மண்டல் கமிஷன் பரிந்துரை செய் திருந்தது.

ஜனதா கட்சி ஆட்சி, மத்தியில் முடிந்தபின், அதன் மீது எவ்வித மேல் நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக தேசிய முன்னணி தனது தேர்தல் அறிக்கையில் 'மண்டல் கமிஷன் பரிந்துரைகளை விரைவில் நடைமுறைப் படுத்துவோம்' என உறுதியளித்திருந்தது. தேர்தலில் வென்று, மத்தியில் தேசிய முன்னணி ஆட்சி அமைத்த பிறகு, மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத் துவதில் அரசு மிகுந்த முனைப்புக் காட்டியது.

தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், மண்டல் கமிஷன் அறிக் கையை விரைவில் நடைமுறைப் படுத்த வேண்டும் என்பதை மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு.வி.பி.சிங் அவர்களிடமும், மற்ற மாண்புமிகு மத்திய அமைச்சர் பெருமக்களிட மும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார் மத்தியில் தேசிய முன்னணி அரசு அமைவதற்கு முன்பே கூட 12.5.89-இல் தமிழகச் சட்டமன்றத் திலும் அப்பரிந்துரையை விரைவில் நிறைவேற்றும்படி தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

மண்டல் கமிஷன் பரிந்துரை களைச் செயல்படுத்துவதற்கான வழி வகைகள் பற்றி ஆராய மத்திய அமைச்சர்களைக் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. அக்குழுவின் அறிக்கை அரசிடம் அளிக்கப்பட்டது.

7.8.1990 அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. வி.பி.சிங் அவர்கள், டில்லி பாராளுமன்றத் தின் இரு அவைகளிலும் மண்டல் கமிஷன் பரிந்துரையின் அடிப்படை யில் ஓர் அறிக்கையைத் தாக்கல் செய்து உரையாற்றினார்.

''மண்டல் கமிஷன் பரிந்துரை யின்படியும், மாநில அரசுகள் தயாரித் துள்ள பட்டியல்களின்படியும்- இரண்டிலும் பொதுவாகப் பிற்படுத் தப்பட்ட வகுப்பினர் என்று வரை யறை செய்யப்பட்டுள்ள அனை வருக்கும் கல்வி சமூக அடிப்படை யில் மத்திய அரசு மற்றும் மத்திய அரசின் நிறுவனங்களில் 27 சத விகித இட ஒதுக்கீடு நடைமுறைக்கு வருகிறது. இது ஒரு தொடக்கமே- முதல் கட்டமே!'' என்று அப்போது அவர் தெரிவித்திருக்கிறார். ''இந்த இட ஒதுக்கீடு, இந்திய அரசின் உயர்ந்த பதவி மற்றும் அரசுத்துறை நிறுவனங்களில் அமலாக்கப்படும்.''

''நமது அரசியல் சட்டத்தில் சமூக, கல்வி அடிப்படையில் பின் தங்கியோரைக் கண்டுபிடித்து, அவர் களது துன்பங்கள் நீக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசியல் சட்டத்தின் இந்த அடிப் படை ஷரத்துக்களே இதுவரை நிறை வேற்றப்படாமலே இருந்தன.

''இரண்டாவது பின்தங்கியோர் நலக்குழு பி.பி. மண்டல் தலைமை யில் 1979 ஜனவரி முதல் நாளன்று அமைக்கப்பட்டது; அக்குழுவின் அறிக்கை 1980 டிசம்பர் 31-ஆம் நாள் அரசிடம் அளிக்கப்பட்டு விட்டது. தேசிய முன்னணி அரசின் செயல்திட்டங்களில் இதையும் ஒன் றாகச் சேர்த்தோம். இந்த ஆண்டு ஏப்ரல் 14-ஆம் நாள் அம்பேத்கர் நூற்றாண்டு விழா நடந்தபோது, இந்த ஆண்டைச் சமூகநீதி ஆண்டாக அப்போதே அறிவித்தேன்...'' என் றெல்லாம் அன்றைய தினம் அவர் பெருமிதத்தோடு உரையாற்றியிருக் கிறார்.

மண்டல் குழுப் பரிந்துரையை நிறைவேற்றியமைக்கு வாழ்த்துத் தெரிவித்து அதற்கு மறுநாளே மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. வி.பி.சிங் அவர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 'டெலக்ஸ்' மூலம் வாழ்த்துச் செய்தியொன்று அனுப்பி னார். அதில் குறிப்பிடப்பட்டிருந்த தாவது:

''மண்டல் குழு சிபாரிசுகளை நிறைவேற்றும்படி பிற்படுத்தப்பட்ட மக்கள் வற்புறுத்தி வந்தனர். ஆனால் காங்கிரஸ் பத்தாண்டுக் காலம் அந்த அறிக்கை மீது அக்கறை காட்டாமலும், அதை நிறைவேற்ற விருப்பமில்லாமலும் இருந்தது. தேசிய முன்னணி, தேர்தல் அறிக்கை யில் கொடுத்த உறுதி மொழியின் படி, மண்டல் குழு பரிந்துரை நிறைவேற்றப்படும் என்று நேற்றுப் பாராளுமன்றத்தில் அறிவித்தது வரவேற்றுப் பாராட்டத்தக்கது

''ஏற்கெனவே மண்டல் குழுப் பரிந்துரைகளை நிறைவேற்ற வலி யுறுத்தித் தமிழகச் சட்டமன்றத்தில் தி.மு.கழகம் தீர்மானம் நிறைவேற்றி யுள்ளது. எனவே, தங்கள் அறிவிப்பு தி.மு.கழகத்திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். ஒரே குரலில் கோரிக்கை விடுத்த பிற்பட்ட மக் களுக்கும் கிடைத்த வெற்றி ஆகும். தி.மு.கழகம் சார்பாகவும், தமிழக அரசு சார்பாகவும், தங்களைப் பாராட்டி வாழ்த்துகிறேன்''!

**தொகுப்பு -பி.எல். ராஜேந்திரன்**



# வ.ரா நூற்றாண்டு விழா

"மூட நம்பிக்கையை வீழ்த்துகின்ற புயலாக- சூறாவளியாக- சண்டமாருதமாக- அக்கிரகாரத்து அதிசய மனிதராக- அண்ணாவின் நெஞ்சத்தைக் கொள்ளை கொண்டவராக- நமக்கெல்லாம் ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக- அந்தக் காலத்திலேயே சீர்திருத்தச் செம்மலாக விளங்கியவர் வ.ரா."

– மாண்புமிகு முதல்வர் கலைஞர்

மறுமலர்ச்சி எழுத்தாளர் வ.ரா. நூற்றாண்டு விழா, 17.8.90 அன்று சென்னைக் கலைவாணர் அரங்கில் மிகச் சிறப்பாக நடந்தது.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், வ.ரா. அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, நூற்றாண்டு விழாப் பேருரை நிகழ்த்தினார். வ.ரா. அவர்களின் துணைவியார் திருமதி புவனேஸ்வரி அம்மையாருக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், வ.ரா. அவர்களின் சிறப்பியல்புகளை எடுத்துரைத்தார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:

''இந்த ஆண்டு, அனைத்திந்திய அளவிலும், தமிழக அளவிலும் தமிழ்இன அடிப்படையிலும் பல பெரியோர்களுக்கு நூற்றாண்டு விழா எடுக்கும் ஆண்டாக அமைந்துள்ளது. அனைத்திந்திய அளவில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நூற்றாண்டு விழாவும், தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் கொண்டாடுகின்ற விழாவாக, கடல் கடந்து வாழ்ந்தாலும், வேறு மாநிலங்களில் வாழ்ந்தாலும் அங்கெல்லாம் கொண்டாடுகின்ற விழாவாக, புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் நூற்றாண்டு விழாவும், தாழ்த்தப்பட்ட மக்களைக்கைதூக்கி விடுவதற்காக ஆன்மீகத் துறையிலும் இரண்டாவது நந்தன் என்கின்ற அளவிற்கு நின்று போராடிய சகஜானந்தா அவர்களின் நூற்றாண்டு விழாவும், தந்தை பெரியார் அவர்களுக்குப் 'பெரியார்' என்ற பட்டத்தைச் சூட்டிய டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவும் இந்த ஆண்டு கொண்டாடப்பட்டு, அதில் கலந்து கொள்கின்ற வாய்ப்பினை நாங்கள் பெற்று இன்று அறிஞர் வ.ரா. அவர்களுடைய நூற்றாண்டு விழாவை அவருக்கு மிக நெருங்கிய நண்பராக இருந்து மறைந்த கலைவாணர் அவர்களின் பெயரால் அமைந்துள்ள 'கலைவாணர் அரங்க'த்தில் கொண்டாடுவது மிகச் சிறப்புடைய பொருத்தமுடைய ஒன்றாகும்.

''வ.ரா. அவர்கள், தந்தை பெரியாரைப் பற்றி என்ன சொன்னார் என்பதை ஏற்கெனவே நான் குங்குமத்தில் 'கலைஞர் பக்கம்' என்ற பகுதியில் எழுதிக் காட்டியிருக்கிறேன். அதில் சொல்லப்படாத - எடுத்துக் காட்டப்படாதவற்றை இங்கே பெரியாரைப்பற்றி வ.ரா. சொன்னதைச் சொல்ல விரும்புகிறேன்.

''எதற்கெடுத்தாலும், ''எங்கள் தகப்பனார், எங்கள் பாட்டனார், எங்கள் மூதாதை'' என்று அசட்டு நாடகப் பாத்திரத்தைப் போல உளறிக் கொண்டிருந்தால், தமிழர்கள் 'இக்கரை கடந்து அக்கரை' சேர்வது எக்காலம்? தனக்குத்தானே யோசிக்கும் பொறுப்பையும், திறமையையும் தமிழர்கள் உள்ளத்தில் ஓரளவு (அதைப் பெரிய அளவு என்று கூடச் சொல்லலாம்) தூண்டிய ராமசாமி நாயக்கரைப் 'பெரியார்' என்று அழைப்பதில் என்ன பிழை இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை''–சொல்லிவிட்டு, மேலும் தொடர்கிறார்:

''ஜாதிக்கொடுமை, மூட பக்தி, தீண்டாமை, வலியார் மெலியாரை வருத்தும் அசட்டுத்தனமான பரம்பரை அவலட்சணம், மனச்சாட்சியை ரப்பரைப் போல் அமைத்துக் கொள்ளும் சாமர்த்தியம், எதற்கும் சமாதானம் சொல்லும் விசித்திர ஜால வித்தை, பெண்களின் முன்னேயும் பின்னேயும் பக்கத்திலும் படுதா, கிளிப்பிள்ளை வேதாந்தம், திண்ணைத் தத்துவம், போலி மதம், பிடுங்கல் புரோகிதம் இவையும் இவை போன்றவை யாவும்

## பாவேந்தர் நூற்றாண்டு:



**சீரிய நற் கொள்கையினை எடுத்துக் காட்டச்**
**சினிமாக்கள் நாடகங்கள் நடத்த வேண்டும்;**
**கோரிக்கை பணம்ஒன்றே என்று சொன்னால்**
**கொடுமைஇதை விடவேறே என்ன வேண்டும்?**

ஒட்டைகள் என்று பெரியார் கண்டார்'' என்று சொல்லியிருக்கிறார் வ.ரா.

''அதிர்ஷ்டத்தை நம்பி வாழ்ந்தவரும் கிடையாது; உழைப்பை நம்பிக் கெட்டவரும் இல்லை''.

இது வ.ரா. அவர்களுடைய பொன்மொழி. அவர் புத்தகத்திலே எங்கேயோ ஓர் இடத்திலே எழுதியிருக்கிறார். ஆனால் நாம் எடுத்து எழுதி வைத்துக் கொள்ள வேண்டிய ஒன்று,

'அதிர்ஷ்டம் என்பது நம்மவர்களை வெகு தூரம் வரையில் சூட்சுமமாகக் கெடுத்துவிட்டது. தட்டிக் கொடுத்துத் தம்பியைக் கெடுத்தான்' என்று சொல்லுவதுண்டு. மாய அதிர்ஷ்டம் பேசி, நாம் உழைப்பை மறந்து போனோம். அதிர்ஷ்டத்தை நம்பி, அழகான நடைமுறை வாழ்வைப் பலியிட்டு விட்டோம்.''

இவ்வாறு சொல்லிவிட்டு அதிர்ஷ்டத்தை முன்னிலைப்படுத்திச் சொல்லுகிறார் பாருங்கள் எவ்வளவு அழகாக!

'அதிர்ஷ்டமே! வெள்ளைக்கார நாடுகளுக்குப் போய், அவர்களுடைய உழைப்பையும், ஊக்கத்தையும், தன்னம்பிக்கையையும் ஒரு சின்னக் கப்பலில் எங்களுக்கு அனுப்பு'; உனக்குக் கோடி நமஸ்காரம். நீ இந்நாட்டில் இல்லை என்று நாங்கள் அழுது புலம்ப மாட்டோம்!

இதுவும் 'மழையும் புயலும்' என்கின்ற நூலிலே வ.ரா. அவர்கள் எழுதியுள்ள அருமையான தத்து வந்தான்.

இப்படி மூடநம்பிக்கையை வீழ்த்துகின்ற புயலாக- சூறாவளியாக- சண்ட மாருதமாக அக்கிரகாரத்து அதிசய மனிதராக–அண்ணாவின் நெஞ்சத்தைக் கொள்ளை கொண்டவராக - நமக்கெல்லாம் ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக - அந்தக் காலத்திலேயே சீர்திருத்தச் செம்மலாக விளங்கிய வ.ரா. அவர்களுடைய நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுவது மாத்திரம் போதாது. இவைகளெல்லாம் அழகுக்காகப் படித்தவைகளல்ல. நம்முடைய இதயத்திலே பதியவைத்துக் கொண்டு நாம் நம்முடைய பயணத்தைத் தொடர்வதற்கு வ.ரா. அவர்களுடைய இந்தக் கருத்துக்கள் பயன்பட வேண்டும். அதுதான் இந்த நூற்றாண்டு விழா கொண்டாடுவதன் பயனாக இருக்க வேண்டும்!''

முன்னதாக, செய்தி சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி ஜெயந்தி இ.ஆ.ப., அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் டாக்டர் வாசவன் அவர்கள் பேசுகையில், ''மூதறிஞர் வ.ரா. முற்போக்குச் சிந்தனையாளர்; சமூக சீர்திருத்தவாதி; மிகப்பெரிய புரட்சிவாதி. அறிஞர் அண்ணா அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டு, நமக்குச் சொல்லப்பட்டவர். உப்புச் சத்தியாக்கிரகக் கைதியாக, பெல்லாரி சிறையில் இருந்தபோது அவர் எழுதிய நூல் ஒன்று இன்னும் அச்சாகாமல் இருப்பதாக அறிகிறோம். அந்தப் பணியை எழுத்தாளர் சங்கம் ஏற்றுக் கொள்ளும்'' என்றார்.

எழுத்தாளர் திரு மணியன் அவர்கள் பேசுகையில்,

''வ.ரா. பாரதியாரின் வழித்தோன்றலாக இருந்து செயல்பட்டு வந்தவர்'' என்று கூறி, வ.ரா. அவர்களின் துணைவியாருக்கு மாதம் ரூ.1000 வழங்கி வருவது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியும், வ.ரா.-வின் நூற்றாண்டு விழாவை அரசு சார்பில் கொண்டாடுவதற்குப் பாராட்டும் தெரிவித்துக் கொண்டார்.

திரு அப்துல் ஜபார் அவர்கள் பேசுகையில், ''வ.ரா. போன்றவர்கள் மீண்டும் தோன்ற மாட்டார்களா என்று ஆசைப்படுகிறேன். வ.ரா. அவர்கள் விதவை விவாகத்தை ஆதரித்தவர்; மனித உள்ளம் படைத்தவர்'' என்றார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத் தலைவர் திரு சாவி அவர்கள் பேசுகையில், ''வ.ரா. மிகப் பெரிய சீர்திருத்தவாதி. எந்த எழுத்தாளரையும் பாராட்டும் குணம் அவரிடம் இருந்தது. வ.ரா. வறுமையில் வாழ்ந்த தீர புருஷர். அவர் ஒரு புரட்சி எழுத்தாளர்; கொள்கை உறுதிப்பாடு கொண்டவர்.'' என்றார்.

திரு டி.ஆர். பாலு, எம்.பி., அவர்கள் பேசுகையில், ''தந்தை பெரியார் பிறந்த ஆண்டில்தான்.

**வ.ரா.வின் கட்டுரைகள் ஆழ்ந்த கருத்துகள் கொண்டவையாக இருக்கும். கோமாளித்தனமாக எழுதுபவையெல்லாம் அவருக்குப் பிடிக்காது! பிரச்சனைகளைச் சிந்தித்து முடிவு செய்யும் உணர்ச்சி தமிழருக்கு வரவேண்டுமானால், ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்ட கட்டுரைகளைப் படிக்கும்படி செய்ய வேண்டும்; கோமாளித்தனமாக எழுதி பிரச்சனைகளைத் தட்டிக்கழிக்கும்படி செய்யக் கூடாது என்ற உறுதியான கொள்கையுடையவர்.**

**திரு. டி.எஸ். சொக்கலிங்கம்**

அதிர்ஷ்டத்தை நம்பி வாழ்ந்தவரும் கிடையாது; உழைப்பை நம்பிக் கெட்டவரும் இல்லை. —வ.ரா.

எழுத்தாளர் வ.ரா.வும் பிறந்தார்' என்று கூறி வ.ரா.வின் சிறப்புகளை எடுத்துரைத்தார்.

மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு கே.என். நேரு அவர்கள் பேசுகையில், ''நாட்டுக்கு உழைத்த பெரியவர்களுக்கு நன்றி கூறும் முகத்தான் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விழா எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய தலைமுறை தெரிந்து கொள்ள வ.ரா. அவர்களின் கருத்துக்கள் பயன்படும்'' என்றார்.

விழாவிற்குத் தலைமை வகித்த மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு க.அன்பழகன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:


''ஒரு நல்ல கவிஞனோ எழுத்தாளனோ உருவாகிறான் என்பதைவிடப் பிறக்கிறான் என்பதே பொருத்தமாகும். ஏனென்றால்- எழுத்தாளனாகவோ, கவிஞனாகவோ ஆகவேண்டும் என்று ஆசைப்பட்டு, அப்படி உருவாக முடியாமல் போனவர்கள் பலர். எழுத்தாளர் வ.ரா. அப்படித்தான் சுதந்திரச் சிந்தனையாளராகவே பிறந்தார்; பிராமண குலத்திலே பிறந்தும் ஒரு சீர்திருத்தவாதியாகத் திகழ்ந்தார். அவர், தேசிய இயக்கத்திலே ஈடுபாடு கொண்டு, சுதந்திரப் போராட்டத்தின் காரணமாகப் பல்வேறு தொல்லைகளை ஏற்றவர்; மனிதரில் மேல் கீழ் இல்லை என்றவர்; ஆணுக்குப் பெண் அடிமை என்ற நிலை மாற்றப் படவேண்டும் என்று தமது கதை-கட்டுரைகள் மூலம் வலியுறுத்தியவர்; வாதிட்டவர்.

''1943-44-ல், பாரதியைப்பற்றி முதன் முதலாக வ.ரா. எழுதிய நூல்தான் உண்மையான பாரதியாரை உலகிற்குக் காட்டியது. மறுமலர்ச்சியாளரான வ.ரா. புதிய சிந்தனைக்கு உரிய இடம் தந்தவர். எல்லோரும் இந்த நாட்டில் ஓரினமாக வாழ வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையோடு செயல்பட்டவர். அவரது பிறந்த நாளில் நூற்றாண்டு விழாவில் பங்கேற்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.''

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு க. முத்துசாமி அவர்கள் நன்றி கூறினார்.

விழாத் தொடக்கத்தில் ராதிகாவின் தந்திரக் காட்சியும், முடிவில் நாடகமும் நடந்தது.

— நமது செய்தியாளர்.



## அறிவியல் புரட்சியில் சூப்பர் கம்ப்யூட்டர்கள்

**சூ**ப்பர் கம்ப்யூட்டர்கள் அறிவியல் துறையில் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்தி வருகின்றன.

● சூப்பர் கம்ப்யூட்டர்களை வைத்துச் சில நிமிடங்கள் பணியாற்றுவதன் மூலம், பல கோடி ஆண்டுகளுக்கு முன்னால் அண்டங்களும் விண்மீன்களும் உருவானது எப்படி என்பது குறித்து வானியல் வல்லுநர்கள் ஆய்வு நடத்த வசதி ஏற்பட்டுள்ளது.

● ஊனமுற்றோருக்குத் தேவையான செயற்கையான முழங்கால் மூட்டுகளையும், இடுப்பு மூட்டுகளையும் இந்த சூப்பர் கம்ப்யூட்டர்களை வைத்து, அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் கச்சிதமாக உருவாக்க முடிகிறது.

● இப்போது, ஆண்டுதோறும் சுமார் 2 இலட்சம் பேருக்கு செயற்கை மூட்டுகள் பொருத்தப்படுகின்றன. அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் இத்தொகை பலமடங்கு பெருகக்கூடும்.

● சூப்பர் கம்ப்யூட்டர்கள் நமது அறிவியலில் எந்த அளவுக்கு மகத்தான மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளன என்பதைப் பெரும்பாலான மக்கள் இன்னமும் உணரவில்லை என்கிறார் கார்நெல் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளரான மெல்வின் காலோஸ்.

● 'பல்சார்கள்' எனப்படும் தொலைதூர நட்சத்திரங்களிலிருந்து வரும் சமிக்ஞைகளை ஆராய்வதாக இருந்தாலும் சரி; அல்லது பூமிக்குள் ஒலி அலைகளை அனுப்பி, அதன் எதிரொலியின் அடிப்படையில் பூமியின் உட்புறத்தை ஆராய்வதாக இருந்தாலும் சரி; இதுபோன்ற சிக்கலான பணிகளுக்கு சூப்பர் கம்ப்யூட்டர்களைப் பயன்படுத்தலாம்.

● சாதாரணமாகப் பரிசோதனைக் கூடங்களில் மேற்கொள்ள முடியாத, சிக்கலான அல்லது அதிகச் செலவு பிடிக்கக்கூடிய ஆய்வுகளை நடத்துவதற்கு சூப்பர் கம்ப்யூட்டர்கள் பயன்படுகின்றன.

● பெரிய நகரங்களில் காற்று மண்டலம் அசுத்தமடைவது பற்றி ஆராய்ச்சி நடத்துவதற்கும் 'கிரே' சூப்பர் கம்ப்யூட்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன.

—அமெரிக்கத் தகவல் நிலையம்

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப்பணிகள்

★ சத்துணவு சாப்பிடுகின்ற குழந்தைகளில் முட்டை வேண்டாம் என்கின்ற குழந்தைகளுக்கு, முட்டைக்குப் பதிலாக ஊட்டச்சத்து உருண்டை வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அறிவித்தார் (26.6.90).

★ இராமநாதபுரம் நகரில் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கத் தமிழக அரசு இராம நாதபுரம் நகராட்சிக்கு ரூ.12 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது என்று அறிவித் துள்ளது (29.6.90).

★ முதல்வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியர்க்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்ததையொட்டி, தென்னார்க்காடு, செங்கை அண்ணா மாவட்டங்களில் இதுவரை 67 ஆயிரம் மாணவ மாணவியர்க்கு இலவச பஸ் பாஸ் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் அறிவித்துள்ளது (29.6.90).

★ வேளச்சேரி ஏரியின் குறுக்கே கக்கன் நகரை யும்- பிருந்தாவன் நகரையும் இணைக்கும் வகை யில் ரூ.8.9 இலட்சம் செலவில் புதிய பாலம் கட்டுவதற்கான அடிக்கல்லை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு கோ.சி. மணி அவர்கள் நாட்டினார் (30.6.90).

★ அரசுப் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு பென்சன் திட்டம் விரைவில் அமலாக்கப்படும் என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு மு. கண்ணப்பன் அவர்கள் அறிவித்தார் (30.6.90).

★ தென்னார்க்காடு மாவட்டத்தில் ரூ.500/- கோடி முதல் ரூ.1,000/- கோடி வரையிலான காகித உற்பத்தித் தொழிற்சாலை அமைக்கப்பட வுள்ளது என்றும், கரும்புச் சக்கையிலிருந்து செய்தித்தாள் காகிதம் (நியூஸ்பிரிண்ட்) தயாரிக்கும் மற்றுமொரு தொழிற்சாலை அமைக்கத் தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்றும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறி வித்தார் (5.7.90).

★ உழவர்கள், கைவினைஞர்கள் மற்றும் நெச வாளர்கள் ஆகியோர் 12 இலட்சம் பேர்களுக்குப் பலனளிக்கும் வகையில் ரூ.10,000 வரையி லுள்ள கடன்களுக்கு நிவாரணம் அளிக்க மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்த திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தீவிர முயற்சி எடுக்கப்பட் டுள்ளது என்று தமிழக அரசு அறிவித்துள்ளது (3.7.90).

★ நடப்புக் கல்வியாண்டில் 70 புதிய உயர் நிலைப் பள்ளிகளை ஏற்படுத்தவும் ஏற்கெனவே இருந்து வரும் 40 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றவும் தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது என்று மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் திரு க.அன்பழகன் அவர் கள் அறிவித்தார் (4.7.90).

★ வேளாண்மையில் புதிய விஞ்ஞான முறை களைத் தமிழக அரசு புகுத்தியதன் விளைவாக உணவு உற்பத்தியில் மாபெரும் சாதனை புரிந் துள்ளோம் என்று குமுளூரில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார் (11.7.90).

★ நடப்புக் கல்வியாண்டு முதல், அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்புவரை ஆங்கில போதனா மொழிக் கல்வி பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ மாண வியர்க்கு அவர்களது பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமானத்தைக் கணக்கிற்கொள்ளாமல் மாதாந்திரக் கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்து அரசு உத்திரவிட்டுள்ளது.

இதன்படி 1990-91-ஆம் ஆண்டில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் மேற்கூறப்பட்ட மாணவ மாணவியர் மாதாந்திரக் கல்விக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை (12.7.90).

★ ஐந்தாண்டுகளில் ஆதிதிராவிடர் அனைவர்க் கும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்றும் நடப்பு ஆண்டில் 40 ஆயிரம் ஆதி திராவிடக் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட் டாக்கள் வழங்கப்படும் என்றும் மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு க.சுந்தரம் அவர்கள் அறிவித்தார் (15.7.90).

★ நெசவாளர்களின் வருமானத்தைப் பெருக்கவும் தரமான துணிகள் உற்பத்திக்கு வழி வகுக்கவும் கைத்தறித் துணி உற்பத்தியைப் பெருக்கவும் கூட்டுறவு அமைப்பின் கீழுள்ள கைத்தறிகளை நவீனப்படுத்த இந்த ஆண்டு ரூ.1.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு எஸ். தங்கவேலு அவர்கள் அறிவித்தார் (15.7.90).

★ வேளாண்மைப் பொருட்கள் சார்ந்த தொழில் களுக்கான தொழிற்பேட்டை ஒன்று ரூ.30 கோடி செலவில் திண்டுக்கல் அருகிலுள்ள சிறுமலைப் பகுதியில் தொடங்குவதற்கு அரசு அனுமதி வழங்கி யுள்ளது (22.7.90).

# தொழில் துறையில் முதலிடம்பெற தமிழக அரசு பாடுபடுகிறது

## - மாண்புமிகு முதல்வர் கலைஞர்


1988-ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவர் ஆட்சியில் அன்று பொறுப்பேற்றிருந்த ஆளுநர் அவர்கள் எடுத்துக்கொண்ட தொழில் வளர்ச்சி முயற்சிகள், கடந்த இரண்டு ஆண்டுகளாக விரைவாக, வேகமாக, விவேகமாகத் தொடரப்பட்டு, இன்றைக்கு ஒரு புதிய முன்னேற்றத்தைத் தமிழகம் காணுகிறது என்கிற மகிழ்ச்சிகரமான சூழ்நிலை இங்கே நிலவுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் நான் ஆற்றிய முதல் பணி, தமிழகத்திலே உள்ள தொழில் அதிபர்களையெல்லாம் தலைமைச் செயலகத்திற்கு அழைத்து அவர்களோடு கலந்து உரையாடி, தமிழ்நாட்டில் தொழில்வளத்தைப் பெருக்குவதற்குத் தேவையான வசதிகளை, வாய்ப்புக்களை உருவாக்கித் தர இந்த அரசு தயாராக இருக்கிறது, நீங்கள் தயங்காமல் தமிழ்நாட்டில் தொழில்வளத்தைப் பெருக்க உடனடியாக முன்வாருங்கள் என்று கேட்டுக்கொண்டது தான்.

அதற்கு அடுத்தபடியாக இந்தியா முழுமையும் உள்ள 50-க்கும் மேற்பட்ட தொழிலதிபர்களை சென்னையிலே - தலைமைச் செயலகத்திலே அழைத்துப் பேசி, வெளி மாநிலங்களிலே உள்ளவர்களும் தமிழகத்தில் தொழில் துவங்க வசதி வாய்ப்புகள் செய்து தரப்படும் என்று உறுதியளித்து அவர்களும் இத்தகைய முனைப்பான முயற்சியிலே இன்றைக்கு ஈடுபட்டிருக்கின்றார்கள்.

நான் ஒரு பத்து - பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு பஞ்சாப் மாநிலத்தினுடைய முதலமைச்சர் மறைந்த குர்னாம் சிங் அவர்களால் அழைக்கப்பட்டு, அந்த மாநிலத்தைச் சுற்றிப் பார்த்தபோது, எங்கணும் சிறிய தொழிற்சாலைகள் தெருவோரங்களில், வீதிகளில் அமைந்திருக்கின்ற அரிய காட்சியைக் கண்டபோது, தமிழ்நாடும் இப்படி தொழில் வளம் குலுங்குகின்ற பூமியாக - மாநிலமாக மாறுவது எந்நாள் என்று எண்ணி, பஞ்சாப் சுற்றுப்பயணம் என்னுடைய உள்ளத்திலே உருவாக்கிய அந்த உணர்வின் அடிப்படையில் 76-வரையிலே, கடந்த காலத்திலே ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது தொழில்வளம் தமிழகத்திலே பெருகி, பல்வேறு பணிகளை அரசின் சார்பில் ஆற்றிட முடிந்தது.





இடையிலே ஏற்பட்ட தொய்விற்குப்பிறகு மீண்டும் தமிழகத்தை அது மூன்றாவது இடத்திலே இருந்து பதின்மூன்றாவது இடத்திற்குப் போனதா, பதினான்காவது இடத்திற்குப் போனதா என்கின்ற ஆராய்ச்சியில் ஈடுபடாமல் தமிழகத்தில் தொழில் வளத்தினை முதலிடத்திலே கொண்டு வந்து வைக்க வேண்டும் என்ற அந்த உணர்வோடு இந்த அரசு பாடுபட்டுக் கொண்டிருக்கின்றது.

அதற்குத் தனியார் பலரும், அந்தத் தனியார் தொழில்களிலே ஈடுபாடு கொண்டிருக்கிற தொழிலாளர் தோழர்களும், நிர்வாகிகளும் நல்ல முறையில் இன்றைக்கு ஒத்துழைக்க முன் வந்திருக்கிறார்கள்.

முன்பு ஆட்சிப் பொறுப்பிலே நான் இருந்த போதுதான் தொழில் துறையிலே ஒரு புதிய கொள்கை வகுக்கப்பட்டது.

JOINT SECTOR என்கின்ற ஒரு கூட்டு முயற்சி அன்றைக்கு வகுக்கப்பட்டு, 26 சதவிகிதம் அரசின் சார்பிலும், 25 சதவிகிதம் தனியார் சார்பிலும், மீதமுள்ள பங்குகள் பொதுமக்கள் சார்பிலும் என்று வகுக்கப்பெற்று JOINT SECTOR தொழில்கள் அன்றைக்குத் தொடங்கப்பட்டன.

இப்போது கடந்த ஆண்டில் மேலும் ஒரு கொள்கை அதிலே விரிவாக்கப்பட்டிருக்கின்றது.

ASSOCIATED SECTOR– அது JOINT SECTOR-யைப் போல 25 சதவிகிதம் அல்லது 26 சதவிகிதம் என்றில்லாமல், அரசின் சார்பில் 11 சதவிகிதம் என்கின்ற அளவிலே பங்குதாரர்களாகச் சேருவது என்பதும், அதன்மூலமாகத் தனியார்துறை பொதுவாகத் தொழில்வளம் பெருகிட அரசு ஊக்கங்களை அளித்தது என்பதும் வகுக்கப்பெற்று, இந்த இரு துறைகளும், JOINT SECTOR, ASSOCIATED SECTOR -ஆகிய இரு நிலைகளிலும் இன்றைக்கு நாம் எதிர்பார்த்த அளவிற்குப் பெரு வெற்றியைப் பெற்று வருகின்றோம்.

இந்தப் பகுதியைப்பொறுத்தவரையில், மணலி தமிழகத்தினுடைய தொழில் பட்டணமாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறது. இன்னும் அது விளங்குவதற்கு ஏற்றவகையிலே பெரிய நிலப் பரப்புகள் இங்கே இருக்கின்றன. அதன் நிலப் பரப்புகளையெல்லாம் அரசு பயன்படுத்திக் கொண்டு தொழில் வல்லுநர்களுடைய கூட்டுறவோடு இந்த வட்டாரத்திலே இன்னும் பல தொழில்களைத் தொடங்கத் தயாராக இருக்கிறது என்கிற இந்த நல்ல செய்தியை இந்த விழாவிலே நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்த சில ஆண்டுக் காலமாகக் கிடப்பிலே போடப்பட்டுக் கிடக்கின்ற அரோமெடிக் தொழிற்சாலையை விரைவிலே தொடங்கவேண்டும் என்கின்ற முயற்சி இருக்கின்றது. அதையும் JOINT SECTOR முறையிலே - SPIC நிறுவனமும், TIDCO நிறுவனமும் சேர்ந்து நடத்துவது என்கின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோம்.

## அரசின் அறிவிப்புகள்

★ இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு வரும் அகதிகள் மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு அந்தந்த மாவட்டங்களிலேயே வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படும் என்று மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு கே.என். நேரு அவர்கள் திருச்சியில் அறிவித்தார் (25.7.90).

★ துவக்கப்பள்ளி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்களின் சீரமைப்புப் பணிகளுக்கு நடப்பாண்டில் ரூ.8 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் அறிவித்தார் (24.7.90).

இந்த நேரத்திலே நான் - நம்முடைய ஆளுநர் அவர்கட்கும் தெரியும் என்றாலும்கூட, இப்படிப்பட்ட பொது நிகழ்ச்சியில் தெரியப்படுத்துவதன் மூலம் அது மத்திய சர்க்கார் செவிகளிலே விழும் என்பதற்காக இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

'அரோமெடிக் தொழிற்சாலை' தமிழகத்தில் நிறுவப்பட வேண்டும் என்கின்ற முயற்சியிலே நான் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றேன். மத்திய அமைச்சர் குருபாதசாமி அவர்களோடு தொடர்பு கொண்டிருக்கின்றேன். பிரதமரிடத்திலே பல முறை பேசியிருக்கின்றேன். இருந்தாலும் ஒரு சிறிய ஆபத்து. அதை வேறு ஒரு மாநிலமும் கேட்டுக் கொண்டிருக்கிறது. கேட்கிற மாநிலம் சாதாரண மாநிலமாக இருந்தால் பயப்பட மாட்டேன். உத்திரப்பிரதேசம் அரோமெடிக் தொழிற்சாலை அங்கே வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறது, சலீம்பூர் என்ற இடத்திலே அமைக்க வேண்டுமென்று, ஆனால் தலின்பூர் என்ற இடத்திலே அரோமெடிக் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை எழுப்புவதற்கு முன்பே அதற்கான Letter of intend அத்தனையும் பெற்றுத் தயாராக இருக்கிற மாநிலம் தமிழ்நாடு என்பதை இந்த மாபெரும் நிகழ்ச்சியின் மூலமாக மத்திய அரசிலே உள்ளவர்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

உத்திரப்பிரதேசத்தினுடைய வாதம்- எங்களுக்குத்தான் தரவேண்டும் என்பதாகும். நம்முடைய வாதம்- அவர்களுக்கும் கொடுங்கள், எங்களுக்கும் கொடுங்கள் என்பதாகும்.

இது பரந்த மனப்பான்மை அடிப்படையில்- தமிழனுக்கே உரிய பெருந்தன்மையோடு வைக்கப்படுகின்ற வாதம் என்பதைப் பெருந்தன்மைக்கு மதிப்பளிக்கின்ற பிரதமர் வி.பி.சிங் அவர்கள் நிச்சயமாக உணர்ந்து செயல்படுவார் என்று நான் நம்புகின்றேன்.

சில மாநிலங்களில் மத்திய சர்க்காருடைய அனுமதியை எதிர்பார்த்து, தொழில்கள் தொடங்

## பாவேந்தர் நூற்றாண்டு:

இவ்வுலகில் அமைதியினை நிலைநாட்ட வேண்டின்
இலேசுவழி ஒன்றுண்டு; பெண்கள் ஆடவர்கள்
எவ்வகையும் தாழ்த்துவதை விட்டொழிக்க வேண்டும்
தாய்மையினை இழித்துரைக்கும் நூலும்ஒரு நூலா?

— பாவேந்தர்

கப்பட்டு விடுகின்றன. நாம் கொஞ்சம் கட்டுப்பாட்டிற்கு எப்போதும் மதிப்பளிப்பவர்கள். பிறகு வரும் அனுமதி என்று தொழில்களை ஆரம்பித்து விடலாம். இருந்தாலும் கட்டுப்பாட்டிற்கு மதிப்பளிக்கின்ற காரணத்தினால் மத்திய அரசினுடைய அந்த அனுமதிக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றோம்.

இந்த நிகழ்ச்சியின் மூலமாகவே இந்தக் கருத்தின் அடிப்படையில் உடனடியாக மத்திய அரசு அரோமெடிக் தொழிற்சாலையைத் தமிழகத்திலே இந்தப் பகுதியிலே தொடங்குவதற்கான அனுமதியை விரைவிலே வழங்கும் என்று எதிர்பார்க்கின்றேன். வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கான முயற்சிகளில் நான் ஈடுபடுகிற நேரத்தில்- தொழிலில் இன்றைக்கு மிகவும் முன்னேறியிருக்கின்ற, அதுவும் குறிப்பாகச் சிறுதொழிலில் மிகவும் முன்னேறியிருக்கின்ற பஞ்சாப் மாநிலத்தைச் சார்ந்த நம்முடைய ஆளுநர் அவர்கள், இன்றைக்கு, தமிழகத்திலே ஆளுநர் பொறுப்பை ஏற்றிருக்கின்றார்கள். அவருடைய உதவியோடும் இதை நான் நிச்சயமாகச்செய்து முடிப்பேன் என்கின்ற உறுதிமொழியை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பர் ஏ.சி. முத்தையா அவர்கள் இங்கே பேசும்போது, இந்த வட்டாரத்தில் தொழில்கள் தொடங்குவதற்கு மேலும் அரசு வசதி வாய்ப்புகளை வழங்க வேண்டும். குறிப்பாகத் தொழிலுக்குப் பயன்படக்கூடிய அளவிற்கு அந்த அளவிற்காவது சுத்தப்படுத்தப்பட்ட தண்ணீரை இங்கே வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அதற்கான ஒரு தனி அமைப்பேகூட இயங்கினால் பரவாயில்லை என்றுகூட இங்கே சுட்டிக் காட்டினார். இதுபோல நல்ல யோசனைகள் நிச்சயமாக வரவேற்கப்படும்; ஏற்றுக்கொள்ளப் படும். எனவே அந்தக் கோரிக்கையும் அரசின் சார்பிலே பரிசீலிக்கப்பட்டு, விரைவில் நிறைவேற்றி வைக்கப்படும்.

தொழில்வளம் சிறக்க, பரந்த மனப்பான்மையோடு இத்தகைய கோரிக்கைகள் நிச்சயமாக நிறைவேற்றி வைக்கப்படும் என்று நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே இந்தத் திட்டத்தினுடைய சிறப்பு அம்சங்கள்- அவர்கள் எல்லாம் குறிப்பிட்டிருந்தாலும்- நானும் குறிப்பிட விரும்புகின்றேன்.

குறித்த காலத்திற்கு- ஆறு மாதத்திற்கு முன்பே இந்த நிறுவனம் தனது உற்பத்தியைத் தொடங்கியிருக்கிறது ஒரு சிறப்பு அம்சம், உற்பத்தியை ஆரம்பித்தவுடனேயே உற்பத்தித் திறனுக்கு நூறு பங்கிற்கு மேலாக உற்பத்தி செய்யப்பட்டது ஒரு சிறப்பு அம்சம். பாதுகாப்பு மற்றும் சுற்றுப்புறச் சூழல் அமைப்பில் சிறப்பானதாக இந்நிறுவனம் விளங்குவது இன்னொரு சிறப்பு அம்சம். உற்பத்திப் பொருளான லேப் உலகத்திலேயே சிறந்த பொருளாக மதிக்கப்படுகிறது இங்கே. அது மற்றொரு சிறப்பு அம்சம். உற்பத்தி தொடங்கிய முதலாவது ஆண்டிலேயே 12 விழுக்காடு பங்குதாரர்கட்கு லாபத்திலேயிருந்து வழங்கப்பட்டது மற்றொரு சிறப்பம்சம். இரண்டாவது ஆண்டு மொத்த லாபம் ரூ.18 கோடியாகப் பெற்றதும், பங்குதாரர்களுக்கு லாபத்திலே 15 விழுக்காடு அளித்ததும் மற்றொரு சிறப்பு அம்சம்.

இதை நாட்டுக்கு அர்ப்பணிக்கின்ற இந்த நல்ல நேரத்தில் இன்றைய தினம் துவங்கப்படுகின்ற திட்டங்களைப் பற்றியும் நான் சொல்ல விரும்புகின்றேன்.

ரூபாய் ஒன்பது கோடி செலவிலே, பன்னிரெண்டு மெகாவாட் மின்சாரத்தை இந்த நிறுவனம் இப்போது உற்பத்தி செய்து தொடங்கி வைக்கப்படுகிறது. இதிலே ஒரு ஒன்பது மெகாவாட் மின்சாரத்தை மாத்திரம் இந்நிறுவனம் பயன்படுத்திக் கொண்டு மூன்று மெகாவாட் மின்சாரத்தை உபரியாக மற்றவர்களிடத்தில் அளிக்கத் தயார் என்று மார்தட்டுகின்ற அளவிற்கு இந்நிர்வாகத்தில் இன்றைக்கு ஈடுபாடு கொண்டிருக்கிற நண்பர்கள் இந்த முயற்சியிலே வெற்றி பெற்றிருக்கின்றார்கள்.

எனவே ஒரு பதினைந்து கோடி ரூபாய் அளவிலே உள்ள திட்டம் இன்றைய தினம் புதியதாகத்தொடங்கப்படுகிறது.

ஏறத்தாழ ரூ.200 கோடி அளவிலான திட்டத்தை இங்கே நாட்டிற்கு அர்ப்பணிப்பதிலும், அதனோடு சேர்ந்துள்ள மற்றொரு திட்டத்தைத் தொடங்கி வைப்பதிலும் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த மகிழ்ச்சியின் அடையாளமாக- நம்முடைய கவர்னர் பெருமான் அவர்களும், நானும் இந்த நிகழ்ச்சிக்கு வந்தோம் என்பதன் அடையாளமாக- இந்தத் தொழிற்சாலையிலே வேலை செய்கிற 539 தொழிலாளர்களுக்கு இந்த விழா நிகழ்ச்சியின் அடையாளமாக அவர்களுக்கெல்லாம் ஓராண்டு ஊதிய உயர்வு வழங்கப்படுகிறது, இன்கிரிமெண்ட் தரப்படுகிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை- நிர்வாகத்திலே உள்ளவர்களின் ஒப்புதலோடு உங்களுக்குத் தெரிவித்து, இந்த இனிய விழாவிலே,உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்லவாய்ப்புப்பெற்றமைக்காக என்னுடைய இதய நிறைவை இங்கே எடுத்து வைத்து இந்த அளவில் விடைபெறுகிறேன்.

**— 7.8.90, சென்னை-மணலியில் நடைபெற்ற 'தமிழ்நாடு பெட்ரோ புராடக்ட்ஸ் நிறுவன' விழாவில் பேசியது.**

பாவேந்தர்க்குப் பாமாலை

# பாவேந்தன் பாட்டு

— கருவூர். கன்னல்

அரிமாவின் நோக்கைப்போல் நடையி ருக்கும்!
அதற்குள்ளே குறிக்கோளின் விடையி ருக்கும்!
சிரிக்கின்ற புரட்சிப்பெண் குடியி ருப்பாள்!
சீரெல்லாம் மாந்தநேயம் எட்டிப் பார்க்கும்!
நரியைப்போல் பிறர்வாழ்வைக் கெடுத்து ஏற்றம்
நடத்துகின்றார் முன்னேற்றம் கிழிந்து போகும்!
விரிவானின் மழைமேகம் களைவ தைப்போல்
விடியலுக்குச் சொற்களெல்லாம் அணிவ குக்கும்!

பெண்டுகளின் நலன்காக்க அணிதி ரட்டும்!
பெரியாரின் குறிக்கோள்கள் நிறைந்தே ஓடும்!
கண்களைப்போல் விளங்குகின்ற கல்வி வேண்டி
கவிதைகளும் எதிரொலிக்கும்! தமிழி னத்தின்
மண்ணுக்குள் வளர்த்துவிட்ட சாதி நோயை
மாய்ப்பதற்கு மருந்துகளைத் தோற்று விக்கும்
தண்ணிலவுப்பாட்டுநடை கூன்வி ழுந்த
தமிழ்நிலத்து மாந்தர்களை நிமிர வைக்கும்!

வெண்ணிலவுப் பாட்டுக்கள் தமிழைப் பாடி
வீதியெங்கும் தமிழ்வளர்க்கும்! உலக மெல்லாம்
மண்மூடிப் போனாலும் தமிழை மட்டும்
மறையாமல் காப்பதற்குத் துணைமை செய்யும்!
உண்மைகளின் ஊர்வலங்கள் நடக்கும் பாட்டில்
உலகத்தின் பொய்வேடம் களையு மட்டும்
எண்ணங்கள் தூய்மையுற வேண்டு மென்றால்
எப்போதும் பாவேந்தன் பாட்டே தேவை!



பாவேந்தர் நூற்றாண்டு

# புரட்சிக் குயில்

தூத்துக்குடி நா. புகழேந்தி

பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்பினார் - தமது
பாத்திரத்தால் புதுமைகளை நிரப்பினார்
வகுத்ததொரு நீதிநெறி உணர்த்தினார் - நமது
வாழ்க்கைமுறைக் கோணல்தனை நிமிர்த்தினார்.

மடமைதனை எதிர்த்துக்கொடி தூக்கினார் - நல்ல
மாண்புகளைக் கவிதைகளில் ஆக்கினார்
''கடமையினைச் செய் என்றே ஊக்கினார் - பொய்மைக்
கதைகளையே தூசெனவே போக்கினார்!

சாதிமத பேதங்களைச் சாடினார் - மதத்தால்
சண்டையிடும் உலகு கண்டேவாடினார்!
ஆதியிலே பிறந்ததமிழ் நாடினார் - அந்த
அழகுமொழி வாழ்கவென்றே பாடினார்!

பொதுவுடைமை வேண்டியவர்பாடினார் - மெத்தப்
பொருள்பதுக்கும் மாந்தர்தமைச் சாடினார்!
புதுமையுகம் எழுகவென்றே ஆடினார் - மக்கள்
புரட்சிகண்டு வாழ்த்துக்கவி கூறினார்!

காதலிலே ஒழுக்கத்தை ஊட்டினார் - தமிழர்
கற்புநெறி உலகில்நிலை நாட்டினார்!
சாதலிலே வீரத்தைக் காட்டினார் - மிகுந்த
தன்மானக் கதைகளையும் தீட்டினார்.

புயலாக எழுந்துபகை வீழ்த்தினார் - கொடிய
பொய்சூது வஞ்சம், நீழ் ஆழ்த்தினார்!
பெயலாக வந்துதமிழ் வாழ்த்தினார் - கவிதைப்
பொன்னேட்டில் தன்புகழை நாட்டினார்!

# பா உலகின் ஒளிச்சுடர்

— செ. பன்னீர் செல்வம்

### எடுப்பு

பாரதி தாசனடி! - அவன்
பாட்டுக்கு எழில்தந்த நேசனடி! - தோழி
... (பாரதி)

### தொடுப்பு

வீட்டுக்கு விளக்காகும் அவன்பாட்டு! - அது
நாட்டுக்கு நலந்தருந்தேன் தமிழ்ப்பாட்டு!
... (பாரதி)

### முடிப்பு

பெண்ணுக்கு உரிமைப்போர் தொடுத்தானடி! (கைம்
பெண்ணுக்கு மறுமணந்தான் கொடுத்தானடி!
மண்ணுக்குப் பொதுவுடைமை கண்டானடி! தமிழைக்

கண்ணுக்குள் பாவையெனக் கொண்டானடி!
... (பாரதி)

மாந்தரில்மா மலைபோலே வாழ்ந்தானடி! - பா
வேந்தரென மக்கள்மனம் சூழ்ந்தானடி!
தீந்தமிழ்ப்பா உலகில்ஒளிச் சுடராமடி - அவன்
ஏந்துமுளம் கரைகாணாக் கடலாமடி!
... (பாரதி)

தமிழ்வானில் கதிர்போலக் காய்ந்தானடி! - அவன்
தமிழ்ப்பாவை கரும்பெடுத்து வேய்ந்தானடி!
தமிழ்ச்சோலை நிலவாகத் திகழ்ந்தானடி - அவன்
தமிழ்த்தாயின் மடிமீது தவழ்ந்தானடி!
... (பாரதி)



# பாட்டிசைத்த குயிலே...

— ஈரோடு ப. கதிரவன்



தமிழ்க்கவிதை உலகத்தின் தலைவா உன்றன்
தாள்பணிந்தே இம்மடலை வரைகின் றேன்நான்
இமைபோல நற்றமிழைக் காத்தி ருந்தீர்
இணையற்ற அணிபலவும் தமிழன் னைக்கே
அமைத்தழகு பார்த்திருந்தீர் அன்பி னாலே
ஆருயிரை அதற்களித்தீர்; காலம் சொல்லும்
சமைத்திட்ட காவியங்கள் சான்றாய் நின்றே
சாற்றிடுமும் புகழ், பெருமை யாவும் நன்றே!

நெருப்பாற்றில் குளித்தெழுந்த உமது பேனா
நெத்தியடி பழமைக்குத் தந்த துண்டு!
துருப்பிடித்த சாதியினைத் துரத்தி ஓட்டி
தூயதாடிப் பெரியாரின் தொண்ட ரானீர்
திருப்புமுனை கவியுலகில் உமது பாட்டால்
திறம்படவே செய்வித்தீர்; காலம் வாழ்த்தும்;
ஒருகவிஞன் இனியுண்டோ உம்மைப் போலே
ஓங்குபுகழ் தமிழ்வளர்க்க; மானம் காக்க!

நீர்கண்ட தமிழியக்கக் கனவு யாவும்
நிறைவேறும் நிகழ்ச்சியினைப் பார்க்கும் போது
சீர்திருத்தக் கவியேஉம் உருவம் நெஞ்சில்
சிலையாகிச் சிரிக்கின்ற நிலையில், பொங்கும்
ஆர்வத்தில் எனைமறந்தேன்; நினைவில் நீரே
அலைமோதி நிற்கின்றீர் பாவின் வேந்தே
பார்த்தும்மைப் பேசிடவே துடிக்கு துள்ளம்
பாட்டிசைத்த குயிலும்மால் வாழும் வையம்!



# மணலியில் அரோமேடிக் தொழிற்சாலை

## மாண்புமிகு மத்திய அமைச்சர் அறிவிப்பு

**சென்**னை அருகில் மணலியில் ரூ.1356 கோடி முதலீட்டில் அரோமேடிக் தொழிற்சாலை நிறுவிட மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதாக மாண்புமிகு மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. எம். எஸ். குருபாதசாமி அவர்கள், சென்னையில் 12.8.90 அன்று செய்தியாளர் களிடம் அறிவித்தார். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வற்புறுத்தி வந்த இந்தக் கோரிக்கை வெற்றி பெற்றுள்ளது.

சென்னை வந்த மாண்புமிகு மத்தியப் பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு எம். எஸ். குருபாதசாமி அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார். அதன்பின் செய்தியாளர்களிடையே பேசிய அவர், இது குறித்து மேலும் கூறியதாவது:

''இன்று காலை தமிழக முதல்வர் கலைஞர் அவர்களைச் சந்தித்து உரையாடியது மிகவும் பயனுள்ளதாகவும், மிகவும் மகிழ்ச்சி அளிப்பதாகவும் அமைந்தது. கலைஞர் அவர்கள் எப்பொழுதுமே என்னிடம் பரிவும் அன்பும் காட்டுபவர். இன்று அவர் வழக்கம்போல் என்னிடம் காட்டிய பரிவுக்கும், அன்புக்கும், உபசரிப்புக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''மணலியில் 1356 கோடி ரூபாய் முதலீட்டில் அரோமேடிக் தொழிற்சாலை அமைய உள்ளது. பொதுத்துறை நிறுவனமான சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையும், ஸ்பிக் நிறுவனமும் கூட்டாக இந்தத் தொழிற்சாலையை அமைக்கின்றன. இதற்கான முதல் கட்ட அனுமதியை, திட்ட முதலீட்டுக் குழு வழங்கிவிட்டது. இரண்டாவது கட்ட அனுமதிக்கான ஆய்வுகள் அக்குழுவால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விரைவில் இரண்டாவது கட்ட முதலீட்டுக்கான அனுமதியும் வழங்கப்பட உள்ளது.

''மணலியில் அமைய இருக்கும் ஆலைக்கு நிதிநிலை அறிக்கை ரீதியான ஆதரவு எதுவும் தேவையில்லை. இங்கு தொழிற்சாலை அமைக்க 374 கோடி ரூபாய் அன்னியச் செலாவணி தேவைப்படுகிறது. இத்தொகை ஏற்றுமதிகள் மூலம் சமாளிக்கப்படும். இந்தத் தொழிற்சாலைத் திட்டத்தைத் துவக்குவதற்குத் திட்ட வேலைகளுக்கு முன் தேவைப்படும் பணிகளுக்காக ரூபாய் 18 கோடி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

''சென்னை எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை, ஸ்பிக் ஆகிய நிறுவனங்களுக்கிடையே உடன்பாடு ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டிருக்கிறது; தொழிற்சாலைக்கான நிலங்களைக் கையகப்படுத்தும் பணி ஏற்கெனவே துவங்கி விட்டது. இத்தொழிற்சாலைக்குத் தேவையான சுற்றுச் சூழல் துறையின் அனும்தியும், உரிய அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலைக்காகக் கூட்டு முதலீட்டாளர்கள் வெளி நாடுகளிலிருந்து தொழில்நுட்ப உதவிகளுக்காக ஒரு பங்குதாரரையும் தேர்வு செய்துள்ளனர்.

''இதில் தொழில் முதலீட்டாளர்கள் 176.28 கோடி ரூபாயும், வெளிநாட்டுக் கூட்டாளிகள் 39.90 கோடி ரூபாயும் முதலீடு செய்கிறார்கள். இதில் டெப்ட் ஈக்யூட்டி விகிதம் 3:1 என்ற விகிதத்தில் இருக்கும். இத்தொழிற்சாலை 2 லட்சம் டன் சுத்திகரிக்கப்பட்ட திரிப்தாலிக் அமிலத்தை உற்பத்தி செய்யும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கான வேலைகள், வரும் ஏப்ரல் மாதத்தில் துவங்கும்.

''எட்டாவது திட்டக் காலத்தில் இத்தகைய தொழிற்சாலை ஒன்று மட்டும் போதும் என்ற எண்ணம் இருந்தது. இரண்டு தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டத்திற்கு வகை செய்யுமாறு நான் என்னுடைய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டேன்.''

மணலியில் இத்தொழிற்சாலை அமைப்பது குறித்துப் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் ஐயப்பாடுகள் எழுந்த சூழ்நிலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. இந்தத் தொழிற்சாலை உத்திரப் பிரதேசத்தில்தான் அமைக்கப்படவேண்டும் என்று, உத்திரப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் தந்த நிர்ப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவையும் இணங்கியது.

எனினும், இத்தொழிற்சாலை, தமிழகத்தில் அமைக்கப்படவேண்டும் என்பதில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் மிகுந்த தீவிரம் காட்டினார். அண்மையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், மத்திய அரசு உத்திரப் பிரதேசத்தில் இத்தொழிற்சாலையை அமைக்க விரும்பினால், அமைத்துக் கொள்ளட்டும். ஆனால், அதே நேரத்தில் இத்தொழிற்சாலை தமிழ்நாட்டில் உள்ள மணலியிலும் அமைக்கப்படவேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தினார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் வேண்டுகோள் ஏற்கப்பட்டு 1356 கோடி ரூபாய் முதலீட்டில், மணலியில் அரோமேடிக் தொழிற்சாலை அமைகிறது என்ற செய்தியை மாண்புமிகு மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. குருபாதசாமி அவர்கள், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் வீட்டிலேயே செய்தியாளர்களின் மத்தியில் அறிவித்தார் என்பது, முதல்வர் கலைஞரின் முயற்சிக்குக் கிடைத்த வெற்றி; தமிழகத்தின் தொழில்வளர்ச்சிக்குக் கிடைத்த வெற்றியாகும்.''

அறிவியல் அற்புதம்:

# சோதனைக் குழாய் மூலம் சாதனை!

தென்னிந்தியாவில் முதன் முறையாக, சென்னை மருத்துவமனை ஒன்றில் சோதனைக் குழாய் மூலம் குழந்தை பிறந்துள்ளது.

குழந்தைப் பேறு இல்லாதவர்களின் குறையைப் போக்கிட- 'குழந்தைச் செல்வம் இல்லையே!' என ஏங்குவோரின் கனவை நனவாக்கிட அறிவியல் தந்த அற்புதம் தான், சோதனைக் குழாய்க் குழந்தை!

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி அருகே உள்ள

முதல் சோதனைக் குழாய்க் குழந்தை *1978*-ஆம் ஆண்டு இலண்டனில் பிறந்தது. *1984*-ஆம் ஆண்டு இந்தியா வில் பம்பாயில் 2-வது சோதனைக் குழாய்க் குழந்தை பிறந்தது. *1990*-ஆம் ஆண்டு தென்னிந்தியாவில் முதன்முறை யாக, சென்னையில் 3-வது சோதனைக் குழாய்க்குழந்தை பிறந்துள்ளது.



சோதனைக் குழாய் மூலம் பிறந்த குழந்தையைக் கையில் ஏந்தியுள்ளார், டாக்டர் கமலா செல்வராஜ்

சுந்தரபாண்டியபுரம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி திரு. ராமமூர்த்தி, இவரது மனைவி பொன்னாள். இவர்கள் இருவருக்குமே வயது 46. இந்தத் தம்பதியினருக்குப் பல ஆண்டுகளாகக் குழந்தைப் பேறு இல்லாமல் இருந்தது.

இந்த நிலையில்தான் திரு. ராமமூர்த்தி-பொன்னாள், தம்பதியினர் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள ஜி.ஜி. மருத்துவமனை இயக்குநர் டாக்டர் கமலா செல்வராஜ் அவர்களைச் சந்தித்தனர்.

முதலில் சோதனைக் குழாய்க் குழந்தை என்றால் என்ன? என்பதைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

பெண்ணின் கருமுட்டையையும், ஆணின் உயிரணுக்களையும் எடுத்து, தகுந்த சூழ்நிலையில் இணைய வைக்கப்படுகிறது. இணைந்து வளர்ந்த கருவை, மீண்டும், பெண்ணின் கர்ப்பப் பைக்குள் செலுத்தி அவரைத் தாய்மை அடையச் செய்யப்படுகிறது. பிறகு பிறக்கும் குழந்தையே, சோதனைக் குழாய்க் குழந்தை ஆகும்.

ராமமூர்த்தி-பொன்னாள் தம்பதியினருக்குப் பிறந்த சோதனைக் குழாய்க் குழந்தை குறித்து, இந்த மருத்துவமனை இயக்குநர் டாக்டர் கமலா செல்வராஜ் அவர்கள் கூறியதாவது:

''கடந்த மூன்று ஆண்டுகளாக, பொன்னாள் எங்கள் மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காக வந்து கொண்டிருந்தார். பொன்னாளுக்குப் பரிசோதனை நடத்தப்பட்டு, அவரது கர்ப்பப் பையில், இணைந்த கருவைச் செலுத்தி அவரது உறவினர் வீட்டில் தங்க வைத்தோம். மீண்டும் சோதனை செய்து பார்த்ததில், கர்ப்பப் பையில் கரு இணைந்து வளரத் தொடங்கியதை அறிந்தோம்.

''அதன் பிறகு எங்கள் மருத்துவமனையிலேயே தங்க வைத்து, கண்காணித்து வந்தோம். 'ஸ்கேன்' மூலம் பார்த்ததில் பெண் குழந்தை வளர்வதையும் அறிந்தோம்.''

ராமமூர்த்தி-பொன்னாள் தம்பதியினருக்கு 1.8.1990 அன்று சோதனைக் குழாய் மூலம் பெண் குழந்தை பிறந்தது.

இது குறித்து இந்தத் தம்பதியினர் கூறியதாவது:

''எங்களுக்கு 1959-ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. கடந்த 31 ஆண்டுகளாகக் குழந்தை இல்லாமல் கவலையாக இருந்தோம். எப்படியாவது ஒரு குழந்தையைப் பெற்றெடுக்க வேண்டும் என்று உறுதியாக இருந்தோம். அந்தச் சமயத்தில்தான், சோதனைக் குழாய் மூலம் குழந்தை பெறுவது என்று ஒரு முடிவுக்கு வந்தோம். குழந்தையும் நல்லபடியாகப் பிறந்துள்ளது. இப்போது நாங்கள் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை!''

மாண்புமிகு முதல்வர் அவர்கள் வாழ்த்து

சோதனைக் குழாய் மூலம் குழந்தை பிறந்த செய்தி அறிந்த, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், குழந்தை பிறந்த அன்று இரவே மருத்துவமனைக்குச் சென்று, அந்தக் குழந்தையைப் பார்த்து, தமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார். ஒரு பவுன் தங்கச் சங்கிலியையும் அக்குழந்தைக்கு அணிவித்தார்.

குழந்தைக்குப் பெயர் சூட்ட வேண்டாமா?

மருத்துவம் பார்த்த, டாக்டர் கமலாவின் பெயரையே வைக்க வேண்டும் என்று பெற்றோர்கள் விருப்பம் தெரிவித்ததால், மாண்புமிகு முதல்வர் அவர்கள், அக்குழந்தைக்குக் கமலா என்று பெயர் சூட்டினார். சாதனை புரிந்த மருத்துவமனை இயக்குநர் டாக்டர் கமலா செல்வராஜ் அவர்களையும் வெகுவாகப் பாராட்டினார்.



## தந்தை பெரியாரின் தீர்க்கதரிசனம்

தந்தை பெரியார் அவர்களின் தீர்க்கதரிசனம் அசாதாரணமானது. எதிர்காலத்தை எண்ணி தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய கருத்துரைகள் ஒரு காலத்தில் கனவுலகச் சிந்தனைகளாகக் கருதப் பட்டிருக்கலாம். ஆனால் இன்று நடைமுறையில் நம் முன்னே நடைபெறும் காட்சிகளாக அந்தச் சிந்தனைகள் மலர்ந்துள்ளன.

இதனை எண்ணியே நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர், தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து பேரறிஞர் அண்ணா அவர்கள் தொகுத்து 'இனிவரும் உலகம்' என்ற தலைப்பில் 21-3-1943, 28-3-43 'திராவிட நாடு' இதழ் களில் வெளியிட்டுள்ளார்கள்.

''பிள்ளைப் பேற்றுக்கு ஆண்-பெண் சேர்க்கை என்பது கூட நீக்கப்படலாம். ஆண்-பெண் சேர்க் கைக்கும், குழந்தை பெறுவதற்கும் சம்பந்தமில்லாமல் செய்யப்பட்டுவிடும்.''

-இவ்வாறு பெரியார் அவர்கள் கூறியது இன்று நடைமுறை நிகழ்ச்சியாக மாறிவிட்டது.

## பாவேந்தர் நூற்றாண்டு:

நீக்குகபே ராசை-தம்பி
நிகர்எவரும் ஆவார்!
போக்குசினம் தீச்சொல்-நீ
பொன் அறத்தை வாழ்த்து!
சேர்க்கும்அறம் உன்னை-ஒரு
தீங்குமற்ற வாழ்வில்!
ஊர்க்குழைக்க வேண்டும்-நீ
உண்மையுடன் தம்பி!

— பாவேந்தர்

## தொலைக் காட்சிக் கலை

**ஆசிரியர்: வெ. நல்லதம்பி**
**வெளியீடு:**

வள்ளுவன் வெளியீட்டகம்,
81, மூன்றாவது கிழக்குத் தெரு,
திருவான்மியூர், சென்னை-41.

பக்கம்: 232 (டெம்மி) விலை ரூ.35

**நூ**ற்றுக்கு 75 சதவிகிதம் இல்லங்களில் தொலைக்காட்சியைக் கண்டு மகிழும் நிலை இன்று உருவாகியுள்ளது. தொலைக்காட்சியின் மூலம் பல நாடுகள் குறித்துத் தெறிந்து கொள்கிறோம். பல்வேறு இயந்திரங்கள் குறித்து அறிந்து கொள்கிறோம். பார்வைக்கு விருந்தும் - உள்ளத்துக்கு மகிழ்வும் அறிவுக்கு ஊட்டச் சத்தும் ஒரே நேரத்தில் வழங்கும் சாதனம் தொலைக்காட்சி என்று சொல்லலாம். இவ்வளவு பயன்களையும் நம்மில் மிகப் பலருக்கு தொலைக்காட்சி எப்படி ஒளி பரப்பாகிறது என்பதோ-அதன் பேராற்றல் குறித்தோ சரிவரத் தெரியாது. அதனை விளக்குகிறது இந்த நூல்.

தொலைக்காட்சி என்றால் என்ன, அதனைப் பயன்படுத்தும் துறைகள் யாவை, ஒளிபரப்பு எப்படிச் செய்யப்படுகிறது, இந்தியாவில் தொலைக் காட்சி ஒளிபரப்பு எப்போது தொடங்கியது, தொலைக்காட்சிக் காமிராவின் அமைப்பு எப்படி உள்ளது என்பன போன்ற ஏராளமான செய்திகளை இந்நூலில் இனிய எளிய நடையில் எழுதியுள்ளார் ஆசிரியர். தொழில் நுட்பம் சார்ந்த நூல்கள் நமது தமிழகத்தில் வருவதில்லை என்னும் நிலையைப் போக்குவதற்கு இந் நூல் உதவுகிறது.

வரைபடங்கள், புகைப்படங்கள் ஆகியவை தேவைப்படும் இடங்களில் இடம்பெற்றுள்ளன. இதனால் வாசகர்கள்-நூலின் கருத்தை எளிதாக அறிந்து கொள்ள வாய்ப்பு உள்ளது.

**— எஸ். எஸ். சுந்தரம்**

## மனத்தை உழுத மகான்

**ஆசிரியர்: சேயோன்**
**வெளியீடு:**

முரளி பதிப்பகம்,
6, வசந்தா பிரஸ் சாலை,
அடையாறு, சென்னை-600 020

பக்கம்: 152 விலை ரூ.15

**நி**லத்தை உழுதால் நெல் முத்துக்கள் கிடைக்கும், மனத்தை உழுதால் சிந்தனை முத்துக்கள் கிடைக்கும் என்பதை மிக அழகாகத் தெளிவாக விளக்கிக் காட்டுகிறார் ஆசிரியர். மனத்தை உழுத அந்த




மகான்தான், மகாகவி பாரதியார். அவரை நம் மனத்தில் பதிய வைக்கிறார்.

இதேபோல், இதயத்தைத் தொடும் இனிய ஈட்டுரைகள் அடுத்தடுத்து வருகின்றன.

மணிமேகலைக் கருத்துக்கள், குரு நானக் உபதேச மொழிகள், திருநாவுக்கரசரின் தேனமுதம், ஔவைப்பாட்டியின் ஆத்திசூடி, கலிங்கத்துப்பரணியின் காட்சிகள், விவேகானந்தரின் விவேகம், பண்டைக் கால இலக்கியத் 'தூதர்கள்' இவற்றின் தொகுப்பே இந்நூல். இலக்கிய ஆர்வலருக்கு இனிய நூல்.

**— பி.வி. கிரி**

## உற்சாகமாக ஓய்வு பெறுவது எப்படி?

**ஆசிரியர்:** டாக்டர் மு. முத்துக்காளத்தி
**வெளியீடு:** கண்ணம்மாள் பதிப்பகம்,
**விற்பனை உரிமை:**

பாரி நிலையம்,
184, பிராட்வே,
சென்னை-600 108.

பக்கம்:84 விலை:ரூ.8

**அ**லுவலிலிருந்து ஓய்வு பெறுபவர்கள் ஒருவிதமான கலக்கத்துக்கு ஆளாகி வருவது இயல்பு. விதைக்கும் காலத்தில் தூங்கிவிட்டு அறுவடைக் காலத்தில் அரிவாளுடன் வயலுக்குச் செல்லும் அப்பாவிகளைப் போல, ஓய்வு எய்தும் வயது வருவதைத் தெரிந்து கொண்டும் எதிர் காலம் குறித்துத் திட்டமிடாமல் இருந்துவிட்டு ஓய்வுபெறும் நாளன்று உள்ளம் வருந்துகின்ற பெருமக்கள் இருக்கிறார்கள். அத்தகையவர்களின் கலக்கத்தைக் கலைக்கும் வண்ணம் இந்நூலை உருவாக்கியுள்ளார் ஆசிரியர். ஓய்வுபெறுபவர்களுக்கு, உளநூல் அடிப்படையில் சில உத்திகளை வழங்கி உற்சாக மூட்டுகிறார்-உரம் ஏற்றுகிறார்.

"முன்பு செலவுக்கு வருமானம் தேடினீர்கள்! இப்பொழுது வருமானத்துக்குச் செலவு செய்யுங்கள். அதிலும் மிச்சம் பிடியுங்கள்! எனக் கூறியிருப்பது நல்ல அறிவுரை ஆகும்.

ஓய்வுபெற்ற அரசு ஊழியர் ஒருவரின் ஆலோசனைகளையும் இந்நூலில் இணைந்திருப்பது பாராட்டுக்குரியது.

**—தமிழ்ப்பித்தன்**

## நெஞ்சைத் தொடும் நிலவு

**ஆசிரியர்:**
**கவிஞர் தூத்துக்குடி நா. புகழேந்தி,**
**வெளியிட்டோர்:**

புகழ்மலர் பதிப்பகம்,
144, சிவந்தாகுளம் சாலை,
தூத்துக்குடி-628 003

பக்கம்: 148 விலை ரூ.15

**எ**ளிமையான, இனிமையான நடையில் உள்ள 75 கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ள நூல் இது. இவற்றில் மரபுக் கவிதைகள் சில; சந்தக் கவிதைகள் பல. ஒவ்வொரு கவிதையிலும் ஒவ்வொரு புதிய கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

கவிதை எழுதும் விரல்களில்
கணையாழியை மாட்டுங்கள்;
கணையாழியை மாட்டியே
கவிதைப் பயிரை வளருங்கள்;

— என்று கவிதைத் தமிழ் வளர்ப்பில் இப்படி ஓர் பாடலில் தனக்குள்ள ஆர்வத்தைக் காட்டியுள்ளார், நூலாசிரியர்

## ஓமியோபதி சிகிச்சை முறை

**ஆசிரியர்: டாக்டர் கே. ராஜு**
**வெளியிட்டோர்:**

அம்புஜம் பதிப்பகம்,
25, கோர்ட் ரோடு,
மணக்காடு, சேலம்-636 007

பக்கம்: 208 விலை ரூ.30/-

'**ஓ**மியோபதி விளக்கம்-கேள்வி, பதில்' என்பதில் தொடங்கி - 'வீட்டிற்கான அவசர மருந்துகள் பட்டியல்' என்பது வரை 50 ஓமியோபதிமுறை மருத்துவக் கட்டுரைகளின் களஞ்சியமாகத் திகழும் நூல் இது. காய்ச்சல், கட்டிகள், முகப்பரு போன்ற சாதாரணப் பாதிப்புகள் மட்டுமல்ல; இரைப்பைக் கோளாறு, இருதய நோய், பால் உணர்வுக் கோளாறு போன்ற பல பெரிய விஷயங்களும் கூட நூலாசிரியரால் இதில் தொடப்பட்டுள்ளன. **— பி. எல். ஆர்.**

## அவன் ஒருவனல்ல

**ஆசிரியர்:** மாத்தளை சோமு
**வெளியீடு:**

மீனாட்சி புத்தக நிலையம்
60, மேலக் கோபுரத் தெரு, மதுரை-1

விலை:ரூ.13 பக்கம்:143

**ஈ**ழ நாட்டு மக்களை வைத்து எழுதப்பட்ட சிறுகதைகள்.

தோட்டப் பள்ளி ஆசிரியர், கிழவன் கிழவி, கல்லுடைக்கும் தொழிலாளர் என்று வித்தியாசமான கருவைக் கொண்ட சிறுகதைகள் இதில் உள்ளன.

**-என். குமாரசாமி**

# தமிழ்நாடு மின்சார வாரியம்
## பூனாச்சி சிறு புனல் மின் திட்டம்
## ஒப்பந்த அறிக்கை

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காக, கீழே குறிப்பிட்டுள்ள பணிக்கு மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் (இரு பிரிவு ஒப்பந்தம்) மூன்று நகல்களோடு மேற்பார்வை பொறியாளர்/பொதுவியல்/புனல் மின் அலுவலகம் இரண்டாவது தளம்/கிழக்கு, நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணா சாலை, சென்னை-2 என்ற முகவரியில் கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. **பணியின் பெயர்:** | பூனாச்சி (2 × 1 மெகாவாட்) சிறு மின் திட்டத்தில் பேரழுத்த நீர் குழாய்களுக்காக (Penstock pipes) எஃகு வாங்கி, அவைகளை தயாரித்து, களத்தில் பாதுகாத்து புழங்கி, நிர்மானித்து சோதனை செய்து செயல் முறைக்கு கொண்டு வந்து வாரியத்திடம் ஒப்புவித்தல். |
| 2. **ஏறத்தாழ பணியின் மதிப்பு:** | ரூ.48 இலட்சங்கள் மட்டும். |
| 3. **ஒப்பந்த வரை எண்:** | SECH. 17 |
| 4. **பிணை வைப்புத்தொகை:** | ரூ.50,000/- (ரூபாய் ஐம்பது ஆயிரம் மட்டும்) |
| 5. **ஒப்பந்தம் பெற்றுக் கொள்வதற்கான இறுதி நாளும், நேரமும்.** | 1990 செப்டம்பர் 26-ஆம் நாள் புதன்கிழமை நண்பகல் 12.00 மணி வரை. |
| 6. **தொழில் நுட்ப இனங்களுக்கான ஒப்பந்தங்கள் திறப்பதற்கான நாளும், நேரமும்.** | 1990 செப்டம்பர் 26-ஆம் நாள் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணி. |
| 7. **ஒப்பந்த வரையறை ஒன்றின் விலை** | (அனைத்து வரிகள் உள்பட) |
| தமிழ் நாட்டிற்குள்: ரூ.450/- | (ரூபாய் நானூற்று ஐம்பது மட்டும்) |
| தமிழ் நாட்டிற்கு வெளியே ரூ.500/- | (ரூபாய் ஐநூறு மட்டும்). |
| 8. **ஒப்பந்தத்தை அனுப்புதல்:** | இது இரு பிரிவு ஒப்பந்த அறிவிப்பு. ஒப்பந்தங்கள் ஒப்பந்தவரையறையில் உள்ள பகுதி ஏ.3-ன் 15-வது பிரிவில் கண்டுள்ள விதிகளின்படி அனுப்பப்பட வேண்டும். இவ்விதி முறைகளுக்கு முரணாக சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும். |

ஒப்பந்தப் புள்ளிக்காரர்களுக்கு தேவையான முன் தகுதிகள் கீழ் வருமாறு:

1. ஒப்பந்தம் கொடுப்பவர், குறைந்த பட்சம் 100 மீட்டர் நீளமுள்ள ஏறத்தாழ இதே விட்டமுள்ள நீர் அழுத்தக் குழாய் வேலையை வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்க வேண்டும்.
2. ஒப்பந்தம் கொடுப்பவர், கடந்த மூன்று வருமான ஆண்டுகளில், வருடந்தோறும் குறைந்த பட்சம் செய்து முடிந்த வேலையின் மதிப்பு (Turn-over) ரூ.40.00 இலட்சங்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

ஒப்பந்த வரையறை வேண்டுவோர், தலைமை உள் தணிக்கை அலுவலருக்கு (முதல்தளம், கே.ஆர்.ஆர். மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணா சாலை சென்னை-600 002) ஒப்பந்த வரையறைக்கான விலையை பணமாகவோ/Pay Order/D.D. வாயிலாகவோ ஒப்பந்த வரையறை எண். குறிப்பிட்டுச் செலுத்திப் பெறப்பட்ட ரசீதை இணைத்து, முழு முகவரியுடன் விண்ணப்பித்துக் கொண்டு மேற்பார்வை பொறியாளர்/பொதுவியல்/புனல் மின் அலுவலகத்தில் **27.8.1990** காலை 10.30 **மணி** முதல் **24.9.90** மாலை 5.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்த வரையின் விலைத் தொகை எக்காரணத்திற்காகவும் திரும்பத் தரப்பட மாட்டாது. அஞ்சல் வாயிலாக வேண்டுவோர் ஒவ்வொரு ஒப்பந்த வரையறைக்கும் ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்) கூடுதலாக செலுத்த வேண்டும். அஞ்சலில் அனுப்பப்படும் ஒப்பந்தவரையறை தவறிப்போனாலும், காலதாமதம் ஆனாலும் மின்சார வாரியம் பொறுப்பு ஏற்காது. ஒப்பந்த வரையறை மாற்றத் தக்கதல்ல. மூடி அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் மேற்பார்வை பொறியாளர், பொதுவியல்/புனல், 2-வது தளம், நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ஆர். மாளிகை, 800, அண்ணா சாலை, சென்னை-600 002-க்கு அனுப்பப்பட வேண்டும்.

பிணை வைப்புத் தொகையின்றி வந்து சேரும் ஒப்பந்தங்களும், குறித்த காலத்திற்கு பின்னர் வந்து சேரும் ஒப்பந்தங்களும் ஏற்கப்படாமல் விடுவதற்கு ஏதுவாகும்.

குறைந்த மதிப்பீடு கொண்ட அல்லது மற்ற எந்த ஒரு ஒப்பந்தத்தையோ ஏற்றுக் கொள்வதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னை கட்டுப்படுத்திக் கொள்ளாது. எக்காரணமும் தெரிவிக்காது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் தள்ளுபடி செய்யும் முழு உரிமை இவ்வாரியத்திற்கு உண்டு. செய்யப்படும் எந்த ஒரு விற்பனை ஒப்பந்த வரையறையில் கண்டுள்ள எந்த ஒரு நிபந்தனையையும், தேவை எனக் கருதும்போது தளர்த்தவும், கைவிடவும் உள்ள உரிமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கே உரியது.


**தலைமை பொறியாளர்/பொதுவியல்/வடிவமைப்பு**
**சென்னை-2.**

DIPR/77/NLG/90/CANCO

''எய்ப்பில்வைப் பாக வருவாய் ஐந்தொன்றை
மெய்ப்பிணி சேய்வரைவிற் கூட்டிடுக - கைப்பொருள்வாய்
இட்டிலுய் வாயிடுக்க வீங்க விழையற்க
வட்டல் மனைக்கிழவன் மாண்பு''

— இன்னிலை

''பொய்கையார்''



பொருளைத் திரட்டுவதே மனைக்குரிய தலைவன் செயலாகும். வருவாய் குறைந்தால் செலவைக் குறைக்க வேண்டும். தனக்கு வரும் வருவாயில் ஐந்தில் ஒரு பங்கை வயதான காலத்தில் நுகர்வதற்குரிய சேமநிதியாக வைத்திருக்க வேண்டும். மேலும் அப்பொருள் உடற்பிணி போக்குவதற்கும் மக்கட்கு மணம் செய்வதற்கும் பயன்படும்.

இன்றே சிறுசேமிப்பில் முதலீடு செய்து உங்கள் வருங்கால வாழ்க்கையை ஒளிமயமாக்குங்கள். உங்கள் வாழ்வில் வளம் பெறப் பல நல்ல திட்டங்கள் சிறுசேமிப்பில் உள்ளன.

- ★ தேசிய சேமிப்புப் பத்திரம் 8 ஆம் வெளியீடு
- ★ தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு 1987
- ★ பொது சேமநலநிதி
- ★ மாதாந்திர வருமானத் திட்டம்
- ★ விவசாயிகள் சேமிப்புப் பத்திரம்
  இந்திரா சேமிப்புப் பத்திரம்
- ★ அஞ்சலகக் குறித்தகால வெளியீடு
  அஞ்சலகத் தொடர்வைப்புத்திட்டம்/
  வளரும் மாத சேமிப்புத் திட்டம்

## மாவட்ட சிறுசேமிப்பு பரிசுக்கூப்பன் திட்டம் — 90

— ரூ. 500/- முதலீட்டிற்கு ஒரு பரிசுக்கூப்பன்.
— 1.6.90 முதல் 31.12.90 வரை தனிநபர்கள் முதலீடு செய்து மாருதி கார் முதல் 262 பரிசுகளில் ஒன்றை வென்றிடுங்கள். (தமிழகத்தில் முதலீடு செய்பவர்களுக்கு மட்டுமே)
— ஒவ்வொரு ஒரு லட்சம் பரிசுக்கூப்பன்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியாளர் முன்னிலையில் குலுக்கல் நடைபெறும்.
— சென்னை நகரில் ஒவ்வொரு லட்சம் பரிசுக்கூப்பன்களுக்கு சிறுசேமிப்பு இயக்குநர் முன்னிலையில் குலுக்கல் நடைபெறும்.

- தேசிய சேமிப்புத்திட்டக் கணக்கு-87ல் (N.S.S-87) முதலீடு செய்து 100% வருமான வரிவிலக்கு ரூ. 40,000/- வரை பெற்றிடுங்கள்.
- தேசிய சேமிப்புப்பத்திரம் 8ஆம் வெளியீடு/15 ஆண்டு பொதுசேமநல நிதியில் முதலீடு செய்து வருமானவரிச்சட்டம் 88 பிரிவின்படி ரூ. 50.000/வரை 20% வரிச்சலுகை பெறுங்கள்.
- மத்திய அரசுக்கு இணையாகச் சிறுசேமிப்பு முகவர்களுக்கு ஊக்கததொகை.
- ரூ. 1,000/-ம் அதற்குமேலும் முதலீடு செய்யும் முதலீடுதாரர்களுக்கு ★ இக்குறியிட்ட சிறுசேமிப்புத் திட்டத்தில் 1% ஊக்கத்தொகை வழங்கப்படும்.

**சேமிப்புப் பத்திரம் அனைத்து அஞ்சல் நிலையங்களிலும் கிடைக்கும்.**

**பரிசுக்கூப்பன்கள்**
**மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் கிடைக்கும்.**

இயக்குநர்
**சிறுசேமிப்புத்துறை,**
143, அண்ணா சாலை, சென்னை-600002.
தொலைபேசி: 840223/846209

TNPSC

விளம்பர எண்: 27/90

தமிழ்நாடு மருத்துவப் பணியில் 6 உதவி மருத்துவ அலுவலர் (ஹோமியோபதி) (Assistant Medical Officer Homoeopathy) பதவிகளுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட விண்ணப்பங்கள் 10.9.1990 அன்று மாலை 5.45 மணி வரையில் வரவேற்கப்படுகிறது.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2,200-75-2,800-100-4,000

| | | |
|---|---|---|
| ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர் (ஆ.தி.வ./ப.வ.) | - 1 | |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் (மி.பி.வ./.சீ.ம.) | - 1 | (பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது) |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பி.வ.) | - 1 | |
| பகிரங்கப் போட்டி | - 3 | (ஓரிடம் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது) |

**குறிப்பு:** தெரிவு செய்யப்பட தேர்ச்சியும், தகுதியும் வாய்ந்த பெண் விண்ணப்பதாரர் கிடைக்கப்பெறாவிடில் அக்காலியிடம் ஆண் விண்ணப்பதாரரால் நிரப்பப்படும்.

**வயது:** 1.7.1990 அன்று 35 வயதிற்கு குறைவாக (சலுகைகள் பற்றிய விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன).

**QUALIFICATIONS:**

I (1) Any of the following Post-Graduate Diplomas of the Faculty of Homoeopathy (London), namely:-

(i) F.F. Hom. (Lond.)
(ii) M.F. Hom. (Lond.)
(iii) D.F. Hom. (Lond.)

or

(2) Any Diploma granted by any of the following Institutions in West Bengal, namely:-

(i) The Calcutta Homoeopathic Medical College.
(ii) D.N.De. Homoepathic Medical College.
(iii) The Prathap and Herring Homoeopathic Medical College.
(iv) The Midnapore Homoeopathy Medical College.
(v) The Bengal Allen Homoeopathy Medical College.

or

(3) Government Diploma in Integrated Medicine (Homoeopathy) awarded by the Board of Indian Medicine, Hyderabad.

or

(4) Any degree, diploma, licence, certificate or any other like award conferred, granted, or issued on passing the final examination held by any of the following:

(i) General Council and State Faculty of Homoeopathic Medicine, West Bengal.

or

(ii) Council of Homoeopathic Medicine, Calcutta, West Bengal

or

(iii) Andhra Board for Ayurveda and Homoeopathy, Hyderabad, Andhra Pradesh.

or

(iv) State Board of Homoeopathic System of Medicine, Patna, Bihar.

or

(v) Board of Homoeopathic System of Medicine, Delhi.

or

(vi) Council of Homoeopathic System of Medicine, Trivandrum, Kerala State.

or

(vii) Board of Homoeopathic and Bio-Chemic Systems of Medicine, Madhya Pradesh, Bhopal.

or

(viii) Court of Examiners in Homoeopathy, Bombay, Maharashtra.

or

(ix) State Board of Homoeopathic System of Medicine, Lucknow and Agra University, Agra.

or

(5) The Diploma in Homoeopathy Medicine and Surgery issued to the Students of the Homoeopathy Medical College, Madurai on passing the final Examination held by the Tamil Nadu Homoeopathy Council during the year 1973-74.

or

(6) The diploma in Homoeopathy Medicine and Surgery issued to the Students of the Government Homoeopathy Medical College, Madras by the Director of Government Examinations, Madras.

and

II. Candidates possessing a degree of Diploma in Homoeopathy should have registered his name in the Tamil Nadu Homoeopathy Council.

**NOTE:** (i) Candidates who were holding temporary appointment as Medical Officer (Homoeopathy) (now Assistant Medical Officer (Homoeopathy) in the Tamil Nadu Medical Service on 28.6.83, may also apply even if they do not satisfy the prescribed age limit and qualification.
(ii) Preference will be given to destitute widows who possess the prescribed qualification and who secure atleast the minimum marks, for selection.

**EXPLANATION:** 'Destitute Widow' means a widow who has neither any means by herself to live nor any dependant to protect her from starvation.

ஆ.தி.வ./ப.வ., மி.பி.வ./சீ.ம. மற்றும் பி.வ., ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசு பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்ப கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறை'' களில் தரப்பட்டுள்ளன.

(பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்.)

விண்ணப்பப்படிவமும் நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.8.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) சென்னை அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.8.90 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, சென்னை-600 006 ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) ''கேட்புக் காசோலை'' (Demand Draft)யுடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கிலமொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/1987/MS/90 9/8/90

TNPSC

விளம்பர எண்: 28/90

தமிழ்நாடு மின் ஆய்வுத்துறை பணியில் உதவி மின் ஆய்வாளர் (Assistant Electrical Inspector) பதவியில் ஒரு காலியிடத்திற்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் 17.9.1990 அன்று மாலை 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2,200-75-2,800-100-4,000 (பகிரங்கப் போட்டி - 1).

**வயது:** 1.7.1990 அன்று 30-க்குக் குறைவாக. (வயது வரம்பு பற்றிய சலுகைகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.)

**தகுதி:** (i) A degree in Electrical Engineering.

and

(ii) Practical experience in large electricity supply undertakings or the Tamil Nadu Electricity Board including experience in design office for a period of not less than three years.

NOTE: Preference will be given to destitute widows who possess the prescribed qualification and who secure atleast the minimum marks for selection.

EXPLANATION: 'Destitute Widow' means a widow who has neither any means by herself to live nor any dependent to protect her from starvation.

ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர் களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்'' தரப் பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப்படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்துமூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.8.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய்10/-) சென்னை அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவதொரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.8.1990 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, சென்னை-600 006 ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய்10/-) ''கேட்புக் காசோலை'' (Demand Draft)யுடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26×12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

டிஐபிஆர்/2014/எம்எஸ்/90/அக்கார்ட்

TNPSC

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
# சென்னை - 600 002.

**Special and Departmental Test Examination, May 1990**

It is hereby notified that the candidates whose Register Numbers are given below are declared to have passed in the test under which their numbers appear.

These results are subject to clarification with detailed particulars to be published in due course which will be final.

## DEPARTMENTAL TEST FOR GRAMASEVAKS, GRADES I AND II AND GRAMASEVIKAS - VILLAGE SWARAJ - MAY 1990

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22051 | 22056 | 22060 | 22093 | 22136 | 22139 | 22190 | 22191 | 22214 | 22239 |
| 22263 | 22340 | 22345 | 22366 | 22373 | 22397 | 22400 | 22463 | 22497 | 22521 |
| 22529 | 22588 | 22607 | 22713 | 22774 | 22783 | 22855 | 22856 | 22950 | 22969 |
| 22995 | 22998 | 23003 | 23009 | 23027 | 23032 | 23044 | 23053 | 23092 | 23093 |
| 23131 | 23133 | 23142 | 23144 | 23155 | 23159 | 23208 | 23209 | 23307 | 23308 |
| 23312 | 23371 | 23377 | 23380 | 23388 | 23403 | 23404 | 23423 | 23439 | 23443 |
| 23475 | 23476 | 23477 | 23490 | 23513 | 23520 | 23527 | 23528 | 23557 | 23577 |
| 23579 | 23595 | 23601 | 23604 | 23626 | 23627 | 23629 | 23635 | 23637 | 23638 |
| 23645 | 23649 | 23665 | 23673 | 23706 | 23743 | 23786 | 23807 | 23821 | 23856 |
| 23888 | 23890 | 23891 | 23892 | 23900 | 23901 | 23904 | 23929 | 23931 | 23954 |
| 23968 | 23968ஏ | 23970 | 24045 | 24046 | 24053 | 24054 | 24059 | 24108 | 24116 |
| 24120 | 24130 | 24178 | 24218 | 24283 | 24307 | 24321 | 24333 | 24354 | 24359 |
| 24366 | 24382 | 24482 | 24492 | 24501 | 24538 | 24540 | 24577 | 24583 | 24588 |
| 24616 | 24676 | 24729 | 24794 | 24796 | 24842 | 24843 | 24844 | 24850 | 24853 |
| 24894 | 24902 | 24904 | 24974 | 25026 | 25046 | 25060 | 25076 | 25089 | 25116 |
| 25147 | 25153 | 25199 | 25222 | 25225 | 25255 | 25289 | 25380 | 25383 | 25399 |
| 25405 | 25408 | 25409 | 25422 | 25427 | 25470 | 25476 | 25477 | 25478 | 25488 |
| 25493 | 25529 | 25542 | 25554 | 25570 | 25596 | 25598 | 25615 | 25617 | 25622 |
| 25635 | 25638 | 25646 | 25659 | 25671 | 25678 | 25680 | 25682 | 25688 | 25694 |
| 25697 | 25705 | 25710 | 25723 | 25727 | 25730 | 25757 | 25759 | 25762 | 25776 |
| 25792 | 25796 | 25811 | 25816 | 25817 | 25820 | 25822 | 25839 | 25844 | 25845 |
| 25851 | 25862 | 25874 | 25914 | 25925 | 25927 | 25936 | 25940 | 25944 | 25965 |
| 25966 | 25970 | 25972 | 25988 | 25998 | 26001 | 26012 | 26021 | 26024 | 26025 |
| 26026 | 26041 | 26049 | 26051 | 26052 | 26061 | 26181 | 26184 | 26230 | 26275 |
| 26316 | 26346 | 26511 | 26521 | 26543 | 26605 | 26634 | 26664 | 26691 | 26752 |
| 26754 | 26762 | 26766 | 26789 | 26791 | 26802 | 26806 | 26807 | 26808 | 26810 |
| 26826 | 26833 | 26834 | 26841 | 26872 | 26875 | 26884 | 26899 | 26926 | 26939 |
| 26942 | 26943 | 26952 | 26965 | 26972 | 26978 | 26981 | 26985 | 26988 | 26989 |
| 26996 | 26997 | 26999 | 27000 | 27019 | 27025 | 27035 | 27037 | 27040 | 27043 |
| 27051 | 27057 | 27070 | 27073 | 27075 | 27079 | 27080 | 27094 | 27095 | 27100 |
| 27101 | 27102 | 27122 | 27125 | 27127 | 27129 | 27132 | 27161 | 27169 | 27170 |
| 27171 | 27188 | 27218 | 27219 | 27269 | 27276 | 27277 | 27306 | 27327 | 27334 |
| 27337 | 27341 | 27349 | 27363 | 27364 | 27369 | 27404 | 27418 | 27420 | 27423 |
| 27434 | 27435 | 27437 | 27439 | 27447 | 27460 | 27475 | 27477 | 27490 | 27500 |
| 27501 | 27555 | 27591 | 27594 | 27599 | 27601 | 27614 | 27618 | 27627 | 27629 |
| 27640 | 27644 | 27659 | 27663 | 27664 | 27667 | 27677 | 27679 | 27680 | 27681 |
| 27683 | 27687 | 27724 | 27733 | 27743 | 27819 | 27868 | 27898 | 27901 | 27920 |
| 27931 | 27944 | 27953 | 27967 | 27973 | 27999 | 28088 | 28173 | 28186 | 28279 |
| 28308 | 28311 | 28312 | 28317 | 28318 | 28323 | 28328 | 28433 | 28486 | 28537 |
| 28538 | 28558 | 28577 | 28598 | 28600 | 28657 | 28696 | 28713 | 28723 | 28766 |
| 28775 | 28842 | 28846 | 28847 | 28848 | 28850 | 28852 | 28857 | 28890 | 28910 |
| 28911 | 28940 | 28942 | 28945 | 28954 | 28977 | 29002 | 29053 | 29122 | 29124 |
| 29127 | 29155 | 29165 | 29234 | 29259 | 29266 | 29269 | 29308 | 29424 | 29441 |
| 29497 | 29596 | 29676 | 29707 | 29773 | 29863 | 29934 | 29945 | 29955 | 30027 |
| 30081 | 30183 | 30207 | 30241 | 30245 | 30282 | 30344 | 30593 | 30594 | 30621 |
| 30768 | 30791 | 30812 | 30829 | 30840 | 30848 | 30854 | 30858 | 30860 | 30863 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 30890 | 30916 | 30933 | 30972 | 30973 | 30974 | 30978 | 30985 | 30991 | 30993 |
| 31012 | 31046 | 31051 | 31067 | 31073 | 31081 | 31084 | 31085 | 31087 | 31130 |
| 31131 | 31147 | 31180 | 31202 | 31287 | 31313 | 31352 | 31383 | 31399 | 31400 |
| 31419 | 31421 | 31462 | 31509 | 31531 | 31539 | 31683 | 31686 | 31701 | 31724 |
| 31729 | 31732 | 31737 | 31741 | 31778 | 31781 | 31785 | 31794 | 31809 | 31944 |
| 32015 | 32168 | 32190 | 32201 | 32458 | 32515 | 32609 | 32659 | 32667 | 32675 |
| 32899 | 32918 | 32922 | 32925 | 32945 | 32955 | 32961 | 32965 | 32980 | 33010 |
| 33054 | 33091 | 33099 | 33114 | 33160 | 33219 | 33350 | 33466 | 33469 | 33509 |
| 33677 | 33769 | 33798 | 33898 | 33904 | 33938 | 34037 | 34066 | 34088 | 34147 |
| 34156 | 34300 | 34375 | 34433 | 34555 | 34590 | 34646 | 34827 | 34947 | 34970 |
| 34992 | 35105 | 35119 | 35128 | 35269 | 35331 | 35410 | 35436 | 35464 | 35487 |
| 35502 | 35548 | 35573 | 35640 | 35644 | 35679 | 35684 | 35715 | 35760 | 35771 |
| 35813 | 35825 | 35875 | 35905 | 35922 | 35945 | 35956 | 35974 | 35989 | 35992 |
| 36015 | 36025 | 36041 | 36115எ | 36158 | 36183 | 36288 | 36305 | 36312 | 36314 |
| 36318 | 36418 | 36448 | 36473 | 36512 | 36528 | 36530 | 36578 | 36633 | 36640 |
| 36682 | 36690 | 36706 | 36712 | 36749 | 36770 | 36783 | 36797 | 36802 | 36825 |
| 36826 | 36839 | 36850 | 36877 | 36884 | 36892 | 36905 | 36911 | 36925 | 36935 |
| 36994 | 37012 | 37050 | 37065 | 37115 | 37121 | 37182 | 37185 | 37241 | 37247 |
| 37248 | 37268 | 37324 | 37328 | 37362 | 37372 | 37422 | 37457 | 37460 | 37475 |
| 37477 | 37478 | 37496 | 37516 | 37522 | 37537 | 37543 | 37545எ | 37548 | 37569 |
| 37580 | 37616 | 37619 | 37622 | 37659 | 37663 | 37664 | 37668 | 37670 | 37681 |
| 37683 | 37704 | 37728 | 37732 | 37749 | 37750 | 37751 | 37859 | 37960 | 37978 |
| 38017 | 38018 | 38022 | 38031எ | 38039 | 38083 | 38135 | 38137 | 38139 | 38159 |
| 38160 | 38198 | 38217 | 38221 | 38229 | 38239 | 38260 | 28261 | 38306 | 38320 |
| 38330 | 38337 | 38364 | 38399 | 38409 | 38415 | 38441 | 38442 | 38461 | 38478 |
| 38485 | 38494 | 38498 | 38502 | 38505எ | 38506 | 38511 | 38537 | 38543 | 38569 |
| 38485 | 38494 | 38498 | 38502 | 38505எ | 38506 | 38511 | 38537 | 38543 | 38369 |
| 38571 | 38573 | 38577 | 38633 | 38636 | 38638 | 38639 | 38643 | 38646 | 38649 |
| 38653 | 38654 | 38658 | 38660 | 38681 | 38682 | 38684 | 38686 | 38689 | 38690 |
| 38692 | 38695 | 38696 | 38705 | 38716 | 38724 | 38726 | 38728 | 38746 | 38752 |
| 38754 | 38755 | 38790 | 38791 | 38800 | 38882 | 38891 | 38893 | 38896 | 38968 |
| 38980 | 38981 | 38985 | 38988 | 38992 | 38993 | 38996 | 38998 | 39002 | 39005 |
| 39009 | 39025 | 39026 | 39032 | 39033 | 39048 | 39061 | 39062 | 39066 | 39093 |
| 39098 | 39112 | 39121 | 39123 | 39128 | 39147 | 39149 | 39152 | 39154 | 39157 |
| 39159 | 39164 | 39186 | 39188 | 39207 | 39210 | 39215 | 39218 | 39225 | 39228 |
| 39231 | 39238 | 39243 | 39244 | 39275 | 39303 | 39304 | 39326 | 39331 | 39338 |
| 39342 | 39377 | 39417 | 39420 | 39427 | 39428 | 39442 | 39443 | 39449 | 39456 |
| 39465 | 39471 | 39472 | 39476 | 39478 | 39480 | 39482 | 39489 | 39493 | 39494 |
| 39495 | 39496 | 39497 | 39498 | 39499 | 39528 | 39531 | 39532 | 39535 | 39540 |
| 39550 | 39559 | 39562 | 39563 | 39564 | 39567 | 39568 | 39574 | 39575 | 39581 |
| 39582 | 39591 | 39626 | 39627 | 39628 | 39629 | 39630 | 39632 | 39633 | 39642 |
| 39649 | 39660 | 39662 | 39691 | 39693 | 39697 | 39701 | 39704 | 39735 | 39750 |
| 39751 | 39753 | 39755 | 39756 | 39766 | 39788 | 39789 | 39793 | 39794 | 39795 |
| 39835 | 39846 | 39847 | 39850 | 39855 | 39869 | 39873 | 39907 | 39913 | 39916 |
| 39918 | 39919 | 39921 | 39939 | 39940 | 39941 | 39949 | 39960 | 39966 | 39975 |
| 39984 | 39991 | 39994 | 40014 | 40021 | 40049 | 40054 | 40057 | 40062 | 40064 |
| 40084 | 40089 | 40109 | 40112 | 40125 | 40127 | 40131 | 40139 | 40152 | 40155 |
| 40176 | 40178 | 40181 | 40185 | | | | | | |

The results of the candidates with following Register Numbers have been withheld and will be published later.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23975 | 24061 | 24109 | 24114 | 24128 | 24129 | 24159 | 24322 | 24334 | 24358 |
| 24401 | 24407 | 24412 | 24414 | 24458 | 24473 | 24474 | 24476 | 24493 | |

நிலஅளவைத் தேர்வு (திருத்தியமைக்கப்பட்டது) பாகம்-1
முதல் தாள்—மே 1990.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22619 | 22637 | 24546 | 25158 | 25224 | 25235 | 25246 | 27540 | 32421 | 32564 |
| 32756 | 32800 | 33235 | 33318 | 33382 | 33447 | 33520 | 33533 | 33622 | 33714 |
| 33792 | 33923 | 34056 | 34182 | 34247 | 34268 | 34270 | 34889 | 34901 | 35323 |
| 35355 | 37689 | 39178 | | | | | | | |

நிலஅளவைத் தேர்வு (திருத்தியமைக்கப்பட்டது) பாகம்-1
இரண்டாம் தாள்—மே 1990

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22103 | 22616 | 22619 | 22637 | 22641 | 22670 | 22726 | 22917 | 23252 | 24546 |
| 24551 | 24552 | 24617 | 24685 | 24707 | 24922 | 25033 | 25048 | 25246 | 27803 |
| 27918 | 32421 | 32519 | 32531 | 32756 | 32800 | 32928 | 33291 | 33382 | 33447 |
| 33476 | 33533 | 33588 | 33616 | 33923 | 33979 | 34051 | 34185 | 34196 | 34268 |
| 34270 | 34889 | 34909 | 34922 | 35124 | 35222 | 35282 | 35285 | 35323 | 35355 |
| 35714 | 35842 | 36155 | 36302 | 36396 | 36462 | 36490 | 37538 | 37636 | 38058 |
| 38210 | 39264 | 39792 | 40001 | 40177 | | | | | |

நிலஅளவைத் தேர்வு (திருத்தியமைக்கப்பட்டது) பாகம்-1
மூன்றாம் தாள்—மே 1990

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22637 | 22917 | 24551 | 24575 | 24962 | 25246 | 27340 | 27803 | 27806 | 32756 |
| 32800 | 33235 | 33282 | 33287 | 33298 | 33318 | 33622 | 33714 | 34268 | 34270 |
| 35323 | 35325 | 35714 | 34751 | 35842 | 35867 | 36083 | 36129 | 36302 | 36396 |
| 36462 | 36490 | 36531 | 39178 | | | | | | |

தேர்வுகள்—துறைத் தேர்வுகள்—மே 1990—வருவாய் வரைவாளர் தேர்வு
முதல் தாள்—தேர்வு முடிவுகள் தேர்ச்சி பெற்றோர் பட்டியல்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23212 | 23612 | 23770 | 23783 | 24935 | 24937 | 24997 | 25049 | 25096 | 25111 |
| 25154 | 25188 | 25385 | 25394 | 24788 | 25467 | 25527 | 25563 | 25575 | 25599 |
| 25612 | 25690 | 25711 | 25814 | 25858 | 25903 | 25957 | 26103 | 26111 | 26120 |
| 26147 | 27961 | 28531 | 28651 | 28668 | 29369 | 29371 | 30185 | 30591 | 31013 |
| 31206 | 31507 | 31750 | 31790 | 32397 | 32423 | 32442 | 32471 | 32488 | 32517 |
| 32607 | 32726 | 32768 | 32810 | 32868 | 34107 | 34696 | 35011 | 35543 | 36757 |
| 36866 | 37296 | 37403 | 37404 | 37564 | 37689 | 37734 | 37785 | 37915 | 38212 |
| 38313 | 38459 | 38634 | 38779 | 39274 | 39307 | 39323 | 39353 | 39375 | 39384 |
| 39485 | 39576 | 39598 | 39670 | 39731 | 39895 | 39988 | 40071 | 40102 | 40111 |
| 40123 | 40124 | 40126 | | | | | | | |

தேர்வுகள்—துறைத் தேர்வுகள்—மே 1990—வருவாய் வரைவாளர் தேர்வு
இரண்டாம் தாள் தேர்வு முடிவுகள்—தேர்ச்சி பெற்றோர் பட்டியல்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22227 | 23564 | 23783 | 23800 | 24101 | 24104 | 24469 | 24997 | 25067 | 25096 |
| 25111 | 25206 | 25690 | 26683 | 26697 | 26711 | 26743 | 26769 | 26925 | 26951 |
| 27130 | 27228 | 27482 | 30942 | 31105 | 31206 | 31277 | 31382 | 31507 | 31659 |
| 31790 | 32397 | 32517 | 32814 | 32881 | 32937 | 33051 | 33075 | 33194 | 34587 |
| 36757 | 36815 | 36900 | 37342 | 37564 | 37689 | 38019 | 38454 | 38634 | 38779 |
| 38979 | 39015 | 39230 | 39274 | 39353 | 39375 | 39384 | 39485 | 39538 | 39576 |
| 39593 | 40071 | | | | | | | | |

தேர்வுகள்— துறைத் தேர்வுகள்— மே 1990— வருவாய் வரைவாளர் தேர்வு
மூன்றாம் தாள் தேர்வு முடிவுகள்— தேர்ச்சி பெற்றோர் பட்டியல்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 24503 | 24661 | 24937 | 26294 | 28220 | 28531 | 29369 | 30928 | 30979 | 31450 |
| 31784 | 32505 | 32582 | 32607 | 32768 | 32844 | 32881 | 33051 | 33052 | 33075 |
| 34404 | 34598 | 34715 | 34818 | 35302 | 35617 | 36177 | 36311 | 36358 | 36590 |
| 36605 | 36615 | 36643 | 36686 | 36757 | 36803 | 36815 | 36931 | 37071 | 37130 |
| 37152 | 37281 | 37338 | 37403 | 37404 | 37610 | 38911 | 39099 | 39576 | 39670 |
| 39988 | | | | | | | | | |

**TNPSC**

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
## சென்னை - 600 002.

தமிழ்நாடு வேளாண்மைத் துறையில் வேளாண்மை அலுவலர் (ஆராய்ச்சி) பதவிக்கு (1989-90-ஆம் ஆண்டு) தற்காலிகமாகத் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களின் பதிவெண்களடங்கிய பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | 35 | 42 | 56 | 57 | 74 | 109 | 113 | 129 | 134 | 165 | 179 |
| 182 | 194 | 224 | 225 | 227 | 238 | 240 | 243 | 271 | 303 | 304 | 309 |
| 321 | 337 | 342 | 357 | 363 | 376 | 399 | 411 | 418 | 420 | 441 | 443 |
| 446 | 450 | 451 | 453 | 462 | 468 | 469 | 486 | 500 | 547 | 578 | 582 |
| 583 | 585 | 591 | 600 | 619 | 624 | 637 | 762 | 763 | 765 | 770 | 794 |
| 797 | 818 | 830 | 853 | 862 | 919 | 928 | 939 | 947 | 967 | 974 | 981 |
| 983 | 993 | 1009 | 1025 | 1026 | 1029 | 1034 | 1042 | மற்றும் 1066 | | | |

பதிவெண் 353-ஐ கொண்ட விண்ணப்பதாரரின் தெரிவு முடிவு அவரிடமிருந்து வர வேண்டிய மூலச்சான்றிதழ்களைச் சரிபார்க்கும் பொருட்டு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

காப்புப் பட்டியல்

தமிழ்நாடு வேளாண்மைத் துறையில் வேளாண்மை அலுவலர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களில் எவரேனும் பணியில் சேராத பட்சத்தில் அக்காலி இடங்களை நிரப்பும் பொருட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ள பதிவெண்களைக் கொண்ட விண்ணப்பதாரர்களின் காப்புப் பட்டியல் ( Reserve List ) வெளியிடப்படுகின்றது. இக்காப்புப் பட்டியல் இப்பதவிக்கான அடுத்த தெரிவுப் பட்டியல் தயாராகும் வரை மட்டுமே செல்லத்தக்கதாகும்.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 237 | 320 | 388 | 390 | 435 | 447 | 519 | 540 | 601 | 618 | 680 | 694 |
| 775 | 815 | 848 | 886 | 935 | 1022 | 1035 | 1045 | மற்றும் 1047 | | | |

டிஐபிஆர்/2055/எம்எஸ்/90/அக்கார்ட்

# புதிய வாழ்வு

வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், பால்னாங்குப்பம் கிராமத்தினைச் சார்ந்த செல்வி சின்னப்பாப்பா எனும் இருபத்தைந்து வயது பெண்மணி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மனிதாபிமான அடிப்படை முயற்சியினால், பம்பாய் சிவப்பு விளக்குப் பகுதியிலிருந்து மீட்கப்பட்டு, சொந்த கிராமத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு அவருடைய சகோதரர் பாதுகாப்பில் விடப்பட்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1.7.90 அன்று வேலூரில் நடந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட போது, செல்வி. சின்னப்பாப்பாவிற்கு மனிதநேய அடிப்படையில் புனர்வாழ்வு அளிக்கும் வகையில் கறவை மாடு வாங்குவதற்கு ரூ.4,750 நிதியுதவி அளிக்கப்படும் என்று அறிவித்தார். அதன்படி, 19.7.90 நாளன்று பால்னாங்குப்பம் கிராமத்தில் நடந்த சிறிய விழாவில், அப்பெண்மணிக்குப் பாரத ஸ்டேட் வங்கி மூலம் கறவை மாடு ஒன்று வழங்கப்பட்டது. மேலும், விரைவில் மற்றொரு கறவை மாடு அப்பெண்மணிக்கு வழங்கிடக் கடனுதவி அளிக்கப்படும் என்று திருப்பத்தூரில் உள்ள பாரத வங்கியின் கிளை மேலாளர் அறிவித்துள்ளார்.



## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2

தேர்வாணையத்தால் 4.2.90 அன்று தமிழ்நாடு பொது சார்நிலைப் பணியில் புள்ளியியல் துறையில் புள்ளியியல் உதவி ஆய்வாளர் பதவிகளுக்கு நடத்தப்பட்ட முதனிலைத் தேர்வு (Preliminary Examination) முடிவின் அடிப்படையில் பிரதான எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப் பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் பதிவெண்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. பிரதான எழுத்துத் தேர்வுக்கு நாள், நேரம் மற்றும் தேர்வு மையம் ஆகியன குறித்த விவர அறிவிப்பு தனித்தனியே விண்ணப்பதாரர்களுக்கு உரிய நேரத்தில் அனுப்பப்படும். **இப்பட்டியலில் இடம்பெறாத பதிவு எண்களை உடைய விண்ணப்பதாரர்கள் பிரதான எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறார்கள். மேலும் பிரதான எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்படாத விண்ணப்ப தாரக்களுக்கு தனியாக தகவல் எதுவும் தெரிவிக்கப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறார்கள்.**

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1501 | 1505 | 1510 | 1518 | 1522 | 1525 | 1526 | 1528 | 1537 | 1542 | 1554 | 1559 | 1560 | 1561 | 1562 |
| 1576 | 1587 | 1591 | 1595 | 1599 | 1605 | 1610 | 1617 | 1624 | 1645 | 1646 | 1652 | 1660 | 1667 | 1673 |
| 1677 | 1678 | 1680 | 1681 | 1683 | 1685 | 1690 | 1691 | 1705 | 1707 | 1708 | 1713 | 1714 | 1734 | 1741 |
| 1746 | 1747 | 1758 | 1760 | 1762 | 1766 | 1768 | 1783 | 1784 | 1786 | 1791 | 1792 | 1793 | 1795 | 1805 |
| 1807 | 1814 | 1815 | 1822 | 1826 | 1829 | 1833 | 1839 | 1844 | 1862 | 1863 | 1865 | 1866 | 1872 | 1873 |
| 1878 | 1879 | 1899 | 1903 | 1909 | 1917 | 1922 | 1924 | 1925 | 1928 | 1930 | 1932 | 1947 | 1949 | 1960 |
| 1964 | 1967 | 1973 | 1987 | 1991 | 2002 | 2012 | 2019 | 2024 | 2026 | 2033 | 2036 | 2037 | 2038 | 2040 |
| 2044 | 2047 | 2056 | 2061 | 2078 | 2085 | 2087 | 2088 | 2091 | 2093 | 2094 | 2096 | 2098 | 2101 | 2105 |
| 2106 | 2110 | 2113 | 2115 | 2116 | 2120 | 2126 | 2129 | 2136 | 2140 | 2151 | 2152 | 2164 | 2181 | 2182 |
| 2185 | 2191 | 2194 | 2196 | 2198 | 2200 | 2201 | 2205 | 2209 | 2210 | 2213 | 2214 | 2220 | 2224 | 2229 |
| 2231 | 2234 | 2242 | 2244 | 2262 | 2265 | 2271 | 2279 | 2283 | 2286 | 2303 | 2305 | 2307 | 2316 | 2318 |
| 2323 | 2329 | 2337 | 2340 | 2341 | 2345 | 2356 | 2360 | 2364 | 2370 | 2375 | 2378 | 2393 | 2400 | 2419 |
| 2423 | 2440 | 2448 | 2449 | 2451 | 2456 | 2457 | 2462 | 2464 | 2466 | 2467 | 2475 | 2514 | 2517 | 2518 |
| 2521 | 2523 | 2527 | 2529 | 2552 | 2560 | 2575 | 2582 | 2583 | 2587 | 2595 | 2596 | 2600 | 2601 | 2602 |
| 2603 | 2606 | 2626 | 2636 | 2643 | 2655 | 2657 | 2660 | 2670 | 2671 | 2674 | 2675 | 2677 | 2680 | 2681 |
| 2684 | 2689 | 2694 | 2703 | 2705 | 2708 | 2712 | 2716 | 2721 | 2724 | 2726 | 2727 | 2736 | 2738 | 2739 |
| 2741 | 2742 | 2743 | 2746 | 2750 | 2751 | 2752 | 2753 | 2754 | 2757 | 2762 | 2763 | 2771 | 2772 | 2775 |
| 2776 | 2778 | 2780 | 2781 | 2782 | 2783 | 2784A | 2787 | 2789 | 2796 | 2799 | 2805 | 2822 | 2827 | 2836 |
| 2853 | 2857 | 2874 | 2877 | 2911 | 2918 | 2933 | 2947 | 2948 | 2958 | 2970 | 2972 | 2981 | 2996 | 2998 |
| 3001 | 3002 | 3008 | 3013 | 3014 | 3017 | 3024 | 3026 | 3031 | 3033 | 3039 | 3040 | 3043 | 3045 | 3048 |
| 3062 | 3066 | 3068 | 3070 | 3075 | 3080 | 3081 | 3082 | 3090 | 3091 | 3093 | 3095 | 3098 | 3102 | 3107 |
| 3110 | 3112 | 3115 | 3119 | 3124 | 3149 | 3150 | 3156 | 3170 | 3177 | 3179 | 3184 | 3185 | 3192 | 3195 |
| 3204 | 3207 | 3208 | 3212 | 3214 | 3215 | 3220 | 3224 | 3233 | 3234 | 3241 | 3242 | 3244 | 3246 | 3249 |
| 3250A | 3254 | 3255 | 3257 | 3259 | 3265 | 3267 | 3286 | 3287 | 3288 | 3295 | 3311 | 3315 | 3316 | 3321 |
| 3322 | 3324 | 3326 | 3327 | 3332 | 3335 | 3341 | 3342 | 3344 | 3347 | 3370 | 3378 | 3388 | 3400 | 3406 |
| 3410 | 3416 | 3417 | 3425 | 3427 | 3431 | 3438 | 3440 | 3441 | 3449 | 3454 | 3461 | 3463 | 3464 | 3471 |
| 3485 | 3487 | 3491 | 3496 | 3502 | 3505 | 3511 | 3526 | 3529 | 3551 | 3552 | 3553 | 3557 | 3558 | 3560 |
| 3564 | 3565 | 3579 | 3582 | 3599 | 3603 | 3616 | 3617 | 3621 | 3627 | 3633 | 3640 | 3648 | 3658 | 3660 |
| 3666 | 3673 | 3680 | 3686 | 3703 | 3708 | 3728 | 3732 | 3733 | 3751 | 3758 | 3768 | 3769 | 3771 | 3783 |
| 3787 | 3788 | 3790 | 3802 | 3805 | 3806 | 3807 | 3816 | 3818 | 3830 | 3839 | 3843 | 3849 | 3866 | 3867 |
| 3875 | 3878 | 3879 | 3880 | 3894 | 3898 | 3908 | 3910 | 3927 | 3930 | 3933 | 3941 | 3943 | 3946 | 3947 |
| 3952 | 3953 | 3955 | 3965 | 3970 | 3981 | 3987 | 3995 | 4005 | 4014 | 4015 | 4020 | 4021 | 4024 | 4028 |
| 4029 | 4030 | 4046 | 4053 | 4061 | 4063 | 4066 | 4073 | 4081 | 4086 | 4088 | 4096 | 4097 | 4103 | 4108 |
| 4109 | 4116 | 4122 | 4126 | 4129 | 4136 | 4142 | 4151 | 4156 | 4157 | 4161 | 4165 | 4175 | 4179 | 4188 |
| 4189 | 4190 | 4192 | 4194 | 4201 | 4204 | 4208 | 4209 | 4211 | 4212 | 4216 | 4223 | 4226 | 4229 | 4247 |
| 4249 | 4255 | 4264 | 4277 | 4278 | 4284 | 4286 | 4295 | 4299 | 4305 | 4312 | 4315 | 4324 | 4325 | 4330 |
| 4337 | 4343 | 4344 | 4347 | 4371 | 4381 | 4388 | 4391 | 4395 | 4400 | 4403 | 4404 | 4429 | 4436 | 4438 |
| 4459 | 4462 | 4483 | 4490 | 4497 | 4519 | 4522 | 4524 | 4527 | 4528 | 4529 | 4532 | 4533 | 4540 | 4551 |
| 4560 | 4615 | 4616 | 4636 | 4637 | 4658 | 4659 | 4665 | 4670 | 4673 | 4697 | 4710 | 4717 | 4723 | 4724 |
| 4728 | 4731 | 4733 | 4737 | 4753 | | | | | | | | | | |

செயலாளர்

TNPSC

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## சென்னை-600 002.

தேர்வாணையத்தால் 4-2-90அன்று தமிழ்நாடு பொது சார்நிலைப் பணியில் புள்ளியியல் துறையில் புள்ளியியல் ஆய்வாளர் பதவிகளுக்கு நடத்தப்பட்ட முதனிலைத் தேர்வு ( Preleminary Examination ) முடிவின் அடிப்படையில் பிரதான எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் பதிவெண்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. பிரதான எழுத்துத் தேர்விற்கு நாள், நேரம் மற்றும் தேர்வு மையம் ஆகியன குறித்த விவர அறிவிப்பு தனித்தனியே விண்ணப்பதாரர்களுக்கு உரிய நேரத்தில் அனுப்பப்படும். இப்பட்டியலில் இடம் பெறாத பதிவு எண்களை உடைய விண்ணப்பதாரர்கள் பிரதான எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறார்கள். மேலும் பிரதான எழுத்துத் தேர்விற்கு அனுமதிக்கப்படாத விண்ணப்பதாரர்களுக்குத் தனியாகத் தகவல் எதுவும் தெரிவிக்கப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறார்கள்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 0006 | 0009 | 0013 | 0019 | 0104 | 0118 | 0119 | 0159 | 0180 | 0196 |
| 0208 | 0211 | 0241 | 0247 | 0249 | 0278 | 0279 | 0288 | 0291 | 0295 |
| 0322 | 0332 | 0333 | 0337 | 0338 | 0363 | 0384 | 0408 | 0445 | 0448 |
| 0456 | 0471 | 0483 | 0495 | 0496 | 0504 | 0505 | 0508 | 0509 | 0516 |
| 0534 | 0560 | 0563 | 0596 | 0603 | 0606 | 0614 | 0654 | 0655 | 0670 |
| 0674 | 0694 | 0695 | 0696 | 0700 | 0705 | 0716 | 0725 | 0729 | 0731 |
| 0740 | 0765 | 0767 | 0783 | 0787 | 0792 | 0817 | 0860 | 0875 | 0892 |
| 0905 | 0910 | 0935 | 0946 | 0952 | 0956 | 0957 | 0989 | 1017 | 1024 |
| 1025 | 1033 | 1053 | 1071 | 1107 | 1115 | 1116 | 1119 | 1120 | 1128 |
| 1130 | 1131 | 1150 | 1163 | 1164 | 1177 | 1178 | 1214 | 1215 | 1228 |

செயலாளர்

டிஐபிஆர்/2016/எம்எஸ்/90/அக்கார்ட்

**நான்காம் அட்டை சொல்லும் செய்தி :**

# கலை உலக ஆசான் கலைவாணர்



**சீர்**திருத்தக் கொள்கைகளை- பகுத்தறிவுக் கருத்துக்களை- தமிழ்த் திரைப்படங்களின் வாயிலாக உலா வரச் செய்து சமுதாயத்தில் மறுமலர்ச்சி பாயச் செய்த பெருமை கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களைச் சாரும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில் அருகில் உள்ள ஒழுகினசேரியில் சுடலை முத்து-இசக்கியம்மாள் தம்பதியின் மகனாக 29.11.1908-இல் பிறந்தவர் என்.எஸ்.கிருஷ்ணன். அவர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் என்றாலும் சிறுவயதிலேயே கலை ஆர்வம் என்னும் செல்வத்தை மிக அதிக அளவில் பெற்றிருந்தார்.

நாடகங்களில் நடித்தார்; நடிப்புலகில் ஒளிவீசித் திகழ்ந்தார். நகைச்சுவைப் பாத்திரத்தையே விரும்பி ஏற்றார். நாடெல்லாம் போற்றும் நகைச்சுவை நடிகரானார். காலத்தின் கட்டாயத்தால் நாடக உலகிலிருந்து திரைப்பட உலகில் புகுந்தார்; திறம்பட நடித்தார்; திக்கெலாம் புகழ் தேடிக் கொண்டார். கலைவாணர் என்னும் பட்டத்தையும் பெற்றார்; மக்களின் கவலையையும் கண்ணீரையும் நகைச்சுவை மருந்து கொண்டு நீக்கினார்.

நகைச்சுவை வெடிகளை உதிர்ப்பதுடன் நல்ல நல்ல கருத்து மணிகளையும் மக்கள் மன்றத்திற்குக் காணிக்கை ஆக்கினார். சிரிக்க வைத்து நாட்டைச் செழிக்க வைக்கும் சீர்திருத்தக்காரராக விளங்கினார்.

அவரது மேதையைத் தமிழகத்தில் வாழ்ந்த அறிஞர் பெருமக்களெல்லாம் பாராட்டிப் போற்றியிருக்கிறார்கள். அறிஞர் பெருமக்களையும் அரசியல் விற்பன்னர்களையும்- தமது அருங்கருத்துகளால் - அதிசயிக்க வைத்த பெருமை- சிரிப்புக் கடலிலே மூழ்க வைத்த திறமை கலைவாணரின் தனி உடைமை!

‘‘கலை காலத்தை வெல்வது. கலைவாணருடைய நகைச்சுவை இப்போதும் ஏற்றுக் கொள்ளத்தக்க அளவுக்கு இருக்கிறது. கலைக் கல்லூரி அமைத்து அவர் ஆசானாக இருந்து பணியாற்ற வேண்டியவர்; எனப் பேரறிஞர் அண்ணா அவர்கள் கலைவாணரைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

‘‘நமது நகைச்சுவை அரசு கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் தனது தொழிலில் ஒரு மேதாவி என்றாலும் அதை நடத்தும் முறையில் ஒரு பெரிய புரட்சியாளர் என்றே சொல்ல வேண்டும். அதுவும் லெனின் செய்தது போன்ற புரட்சி என்றே சொல்ல வேண்டும்.

‘‘நாடகப் புரட்சி உலகைப் பற்றிச் சரித்திரம் எழுதப்பட்டால், அச்சரித்திரத்தின் அட்டைப் பக்கத்தில் என்.எஸ்.கிருஷ்ணன் படம் போடாவிட்டால் அச்சரித்திரம் தீண்டப்படாததாகி விடும்’’— தந்தை பெரியாரின் பாராட்டு வாசகம் இது.

‘‘கிருஷ்ணன் தமிழ் மக்களைச் சிரிக்க வைக்கும் மகான்.

‘‘கிருஷ்ணன் பிறருடைய உள்ளத்தைக் குத்திப் பிளக்கிறதில்லை. அவர் பிறருடைய உள்ளத்தை விரியச் செய்கிறார். அதை விளையாட்டுப் பொம்மையாக அடித்து விடுகிறார்’’— மறுமலர்ச்சி எழுத்தாளர் வ.ரா. கலைவாணரை இப்படிப் போற்றிப் புகழ்ந்தார்.

சிறுகுழந்தை முதல் வயது முதிர்ந்தவர்வரை கலைவாணரின் நகைச்சுவையில் சொக்கிப் போயிருக்கிறார்கள் என்பதைத் திரையுலக வரலாறு நமக்கு எடுத்துச் சொல்கிறது.

கருத்துச் செல்வத்தை மட்டுமல்ல- கையிலிருந்த பொருட் செல்வத்தையும் ஏழை எளியவர்களுக்கு வழங்கி இதயம் மகிழ்ந்தவர் கலைவாணர்.

தனிப்பட்ட முறையில் தன்னை அணுகிவந்து பணஉதவி கேட்டவர்களுக்கெல்லாம் அள்ளிக் கொடுத்த வள்ளல் அவர்.

வாரி வழங்கிய வள்ளலே 1957 ஜூலை மாதத்தில் நோய்க்கு ஆளானார். சிலநாள் சென்னை பொது மருத்துவ மனையில் தங்கிச் சிகிச்சை பெற்றார். எனினும் நோய் குணமாகவில்லை.

ஆகஸ்ட் திங்கள் 30-ஆம் நாளன்று இன்னுயிர் நீத்தார். மறைந்து 33 ஆண்டுகள் உருண்டோடி விட்டன என்றாலும், அவரைப் பற்றிய நினைவுகள் தமிழ்மக்களின் நெஞ்சில் நீங்காது நிலை பெற்றிருக்கின்றன.

1969-இல் அவரது திருவுருவச் சிலை தியாகராய நகர் வாணிமகால் அருகில் அன்றைய முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அண்ணா பங்கு பெற்ற கடைசிப் பொதுநிகழ்ச்சியாக அது அமைந்தது. அதன்பின்னர் அண்ணா, உடல்நலம் குன்றி மருத்துவமனையில் சேர்ந்தார். சிகிச்சை பயனின்றி பிப்ரவரி 3-இல் மறைந்தார்

கலைவாணரின் பாடல்களில் சீர்திருத்தக் கருத்துகள் சிறந்தோங்கியிருந்ததற்கும் அந்தப் பாடல்கள் மக்களைக் கவர்ந்ததற்கும்- பாடல் எழுதிய உடுமலை நாராயண கவிக்கும் பெரும் பங்கு உண்டு. உடுமலையாரை நன்கு வேலை வாங்கி, தனக்கு ஏற்ற விதத்தில் பாடல்களை எழுத வைத்த திறமை கலைவாணருக்கு மட்டுமே உண்டு.

கலைவாணரின் நினைவு நாளை முன்னிட்டு, கலைவாணரும் அவரிடம் அளவற்ற அன்பு கொண்டிருந்த பேரறிஞர் அண்ணா, உடுமலை நாராயண கவி ஆகிய மும்மணிகளும் வீற்றிருக்கும் அபூர்வமான புகைப்படத்தை பின்பக்க அட்டையில் வெளியிட்டுப் பெருமை கொள்கிறது ‘தமிழரசு’ **_எஸ்.எஸ்.சுந்தரம்**

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

/ அதி / நவீன / பருத்தி / வகைகள் /




உங்கள் ஆடை-அணிகள் பொலிவுடன் விளங்குவதில் உங்களுக்கு அதிக விருப்பம். ஆகவேதான் உயிரோட்டமான வண்ணங்களின் உன்னதத்தை உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் பருத்தி வகைகளில் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் — உங்கள் இனிய நேரங்களில்!

**கோ-ஆப்டெக்ஸ்**

தமிழ்நாடு கைத்தறி


இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங் • பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA

Black

கல்கி



பதிவு எண் M 8676
Licence No. TN/MS(C)/PP-23



# சரித்திரத் திருப்பம்- புதிய சகாப்தம்!

மண்டல் கமிஷன் நிறைவேற்றம் குறித்து

## முதல்வர் கலைஞர்

# சரித்திரத் திருப்பம்–
# புதிய சகாப்தம்!

மண்டல் கமிஷன் நிறைவேற்றம் குறித்து
முதல்வர் கலைஞர்

# பதிப்புரை

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 20.8.90 அன்று சட்டப் பேரவையில், பிற்படுத்தப்பட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கையான, மண்டல் கமிஷன் பரிந்துரைகளை ஏற்று நிறைவேற்றிய 'மாண்புமிகு பிரதமர் வி.பி. சிங் அவர்களைப் பாராட்டி, கொண்டு வந்த தீர்மானத்தின் மீது ஆற்றிய உரைத்தொகுப்பினை,

**சரித்திரத் திருப்பம்- புதிய சகாப்தம்!**

என்ற தலைப்பில் 1.9.90 தமிழரசு இதழின் இலவச இணைப்பாக வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தமிழ்நாடு அரசு.

**மாண்புமிகு முதல்வர் கலைஞர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு, அரசின் சார்பில் முன்மொழிந்துள்ள ''மண்டல் குழு பரிந்துரைகளை மத்திய அரசு நிறைவேற்றியமைக்காக நன்றியையும், பாராட்டையும் இந்த மாமன்றத்தின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறது'' என்ற கருத்து அடங்கிய தீர்மானத்தின்மீது, கட்சிகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், தங்களுடைய கருத்துக்களை எடுத்துரைத்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

கருத்துக்களில் அவர்கள் தெரிவித்த கோணங்கள் அல்லது பாணிகள் வேறு வேறாக இருந்தாலும்கூட, எல்லோருடைய குறிக்கோளும், இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பது என்கின்ற வகையிலே அமைந்து, மண்டல் குழுவினுடைய பரிந்துரைகளில் இழையோடிக் கொண்டிருக்கிற உண்மை என்ன என்ற அடிப்படையிலே விவாதித்திருக்கிறார்கள்; தீர்மானத்தை ஆதரித்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தை, இந்த அவையிலேயுள்ள எல்லாக் கட்சியினரும், குறிப்பாக, எதிர்க்கட்சியினரைச் சார்ந்தவர்களும் இருந்து, ஆதரித்திருந்தால் நலமாக இருந்திருக்கலாம் அல்லவா என்பதைச் சொல்லாமற் சொல்லி, நம்முடைய திரு. பி.எச். பாண்டியன் அவர்கள், விட்டகுறை-தொட்டகுறை விடாத காரணத்தினால், தன்னுடைய வேதனையை இங்கே வெளிப்படுத்திக் கொண்டார்கள். பிற்படுத்தப் பட்ட மக்களுக்காக நீண்ட நெடுங்காலமாக, நம்முடைய கோரிக்கையாக இருந்துவந்த, மண்டல் குழு பரிந்துரைகளினுடைய நிறைவேற்றம், முதற் கட்டமாக இன்றைக்கு வெற்றி பெற்று, நம்மையெல்லாம் மகிழ்ச்சியிலே ஆழ்த்தியிருக்கிறது. முழுமையாக மண்டல் குழு பரிந்துரைகளையோ, அல்லது மண்டல் குழுவினுடைய பரிந்துரைகளுக்கும் அப்பாற்பட்ட, இன்னும் மேலாகக் கிடைக்க வேண்டிய உரிமைகளையோ, சலுகை களையோ நாம் பெற வேண்டுமென்று வாதாடுவதற்கு ஓர் அடித்தளம் அமைக்கப்பட்டிருக்கிறது என்ற அளவில் இதை வரவேற்றுப் பாராட்ட அனைவரும் கடமைப்பட்டிருக்கிறோம். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தினுடைய தாய் நிலம், இந்தியத் திருநாட்டில் - இந்தத் திருநாட்டின் தென்கோடி முனையான 'தென்னகம்' என்பதும், அதுவும் குறிப்பாக, இந்தத் தமிழ் நிலம் என்பதும் அனைவரும் அறிந்த ஒன்றாகும். இதை, நீதிக்கட்சிக் காலத்தில் ஏறத்தாழ 70 ஆண்டுகளுக்கு முன்பு, இத்தகைய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தேவை என்று குரல் எழுப்பப்பட்ட

பின்னர், 1926-27 என்கிற காலகட்டத்தில், அன்றைய தினம் அமைச்சர் பொறுப்பில் இருந்த திரு. முத்தையா முதலியார் அவர்கள், அரசு ஆணையாகப் பிறப்பித்த அந்தக் காலகட்டத்தின் முதற் படிதான் இன்றைக்கு அது எந்த அளவிற்குத் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் வளர்ந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது, ஒரு 14 அல்லது 15 உத்தியோகங்களில் யார் யாருக்கு எவ்வளவு இடம்: எத்தனை பேருக்கு 4 இடம்; யாருக்கு 3 இடம்; யாருக்கு 2 இடம் என்றெல்லாம் இடங்கள் ஒதுக்கப்பட்டு, அதைக்கூட 'ரொட்டேஷன்' முறையில்தான் வருமென்ற நிலை வகுக்கப்பட்டு இப்படி உருவானதுதான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம். இங்கே நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவரும், மற்றும் உறுப்பினர்களும்கூட, இது ஏதோ காங்கிரஸ்-கழகம் இரண்டுக்குமிடையே உள்ள ஒரு போராட்டம் என்பதுபோல் எண்ணிக் கொண்டு, கருத்துக்களைப் பரிமாற வேண்டிய அவசியம் அந்தத் தரப்பிலே பேசியவர்களாலும், இந்தத் தரப்பிலே பேசியவர்களாலும் இருப்பதை நான் உணராமல் இல்லை. ஆனால், என்னுடைய அருமை நண்பர், காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்களுக்கு, பிற்படுத்தப்பட்டோர் நலனில் எவ்வளவு அக்கறை உள்ளது என்பது எனக்கு மிக நன்றாகத் தெரியும்.

ஆனால், காங்கிரஸ் இயக்கத்தைப் பொறுத்தவரையில், தொடக்கக் காலத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கைக்கு விரோதமாக - மாறாக, கருத்துக்களைச் சொல்லி வந்த இயக்கம் என்பதை வரலாறு கூறுகிறது. அந்தக் காரணத்தினாலேதான், காங்கிரஸ் இயக்கத்தினுடைய பெரும் தளபதியாக தென்னகத்திலே அன்றைக்கு உலா வந்த தந்தை பெரியார் அவர்கள் இரண்டு, மூன்று முறை நீதிக்கட்சி கடைப்பிடிக்கின்ற வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை காங்கிரஸ் கட்சி ஏற்கவேண்டுமென்று காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே வலியுறுத்தி அதை காங்கிரஸ் கட்சி ஏற்றுக் கொள்ளாத காரணத்தினால், காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிலிருந்து, தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் தலைமையிலே நடைபெற்ற மாநாட்டிலிருந்து, காங்கிரஸை விட்டு அவர்கள் வெளியேறினார்கள் என்பதெல்லாம், கடந்த கால சரித்திர உண்மைகள்.

அதற்குப் பிறகு திரு. ஓ.பி. இராமசாமி போன்றவர்களும், பெருந் தலைவர் காமராஜர் போன்றவர்களும், காங்கிரஸ் இயக்கத்திலே பெரும் செல்வாக்கு மிக்க இடங்களைப் பெற்ற அந்தக் காலகட்டத்திலே தந்தை பெரியாருடைய கொள்கைகளை அவர்கள் ஏற்றுக்கொண்டு, அப்படி ஏற்றுக்கொண்ட திரு. ஓ.பி. இராமசாமி ரெட்டியாரைப் பார்த்து இவர் தாடி வைக்காத ராமசாமி என்றெல்லாம் கூட கேலி பேசுகிற, எதிர்த்துப் பேசுகிற அளவுக்கு ஓ.பி. இராமசாமி ரெட்டியார் அவர்களும், பெருந் தலைவர் காமராஜர் அவர்களும் பெரியாருடைய வகுப்புவாரிப் பிரதி நிதித்துவக் கொள்கைகளின் அடிப்படையை ஏற்றுக்கொண்டு பணி யாற்றினார்கள். எனவே, தொடக்க காலத்திலே காங்கிரஸுக்கு உடன் பாடாக அந்த இயக்கத்திலே இல்லாத ஒன்று, அதற்குப் பிறகு காங்கிரஸ்

கட்சியிலே தலை எடுத்த, செல்வாக்குப் பெற்ற தலைவர்களால் ஏற்றுக் கொள்ளப்பெற்று, அப்போதும் அது காங்கிரஸ் கட்சியினுடைய முழு முதல் கொள்கை என்று ஏற்றுக் கொள்ளப்படாமல், அதில் இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட தலைவர்களால் மாத்திரம் போற்றப்படக்கூடியதாக, பாதுகாக்கப்படக்கூடியதாக அந்தக் கொள்கை இருந்தது என்பதை யாரும் மறந்துவிடுவதற்கில்லை.

அண்மையில் கூட அ.தி.மு.க. ஆட்சியில் என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 9,000 ரூபாய் என்று உச்சவரம்பைக் கொண்டு வந்த அந்தக் காலகட்டத்திலே இதை எதிர்க்கிறோம் என்று திராவிட கழகத்தின் சார்பிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் இயக்க ரீதியாக எதிர்ப்புக் காட்டிய போது அன்றைக்கு காங்கிரஸ் கட்சியின் சார்பிலே அதற்கு எதிர்ப்புக் காட்டவில்லை இயக்க ரீதியாக. ஆனால் திண்டிவனம் ராமமூர்த்தி போன்ற நண்பர்கள், ரமணிபாய் போன்றவர்கள், காங்கிரஸ் கட்சி யிலே இருந்தவர்கள், மணிவர்மா போன்றவர்கள் எல்லாம் அன்றைக்கு நாங்கள் நடத்திய கண்டனக் கூட்ட மேடைகளில் வந்து கலந்துகொண்டு 9,000 ரூபாய் உச்சவரம்பு என்று அன்றைக்குக் கொண்டுவரப்பட்டதை எதிர்த்து இருக்கிறார்கள். எனவே காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக, கட்சி ரீதியாக இந்தக் கொள்கை எங்களுடையது என்று கூறி அதை அவர்கள் ஆதரிக்க வராவிட்டாலும்கூட, அதிலே உள்ள தனிப்பட்ட வர்கள், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த தலைவர்கள் அன்றைய தினம் அதற்கு ஏற்பட இருந்த ஊனத்தைப் போக்க, ஆபத்தைத் தடுக்க, அபாயத்திலிருந்து மீட்க அவர்கள் போராடி இருக்கிறார்கள். அதைப் போல்தான் அரசியல் சட்டத்தில் ஒவ்வாத ஒன்று இது என்று அல்லாடி போன்றவர்கள் வாதாடியபோது, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வழங்கப் பட்ட உரிமைகள் எல்லாம் அடிபட்டுப் போகிற நேரத்தில் இதே மன்றத்தில் நான் முதலிலே குறிப்பிட்டதுபோல் கோசல்ராம், ஆர்.வி. சுவாமிநாதன் போன்ற காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள் எல்லாம் இதைச் சட்டமாக ஆக்க வேண்டுமென்று, அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று பேசிய பேச்சுக்கள் எல்லாம் இன்றைக்கும் பதிவேடு களில் ஒளிவிட்டுக்கொண்டிருக்கின்றன.

இப்போதும் நான் சொல்கிறேன். இது ஒரு கட்சியினுடைய கொள்கையாக இல்லாமல் அந்தக் கட்சியிலேயுள்ள பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களால் அன்றைக்குப் பாதுகாக்கப்பட்ட ஒரு கொள்கையாகத் தான் இருந்தது என்பதற்கு இவைகள் எல்லாம் ஆதாரங்கள் ஆகும்.

இன்று இந்தத் தீர்மானத்தினுடைய அடிப்படை அம்சமாக இருக்கின்ற பிரதமர் திரு.வி.பி.சிங் அவர்களுக்குப் பாராட்டு, நன்றி, என்கிற அந்தக் கருத்துக்களைப் பற்றி காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசும்போது அவர்கள் சொன்ன கருத்து ஏதோ நிலைமையை உத்தேசித்து தேவிலால் பிரச்சினைக்காக இதை பிரதமர் திரு. வி.பி.சிங் அவர்கள் அறிவித்திருக்

கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அதற்கு ஆதாரமாக பாரதீய ஜனதா கட்சி இப்படிச் சொல்லி இருக்கிறது என்றும் சுட்டிக்காட்டினார்கள். பாரதீய ஜனதா கட்சிக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையில் வேறுபாடான கருத்து உண்டு என்பதை இந்த அவையிலே உள்ள அனைவரும் மிக நன்றாக அறிவோம். இருந்தாலும் கூட நண்பர் லத்தீப் எடுத்துக் காட்டியதைப் போல தோழமையாக இருந்து ஆதரவு அளித்துக் கொண்டிருக்கிற கட்சியே எதிர்த்தாலும் கூட அதனால் வருகிற விளைவு களைப் பற்றிக் கவலைப்படாமல் பிரதமர் திரு. வி.பி.சிங் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள் என்பதற்காகத்தான் இதை நாம் பாராட்ட வேண்டும். மிகப் பெரும்பான்மையாக இருந்து அதன்காரணமாக அறிவித்தார் என்பது வேறு. சிக்கலான நேரத்திலே கூட இதை அறி விக்கிற துணிவு, அந்த எண்ணம் அவருக்கு இருந்தது என்ற அந்த அளவில் பாராட்டுவதற்கு ஒரு தனிச் சிறப்பே இருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இது தேவிலால் பிரச்சினைக்குப் பிறகு ஏற்பட்டதல்ல. இதை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், திராவிட முன்னேற்றக் கழகமும் தேசிய முன்னணியில் இடம் பெற்றிருக்கின்ற காரணத்தால், இந்த வரலாறு எனக்கு மிகத் தெளிவாக, முழுமையாகத் தெரியும்.

தேசிய முன்னணி, பாராளுமன்றத் தேர்தலில் ஈடுபடுவதற்கு முன்பு, டெல்லியிலே கூடி, தேர்தல் அறிக்கையைத் தயாரித்தபோது, நானும் அந்த அறிக்கையைத் தயாரிக்கின்ற பணியிலே ஈடுபட்டு பங்கு பெற்றேன். அந்த நேரத்தில், தேவிலால் அவர்களும் இருந்துதான் ''இந்த மண்டல் கமிஷன் பரிந்துரையை நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் நிறை வேற்றுவோம்'' என்ற உறுதிமொழி தேர்தல் அறிக்கையில் சேர்க்கப் பட்டது.

சேர்க்கப்பட்டது மாத்திரம் அல்ல, தேவிலால் அவர்கள், தேசிய முன்னணி ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகு, துணைப்பிரதமராகப் பொறுப்பேற்ற பிறகு, மண்டல் கமிஷன் அறிக்கை பற்றி ஆராய்ந்து அறிக்கை தர, எப்படிச் செயல்படுவது என்பது பற்றி அறிந்து அறிக்கை தர, தேவிலால் அவர்களையே தலைவராகக் கொண்ட ஒரு குழுவும் அமைக்கப்பட்டது. இது தேவிலால் பிரச்சினைக்காகத்தான் வந்தது என்றால், தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கையில் மண்டல் குழு பரிந்துரையை நிறைவேற்றுவோம் என்ற உறுதிமொழி ஏற்கெனவே தரப்பட்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. அதிலிருந்தே இது தேவிலால் பிரச்சினைக்காக வந்தது என்ற வாதம் மிகத் தவறானது என்பது தெரிய வரும்.

அது மாத்திரமல்ல, ஒன்றை உங்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். 12.6.90 அன்று பிரதமர் வி.பி.சிங் அவர்கள் மாநில முதலமைச்சர்களுக்கெல்லாம் கடிதம் எழுதுகிறார்கள். அப்போது

தேவிலால் பிரச்சினை வரவில்லை. அந்தப் பிரச்சினை ஆகஸ்டில்தான் வந்தது. கடிதம் ஜூன் மாதத்தில் வந்தது. எல்லா முதலமைச்சர்களுக்கும் எழுதிய கடிதம் அது. எனக்கும் கடிதம் எழுதியிருக்கிறார். அதில்,

"Dear Shri Karunanidhiji,

I am writing to you to-day on issues concerning the vital interest of the Backward Classes in our country. It has been 10 years since the Second Backward Classes Commission headed by Sri Mandal submitted his report. This Commission has made some important recommendations on improving the conditions of the socially and educationally Backward Classes of the country. You would agree that we have to provide special safe-guard for the Backward Classes. Your views on all the issues involved would therefore be of crucial importance to us. As the new Central Government is committed to taking an early decision on the recommendations of the Commission I would be grateful to hear your considered views by the end of this month. This would help us to take an early final decision on implementing the various recommendations of the Mandal Commission."

ஜூன் மாதம் 12-ந் தேதி அவர் கடிதம் எழுதி, மண்டல் கமிஷன் பரிந்துரையை நிறைவேற்றுவதற்கு, பிற்படுத்தப்பட்ட மக்களைக் கை தூக்கிவிடுவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டு, ஜூன் மாதக் கடைசிக்குள்ளாக முதலமைச்சர்களுடைய கருத்துக்களை அறிந்து கொள்ள விரும்பி, அதற்குள்ளாகக் கருத்துக்களை அறிவிக்கச் சொல்கிறார்.

அதைப் போலவே உடனடியாக தமிழக அரசின் சார்பில் அந்த மாத இறுதி வாரத்தில் அவருக்கு நான் கடிதம் எழுதியிருக்கிறேன்.

"Dear Prime-minister,

Thank you for your letter of 12th June calling for our State Government's views on the recommendations of the Mandal Commission. I am enclosing a detailed statement, containing our views on the various recommendations of the Mandal Commission. I would like to high-light a few of the salient points. As you yourself have said we have to provide special safeguard for the Backward Classes. The special safe-guards can only be in the form of Reservation in Government services and Educational Institutions

besides the various concessions for the educational and economic advancement of the Backward Classes. Such safeguards alone can ensure social justice to these disadvantaged communities as envisaged by the founding fathers of our constitution. Regarding the list of Backward Classes to be adopted for the implementation of the concessions recommended by the Mandal Commission I would strongly urge the Government of India to adopt the State Governments' list of Backward Classes with respect to each State. I would like to draw your particular attention to the strong recommendation of the Mandal Commission that all developmental programmes specially designed for the Backward Classes should be financed by the Central Government in the same manner and to the same extent as is being done in the case of Scheduled Castes and Scheduled Tribes. I would like to add that the urgency for the implementation of the Mandal Commission's recommendations cannot be over-emphasised and all of us look forward to your early decision on this subject which will open a new era for the Backward Classes under your dynamic leadership."

இது ஜூன் மாதத்திலே நடைபெற்ற கடிதப் போக்குவரத்து. எனவே, தேவிலால் பிரச்சினைக்கும் இதற்கும் துளியும் சம்பந்தமில்லை. அது மாத்திரமல்ல, தேவிலால் பிரச்சினையோடு சம்பந்தமுடையது என்று எண்ணுகின்றவர் ஒரு விளக்கத்தைப் பெற வேண்டும். நாம் வகுத்துக் கொண்டிருக்கிற அல்லது வகுக்கப்பட்டதாய் ஏற்றுக்கொண்டிருக்கிற ஜாதி முறைப்படி, தேவிலால் அவர்கள் ஜாட் வகுப்பைச் சார்ந்தவர்கள். ஜாட் வகுப்பு, பிற்பட்ட அல்லது பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள வகுப்பு அல்ல. எனவே, அந்த வகுப்பை தன்வயப்படுத்த வேண்டு மென்று தந்திரமாக திரு. வி.பி.சிங் அதை அறிவித்தார் என்று யாராவது எண்ணி சொல்வார்களேயானால் அது தவறு.பெரும்பாலான எண்ணிக்கை கொண்ட, ஜாட் வகுப்பு இதுவரையில், (நாளைக்கு சேர்க்கப்படலாம், அது வேறு விவகாரம்) இதுவரை அந்த வகுப்பு பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெறாத வகுப்பு என்பதையும் நான் இங்கே தெரி வித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் அலகாபாத் நகருக்கு நான் சென்றது 1975-ஆம் ஆண்டு என்று சொன்னார். அல்ல, 1973-ஆம் ஆண்டு. மேலும் அங்கே பேசியது என்பது அல்ல. அதற்கு முன்பே திராவிட இயக்கத்தின் சார்பாக, தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள், இவர்கள் எல்லாம் எடுத்து வைத்த

கருத்து மாநில அளவிலே இருக்கின்ற இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இந்திய நாட்டின் அளவிலேயும் பரவிட வேண்டும் என்பதாகும்.

அந்தக் கருத்தைத்தான், பிற்படுத்தப்பட்டோர் மாநாடு அலகாபாத்தில் 1973-ஆம் ஆண்டு நடைபெற்றபொழுது, அன்றைக்கு முதல்வராக ஆட்சிப் பொறுப்பிலிருந்த நான் அழைக்கப்பட்டு, அந்த மாநாட்டில் நான் பேசியபோது, மத்திய அரசுப் பொறுப்புகளிலும், அரசு சார்புடைய பொது நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்க வேண்டுமென்று அறிவித்தேன். அந்த மாநாட்டிலே அதுபோல ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து நாம் வலியுறுத்திக் கொண்டு வந்த காரணத்தினால், 1978-ஆம் ஆண்டு இந்தியப் பிரதமராக ஜனதா கட்சியின் சார்பில் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தபோது 20.12.1978 அன்று, மண்டல் கமிஷன் நியமிக்கப்படும் என்கின்ற அறிக்கை வெளிவந்து, அது நியமிக்கப்பட்டது. அதற்குப் பிறகு அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு, அந்தப் பணி முடிவடைந்தபோது திரு. மொரார்ஜி தேசாய் பதவியில் இல்லை. அது அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பிரதமராக ஆட்சிப் பொறுப்புக்கு வந்த காலம். 31.12.1980 அன்று, அன்னை இந்திரா காந்தி அவர்களிடத்திலேயே அந்த அறிக்கை வழங்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டிலே வழங்கப்பட்ட அந்த அறிக்கை 30.4.1982 அன்று, அதாவது இரண்டு ஆண்டுகள் கழித்துத்தான் 1982-ல் பாராளுமன்றத்தில் வைக்கப்பட்டது. எனவே, ஒரு பத்தாண்டுக் காலம் அந்த அறிக்கையைப் பற்றி எந்தவிதமான சாதகமான பதிலும் நமக்குக் கிடைக்கவில்லை.

இதே மாமன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழக அரசு மீண்டும் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, 1989 ஆம் ஆண்டு மே மாதம் மண்டல் குழுவினுடைய பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டுமென்ற தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றி மத்திய அரசுக்கு, பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்கு அனுப்பி வைத்தோம். அதற்கு அவர்கள் கொடுத்த பதில் ''நீங்கள் அனுப்பிய தீர்மானம் கிடைக்கப்பெற்றோம்'' என்றுதான் வந்ததே தவிர, அதைப்பற்றிய வேறு எந்தக் கருத்தும் நமக்குப் பதிலாக வரவில்லை. உண்டு, இல்லை என்று வரவில்லை. அதற்கு முன்பு கூட, 1988 ஆம் ஆண்டிலே கூட மண்டல் குழு பற்றித் தமிழக அரசின் சார்பாக ஒரு கடிதம் எழுதப்பட்டபோது, அதற்கு திரு. ராஜீவ் காந்தி அவர்களுடைய அரசின் சார்பில் அனுப்பப்பட்ட பதிலில் ஸ்டேஸ்கோ இப்பொழுது உள்ள நிலைமை நீடிக்கட்டும், பிறகு பார்க்கலாம் என்றுதான் அப்போதும் பதில் வந்திருக்கிறது. எனவேதான் ஒரு பத்தாண்டுக் காலத்திற்குப் பிறகு, அது கிடப்பிலே போடப்பட்டதோ அல்லது அவர்கள் சொன்னது போல ஆராயப்பட்டதோ எனக்குத் தெரியாது. எனவே பத்தாண்டுக் காலம் மண்டல் குழுவின் பரிந்துரைகள்

இந்தப் பயணத்திலே, பிற்படுத்தப்பட்ட மக்களை முன்னேற்றுகின்ற பயணத்திலே ஒரு அடிகூட எடுத்து வைக்கவில்லை. நான் எண்ணிப் பார்க்கிறேன், 1982-ஆம் ஆண்டிலேயே இந்தப் பரிந்துரை வந்திருக்கு மானால் இன்றையதினம் நாம் எத்தனை பிற்படுத்தப்பட்ட மக்களை மத்திய அரசு அலுவலகங்களில் பெரிய பணிகளிலே பார்த்துக் களித் திருக்க முடியும்என்று! எனவே ஒரு பத்தாண்டுக் காலத்தை இந்திய நாட்டு வரலாற்றிலே பிற்படுத்தப்பட்ட மக்கள் எப்படியோ இழந்து விட்டார்கள் என்பதைத்தான் நாம் எண்ண வேண்டியிருக்கிறது. இதைத்தான் இங்கே நண்பர் திரு. வல்லரசு அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

மண்டல் குழு தன்னுடைய அறிக்கையைத் தயாரித்து வழங்கியபோது, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய நிலை, மத்தியிலே எப்படி இருக்கிறது என்பதை விளக்கி இருக்கிறது. அதை நான் புள்ளிவிவரத்தோடு இங்கே சொல்லுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். மத்திய அரசுத் துறையிலும், தொடர்புடைய மற்ற துறைகளிலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு எவ்வளவு இடம் இருந்தது என்பதற்கான புள்ளிவிவரங்கள், மண்டல் வழங்கிய புள்ளிவிவரங்கள் இது.

பாதுகாப்புத் துறையில் கிளாஸ்-1, அதிலே உள்ள அதிகாரிகள் பதவி - மொத்த அலுவலர்கள் - 1,379 பேர். அதிலே தாழ்த்தப் பட்டவர்கள் 48 பேர். ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். பிற் படுத்தப்பட்ட மக்களுக்கு விகிதாச்சாரம் இல்லாவிட்டாலும், தாழ்த்தப் பட்ட மக்களுக்கு 22.5 சதவிகிதம் உண்டு. 15 சதவிகிதம் தாழ்த்தப் பட்டவர்களுக்கு; 7.5 சதவிகிதம் மலைவாழ் பழங்குடி மக்களுக்கு. இரண்டும் இணைந்து 22.5 சதவிகிதம். அந்த 22.5 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு பாதுகாப்புத் துறையிலே என்றால், கிரேட்-1 அலுவலர் பதவியிலே அவர்களுக்கு விகிதாச்சாரப்படி, உரிமைப்படி கிடைக்க வேண்டியது 310 இடம். ஆனால் அவ்வாறு தாழ்த்தப்பட்டவர் களுக்குக் கிடைக்கவில்லை. கிடைத்த இடமே 48தான். மொத்தம் 1,379-ல் தாழ்த்தப்பட்டோருக்கு 48 இடம், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 9 இடம். இன்று 27 சதவிகிதம் தரப்பட்டிருக்கிறதே, இதன்படி ஏற்கெனவே தரப்பட்டிருந்தால் அவர்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய இடம் 372. பிற்படுத்தப்பட்டவர்களுக்குக் கிடைத்திருக்க வேண்டிய 372 இடங்களுக்குப் பதிலாக பாதுகாப்புத் துறையிலே 9 இடங்கள்தான் கிடைத்திருக்கின்றன. ஏனைய உயர் வகுப்பாருக்கு 1,322 இடங்கள் கிடைத்திருக்கின்றன. பாதுகாப்புத் துறையில் கிளாஸ்-2 அதிகாரிகள் பதவியில் மொத்த அலுவலர்கள் எண்ணிக்கை 7,752. இதிலே தாழ்த்தப்பட்டவர்கள் 803, பிற்படுத்தப்பட்டவர்கள் 187. உயர் வகுப்பினர் 6,762. கிளாஸ்-3, கிளாஸ்-4, இதிலே உள்ள அலுவலர்கள், பாதுகாப்புத் துறையில் - மொத்த அலுவலர்கள்-2,127. இதில் தாழ்த்தப்பட்டவர்கள் 604,

பிற்படுத்தப்பட்டவர்கள் 131. இன்று அறிவித்துள்ள 27 சதவிகிதம் கிடைக்குமேயானால் 574 பேர் அங்கே இடம் பெற முடியும். பாது காப்புத் துறையிலே அனைத்துத் தர அதிகாரிகள் மொத்தமாகச் சேர்த்துப் பார்த்தால், மொத்த அலுவலர்கள் 11,258 பேர். இதிலே உயர்சாதிக் காரர்கள் 10,476 பேர்; பிற்படுத்தப்பட்டவர்கள் 327 பேர்; தாழ்த்தப் பட்டவர்கள் 1,455 பேர்.

நிதித் துறையில் கிளாஸ்-1 அதிகாரிகள் மொத்தம் 1,008 பேர். இதிலே தாழ்த்தப்பட்டவர்கள் 66 பேர், உயர்சாதிக்காரர்கள் 941 பேர். பிற்படுத்தப்பட்டவர்கள் 1. ஒன்றே ஒன்று, கண்ணே கண்ணு என்பார் களே அதைப்போல 1,008 கிளாஸ்-1 அதிகாரிகள் உள்ள நிதித் துறையிலே உயர் வகுப்பார் 941, பிற்பட்டவர்கள் ஒன்றே ஒன்று.

நிதித் துறையிலே கிளாஸ்-2 அதிகாரிகள் மொத்தம் 2,824. அதிலே உயர் சாதிக்காரர்கள் 2,507 பேர், தாழ்த்தப்பட்டோர் 306, பிற்படுத்தப் பட்டோர் 11. நிதித் துறையிலே கிளாஸ்-3, கிளாஸ்-4 மொத்தம் 821 பேர். அதிலே தாழ்த்தப்பட்டோர் 202; உயர் சாதிக்காரர்கள் 606; பிற்படுத்தப்பட்டோர் 13 பேர். செய்தித் துறையில் மொத்தப் பணி யாளர்கள் 16,505. அதில் உயர் வகுப்பார் 11,498 பேர், தாழ்த்தப் பட்டவர் 3,660, பிற்படுத்தப்பட்டவர் 1,347. திட்டத் துறை மொத்தப் பணியாளர்கள் 6,917 பேர். அதிலே உயர் வகுப்பார் 4,582 பேர். தாழ்த்தப்பட்டவர் 977 பேர், பிற்படுத்தப்பட்டவர் 358 பேர். சுற்றுலா மற்றும் விமானப் போக்குவரத்துத் துறையில் மொத்தப் பணியாளர்கள் 9,185 பேர். அதிலே உயர் சாதிக்காரர்கள் 6,463 பேர், தாழ்த்தப் பட்டவர்கள் 2,181, பிற்படுத்தப்பட்டவர்கள் 541. குடியரசுத் தலைவர் அலுவலகத்தில் மொத்தப் பணியாளர்கள் 307. தாழ்த்தப்பட்டவர் 47 பேர், உயர் சாதிக்காரர்கள் 260, பிற்படுத்தப்பட்டவர் இல்லை.

இது, மண்டல் இந்த அறிக்கையைத் தயாரித்து இந்தப் பரிந்துரை வழங்கிய பொழுது அவர் அளித்த புள்ளி விவரம். இதற்குப் பிறகும் ஒரு சமூக நீதிக்காக நாம் போராடுவது எவ்வளவு நியாயமானது என்பதை நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றே கருதுகின்றேன். எனவே தான் இன்றைக்குக் கிடைத்து இருக்கின்ற இந்த சமூக நீதி, தமிழக வரலாற்றிலே ஏற்கெனவே கிடைத்த ஒன்று என்றாலும் கூட அது இன்றைக்குப் பெருகிப் பல்கி வளர்ந்து கொண்டிருக்கிறது என்றாலும் கூட, இந்தியத் திருநாட்டிலே ஒரு பெரிய சரித்திரத் திருப்பத்தை, ஒரு புதிய சகாப்தத்தை இன்றைக்கு உருவாக்கி இருக்கிறது. அதனால்தான் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள் 7-ஆம் தேதி இதை அறிவித்து விட்டு, ஆகஸ்ட் 9-ஆம் தேதி அதைப் பற்றிப் பேசும்பொழுது,

"In fact this is the realisation of the dream of Bharath Ratna Dr. Ambedkar, of the great Periyar Ramasami and Dr. Ram Manohar Lohia. It has been the aspiration of a very large section of people who in the present system are condemned to social inequity since their very birth to their last breath and whatever they may do, whatever their performance, whatever their merit, they are unable to break the shackles throughout their life."

என்கின்ற முன்னுரையோடு அவருடைய பேச்சைத் தொடங்கி இந்த மண்டல் குழுவினுடைய பரிந்துரையை நிறைவேற்ற வேண்டிய அவசியம் ஏன் தனக்கு ஏற்பட்டது என்பதையெல்லாம் எடுத்துக்காட்டி இருக்கின் றார். அவர் இதை அறிவித்ததிலேயே எவ்வளவு மகிழ்ச்சி அடைந்து இருக்கிறார் என்பதை அவர் பயன்படுத்தி உள்ள வார்த்தைகளை எல்லாம் பார்க்கும்பொழுது மிக நன்றாக, தெளிவாக நமக்குப் புரி கின்றது. சொல்லப்படுகின்ற குறை இது. கல்விச் சாலைகளுக்கும் அங்கே கிடைக்கின்ற வாய்ப்புகளுக்கும் இதிலே இடம் இல்லை. சிறுபான்மை மக்களுக்கு இன்னும் ஏதாவது செய்ய வேண்டும் என்பது போன்ற சில கருத்துக்களைத் தரன் அவர் குறிப்பிட்டு இருக்கிறார். இது முதல் கட்டம் என்று குறிப்பிட்டு இருக்கிறார். முதல் கட்டமாக இதை அறிவித்து இருக்கின்றோம். அடுத்தடுத்து மேலும் மேலும் வளரக்கூடிய பல்வேறு யோசனைகளை, கருத்துக்களை எல்லாம் எடுத்துக்கொண்டு அதை விஸ் தரிக்க முடியும், விரிவாக்க முடியும் என்ற கருத்தோடு தான் அவைகளை எல்லாம் எடுத்துக்காட்டி இருக்கின்றார்.

பொருளாதார அடிப்படை வேண்டும் என்று சொல்கின்றார்கள். இதுவரையிலே போராடியது எல்லாம் பொருளாதார அடிப்படை கூடாது; சமூக ரீதியாக, கல்வி ரீதியாகப் பின்தங்கிய மக்கள் என்று தான் இருக்க வேண்டும் என்றுதான் ஓர் எழுச்சி 1952-ஆம் ஆண்டு ஏற் பட்டது. அன்றைக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்துக்குக் குழி தோண்டப்பட்டபொழுது தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் தமிழகத்திலே அன்றைக்குத் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என்று இருந்தாலும்கூட இந்தக் கொள்கை யிலே ஒன்றுபட்டு நின்று, தமிழகத்தில் அன்றைக்கு ஒரு பெரும் புயல் வீசியபொழுது தான், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் முதன் முதலாக அரசியல் சட்டத்தில் முதல் திருத்தத்தைக் கொண்டுவந்தார்கள். அந்த முதல் திருத்தத்தைக் கொண்டுவரும்பொழுது அவர்கள் குறிப் பிட்டார்கள். அதற்கு முன்பு கூட எனக்குத் தெரியும், நான் படித்து இருக்கின்றேன். ஒ.பி. இராமசாமி போன்றவர்கள் நேரு அவர்களிடத்

திலே அணுகி பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சமூக ரீதியாக, கல்வி ரீதியாக பின்தங்கிய மக்கள் என்று அறிவிக்க வேண்டும் என்று சொன்ன பொழுது எல்லாம், நேரு அவர்கள் மிகக் கடுமையாகப் பதில் சொன்னார் என்பதும், அதன் காரணமாக ஓ.பி. இராமசாமி அவர்கள் பதவியையே ராஜினாமா செய்யத் தயாராக இருந்தார் என்பதும் வரலாறு ஆகும்.

ஆனால் தமிழ்நாட்டிலே இப்படிப்பட்ட பெரிய கிளர்ச்சி ஏற்பட்ட பிறகு அந்தக் கிளர்ச்சியைப் பற்றி பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்—

> "You know what was the immediate cause for bringing the first amendment to the Constitution. You all know that there are certain happenings in Madras State which led us to make this amendment."

என்று சொல்லிவிட்டுத்தான் அந்தத் திருத்தத்தை, பண்டித ஜவஹர்லால் நேரு கொண்டு வந்திருக்கிறார். அப்படிக் கொண்டு வருகிறபோது குறிப்பிடுகிறார். இப்போது சில பத்திரிகைகளிலே - இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே கட்டம் கட்டிப் போடுகிறார்கள், ஜவஹர்லால் நேரு அப்போது பொருளாதார அடிப்படையை ஒத்துக்கொள்ளவில்லை என்று. இவையெல்லாம் நேரு இந்தத் திருத்தம் கொண்டு வருவதற்கு முன்பே சொன்னது. ஆனால் திருத்தம் கொண்டுவரும் போது பண்டித நேரு என்ன சொன்னார்? 'பொருளாதார அடிப்படை என்று அமைத்து விட்டால், பொருளாதார நிலை என்பது நிரந்தரமானது அல்ல. ஒருவன் இந்த ஆண்டு பணக்காரனாக இருப்பான். அடுத்த ஆண்டு அவனுக்கு வருமானம் இல்லாமல் போய்விடும். அடுத்த ஆண்டு வருமானம் வரக் கூடும். எனவே பொருளாதார அடிப்படை என்று போடக் கூடாது' என்பதுதான் நேரு அவர்கள் அன்றைக்கு அளித்த தெளிவான பதிலாகும். எனவேதான் நம்முடைய தமிழகத்திலே கூட இதுவரையிலே நாம் சோஷியலி, எஜுகேஷனலி பேக்வர்ட் என்று சொன்னாலுங்கூட 'சோஷியலி' என்பதைத்தான் அதிகமாக வலியுறுத்தி, அந்தச் சமுதாய மக்களுக்கு இட ஒதுக்கீடுகளைச் செய்து வந்திருக்கிறோம்.

இங்கே நம்முடைய நண்பர் சுந்தரதாஸ் குறிப்பிட்டதைப் போல, மற்ற நண்பர்கள் குறிப்பிட்டதைப் போல படித்த வீட்டுப் பிள்ளைகள்தான் மேலும் பட்டதாரிகளாக வருகிறார்கள், எனவே அதுவே ஒரு தனி சமுதாயமாக ஆகிவிடுகிறது. பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் என்ற சொற்றொடர் களைப் பயன்படுத்திக் கொண்டு, வளர்ந்தவர்களே வளர்கிறார்கள், படித்தவர்களே மேலும் படிக்கிறார்கள். கிராமப்புறத்தில் உள்ள படிக்காத வீட்டுப் பிள்ளைகள் படிக்காதவர்களாகவே இருக்கிறார்கள் என்ற இந்தக் குறையைக் களைவதற்காக இந்த ஆண்டு நம்முடைய அரசு 5 மதிப்பெண்கள் தருகிறது. திரு. பாண்டியன் சொன்னதைப் போல இலவசமாகத் தருவதல்ல. அவன் 270 மதிப்பெண்கள் வாங்கினால், அதற்குப் பிறகு தருவதுதான் இந்த 5 மதிப்பெண்கள். திடீரென்று 270

மதிப்பெண்கள் தருகிறேன் என்று யாருக்கும் தருவதில்லை. அந்த 5 மதிப்பெண் தருகிற நேரத்தில் நல்ல மார்க் எடுத்தவன் கெடுக்கப்படு கிறான் அல்லது பாதிக்கப்படுகிறான் என்று சொல்லுகிறார்கள். அப்படிப் பாதிக்கப்படுகிறவர்கள் பட்டதாரி குடும்பத்திலிருந்து வந்தவர் களாகத்தான் இருக்க முடியும். முதன் முதலாக ஒரு குடும்பத்திலிருந்து வருகிற பட்டதாரி என்று எடுத்துக்கொள்ளும்போது, அவன், உள்ள படியே பட்டதாரியாக அந்தக் குடும்பம் இல்லாததற்கு முழுமுதற் காரண மாக இருப்பது வறுமையாகத்தான் இருக்க முடியும். அப்படி வறுமை நிலைமையிலே இருக்கிற காரணத்தினால்தான் அங்கே பட்டதாரிகள் உருவாகவில்லை. அப்படி உருவாகாத குடும்பத்திலிருந்து பட்டதாரி வர வேண்டும் என்பதற்காகத்தான் 5 மதிப்பெண்கள் அதிகமாகத் தருவது என்று இந்த ஆண்டு அறிவிக்கப்பட்டு, அது நல்ல முறையிலே செயல் பட்டிருக்கிறது. இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகுதான், இந்த ஆண்டி லிருந்துதான் செயல்படுகிறது.

நம்முடைய திரு. குமரி அனந்தன் எடுத்துக் காட்டியதைப் போல, பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் 1957-ஆம் ஆண்டு பிற்பட்ட சமுதாயத்திலே, மிகவும் பிற்பட்ட சமுதாய மக்கள் என்ற பட்டியல் தயாரித்து இந்த அவையிலே வைத்தார்கள். நான் அந்த இடத்திலே உட்கார்ந்து படித்துப் பார்த்திருக்கிறேன். அப்படி வைக்கப்பட்ட அறிக்கை சலுகைகளுக்காகத்தான், உரிமைகளுக்காக அல்ல. ஒன்லி ஃபார் கன் செஷன். கன்செஷன் வேறு, ரிசர்வேஷன் வேறு. அதாவது இலவசக் கல்வியைப் பெற, கல்வியிலே ஊக்கம் அளிக்க, இப்படிப்பட்ட காரியங் களுக்காக மிகவும் பிற்பட்டோர் என்ற பட்டியல் அன்றைக்கு உருவாக்கப் பட்டது. மிகவும் பிற்பட்டோருக்கு இட ஒதுக்கீடு வேண்டுமென்ற கிளர்ச்சி மதிக்கப்பட்டு, கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடனே 20 சதவீதம் மிகவும் பிற்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்டது. அந்த மிகவும் பிற்பட்ட வர்களில் வன்னியர்கள், முக்குலத்தோர் அதாவது சீர்மரபினர் என்ற இரண்டு பெரும் சமூகத்தினர் மற்றும் பல சிறுசிறு சமூகத்தினர் இணைக்கப் பட்டு அந்த 20 சதவீதம் என்பதை இன்றைக்கு நல்ல முழுப் பயனோடு வெற்றிகரமாக அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு, மேலும் ஒரு துணையாக, அவர்களை கை தூக்கிவிடத்தான் ஒரு குடும்பத்தில் பெற்றோர்கள் அல்லது உடன்பிறப்புகள் பட்டதாரியாக இல்லாவிட்டால் அவர்களுக்கு ஐந்து மதிப்பெண்கள் அதிகமாகத் தரவேண்டும் என்று அறிவித்ததன் காரணமாக, நான் இங்கே பெருமையோடு, மகிழ்ச்சி யோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இதுவரையிலே வந்துள்ள பட்டியல்படி பொறியியல் கல்லூரியில் 3,876 பேர் இப்போது சேர்ந்திருக்கிறார்கள். அதிலே 504 பேர் இந்த ஐந்து மார்க்கால் பயன்பெற்று இன்றைக்கு பொறியியல் கல்லூரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். மருத்துவக் கல்லூரியில் இதுவரையில் வந்துள்ள பட்டியலின்படி மொத்தம் 957 பேர்களில் 212 பேர்கள் இந்த ஐந்து மதிப்பெண்ணால் இன்றைக்கு இடம் பெற்றிருக்கிறார்கள்.

கால்நடை பட்டப் படிப்பில் 268 மொத்தம். அதிலே 105 பேர் இந்த ஐந்து மார்க்கால் பயன்பெற்று வந்திருக்கிறார்கள். சட்டக் கல்லூரியில் 1,348 பேர்கள். மூன்றாண்டு பட்டப்படிப்பில் 492-க்கு இந்த் ஐந்து மார்க்கினால் பலன் பெற்றவர்கள் 309 பேர். ஐந்தாண்டுப் படிப்பிலே 438 பேருக்கு இந்த ஐந்து மார்க்கினால் பலன் பெற்றவர்கள் 232 பேர். மாலைக் கல்லூரியில் 418-க்கு இந்த ஐந்து மார்க்கினால் பலன் பெற்ற வர்கள் 212 பேர். மொத்தம் 1,348 பேர்களுக்கு 753 பேர் இந்த ஐந்து மதிப்பெண்களால் பலன் பெற்றிருக்கிறார்கள். வேளாண்மைக் கல்லூரியில் 388 பேர் மொத்தம். அதிலே இந்த ஐந்து மதிப்பெண்களால் பலன் பெற்றவர்கள் 246 பேர். இவர்கள் எல்லாம் பட்டணக் கரையிலிருந்து வந்தவர்கள் அல்ல. காடோரங்களிலிருந்து, பட்டி தொட்டிகளிலிருந்து, குக்கிராமங்களிலிருந்து, நமக்கே பெயர் விளங்காத பல ஊர்களிலிருந்து வந்துள்ள கிராமப்புறத்து இளைஞர்கள் இந்தப் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறார்கள் என்று எண்ணுகிறபோது, இதை இலவசம் என்று சொல்லி நாம் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. இது இலவசம் அல்ல. நமக்கெல்லாம் அள்ளி அள்ளி வழங்குகிற பரவசம் இது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (கர ஒலி).

**திரு. பி.எச். பாண்டியன்:** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய கருத்தாக மீண்டும் சொல்கிறேன். கருத்தாகத் தான் சொல்கிறேன். எதிர்க்கவில்லை. எதிர்ப்பு என்பது வேறு, கருத்து என்பது வேறு. இன்றைக்குச் சாதாரணமாக ஒரு அரசு அலுவலகத்தில் பியூனாக இருப்பவன் கூட, பட்டம் பெற்று விடுகிறான். நாம் திறந்த வெளிப் பல்கலைக் கழகங்களையெல்லாம் திறந்து வைத்திருக்கிறோம். ஒருபக்கம் எல்லோரையும் பட்டம் பெறலாம் என்று சொல்லிவிட்டு இன்னொரு பக்கம் பட்டத்தைப் பெற்றால் ஐந்து மார்க் உன்னுடைய குழந்தைக்குக் குறையும் என்று சொல்வோமானால் முரணாக வருவதைப் போலத் தெரிகிறது.

**மாண்புமிகு முதல்வர் கலைஞர்:** தலைவர் அவர்களே, ஐந்து மார்க் குறைக்கப்படும் என்று சொல்லவில்லை. ஐந்து மார்க் அதிகப்படுத்தப் படும் என்று சொல்லி அவர்களுக்கு ஊக்கத்தைத் தருகிறோம். பட்ட தாரிகள் இருக்கிற வீடுகளிலிருந்து இன்னொரு பட்டதாரி வர வேண்டாம் என்பதல்ல. அதையும் மீறி வருகிறார்கள். நான் இங்கே படித்த இந்தப் பட்டியலில் 2,000 பேருக்கு 500 பேர் வந்திருக்கிறார்கள் என்றால், மிச்சம் 1,500 பேர்கள் பட்டதாரிகள் வீடுகளிலிருந்து வந்தவர்கள் தான். எனவே, பட்டதாரிகளே இல்லாத கிராமத்து விவசாயிகள் வீட்டிலிருந்து ஒருவன் பட்டதாரியாக வரவேண்டும் என்பதற்காகச் செய்யப்பட்ட புரட்சிகரமான மாற்றம் இது. இதைக்கூட அகில இந்திய அளவிலே தேசிய முன்னணி அரசு ஏற்றுக்கொண்டு நடைமுறைப் படுத்தப்படுமானால் பொருளாதாரத்தைப் பற்றிப் பேசுகிற இந்தப் பிரச்சினை கூட இல்லாமல் போய் விடும் என்றே கருதுகிறேன்.

இப்போதுதான் உண்மையிலேயே 'சோஷியலி' என்ற அளவோடு நின்ற இந்தப் பிரச்சினை 'எஜுகேஷனலி பேக்வேர்டிற்கும்' இது கிடைத்து இருக்கிறது. அதை நாம் செய்திருக்கிறோம். தமிழ்நாட்டிலே, இந்தியாவி னுடைய தென்கோடி முனையிலே உருவாகிற கருத்துக்களை இன்று அகில இந்தியாவும் ஏற்றுக்கொள்கிற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்படித்தான் நபிகள் நாயகம் விழாவிற்கு நாம்தான் விடுமுறை விட்டோம். இன்றைக்கு அகில இந்திய அளவில் நபிகள் நாயகம் விழா விற்கு விடுமுறை என்று திரு.வி.பி.சிங் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். மே தின விழாவிற்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறை என்று நாம் தான் விட்டோம். இன்றைக்கு அகில இந்திய அளவில் மே தின விழாவிற்குச் சம்பளத்துடன் கூடிய விடுமுறை என்று தேசிய முன்னணி அரசின் தலைவர் திரு.வி.பி.சிங் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். திரு.வி.பி.சிங் காங்கிரசில் இருந்தபோது என்ன செய்தார் என்று கேட்டார்கள். காங்கிரசில் இருந்த காரணத்தால் செய்யவில்லை. தேசிய முன்னணி அரசை உருவாக்கிய காரணத்தால் செய்தார் என்பதைத் தான் அதற்குப் பதிலாக அளிக்க முடியும் என்று கூறி, எவ்வளவு மாறுபட்ட கருத்துக்கள், வேகமான பேச்சுகள், விறுவிறுப்பான பேச்சுகள் இருந்தாலும் கூட அனைவரும் ஒருமுகமாக இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, அதிலும் குறிப்பாக காங்கிரஸ் கட்சியின் சார்பில் நம்முடைய சுந்தரதாஸ் போன்றவர்கள் எனக்கும் நன்றி தெரிவித்ததற்காக அவர்களுக்கெல்லாம் நன்றி தெரிவித்துக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து ஆதரித்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர், நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர், நண்பர் பாண்டியன், நம்முடைய லத்தீப் அவர்கள், நம்முடைய வல்லரசு அவர்கள், மற்று முள்ள நண்பர்கள், ஆளும் கட்சி சார்பில் ஆதரித்துப் பேசிய இரகுமான்கான் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய நண்பர் பூவராகன் அவர்கள் இதை ஆதரிக்க எப்போதுமே கடமைப்பட்டவர். நல்லவேளையாக இன்றைக்கு இது போதவில்லை என்று அவர் சொல்லவில்லை. தேசிய முன்னணி அரசு கொண்டு வந்த காரணத்தால் இது போதவில்லை என்று சொல்லவில்லை. இல்லா விட்டால் இதுவும் போதவில்லை என்று சொல்வார். இருந்தாலும் அனைவரும் மனநிறைவு அடையத்தக்க அளவுக்கு ஓர் அருமையான தீர்மானத்தை இங்கே நாம் வழி மொழிந்திருக்கிறோம். நான் முன்மொழிந்த தீர்மானத்தை வழிமொழிந்த அத்தனைபேருக்கும் நன்றி கூறி, இதை ஒருமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன், வணக்கம்.

**வெளியீடு :**

**இயக்குநர்,**
**செய்தி-மக்கள் தொடர்புத்துறை,**
**தமிழ்நாடு அரசு.**

தமிழரசு அச்சகம்.

# தமிழரசு

1-9-1990

இதழின்

# இலவச இணைப்பு